வெளியீடு 30-7-84] [Issued 30-7-84

2758

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1984 பிப்ரவரி 23-தொகுதி LVIII எண் 2

Thursday 23rd February 1984 - Volume LVIII No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை - 600 009
Legislative Assembly Department, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

உள்ளடக்கம்.

23—2—1984.

பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 305—346

2 ஒழுங்குப் பிரச்சினை—

அவையை ஒத்தி வைக்கும் முன், அவையின் கருத்து அறிதல். .. .. 346—348

3 தகவல் கோரல்—

அவை நிகழ்ச்சி தொலைக் காட்சியில் தவறாக ஒலிபரப்பப் பெற்றது. .. .. 348

4 உரிமைப் பிரச்சினை—

'தினமலர் மீது' .. .. .. 349—356

5 கவன ஈர்ப்பு—

பெரியார் மாவட்டத்தில் பல்லாயிரம் ஏக்கரா நெற் பயிர் பூச்சிதாக்கப் பெற்று பாதிக்கப் பெற்றுள்ளது. .. .. .. 356—359

6 அரசினர் தீர்மானம்—

(அ) விதி 32 (1) ஐ அரசு அலுவலுக்கென தளர்த்தல். .. .. .. 359

(ஆ) விதி 30 (3) இன் கீழ் அலுவல் வரிசை மாற்றம். .. .. .. 360

பக்கங்கள்.

7 அரசினர் சட்ட முன்வடிவுகள்.—

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப் படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984— (தொடர்ச்சி). .. .. .. 360—401

(ஆ) திரைப் படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984. .. 401—417

8 அறிவிப்பு—

பேரவை அலுவல் .. .. .. .. 401

9 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 417—418

136219

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, பிப்ரவரி 23, வியாழக்கிழமை.

மாசி 11, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.''

உருண்டு செல்லத்தக்க பெரிய தேருக்கு அதன் அச்சில் இருந்து அதனைத் தாங்கும் சிறிய ஆணியைப் போன்ற திண்ணியாரைப் இவ்வுலகம் பெற்றிருக்கின்றது. எனவே, வடிவால் சிறியவரைக் கண்டு இகழ வேண்டாம்.

## 1 வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 135, 136 இரண்டும் சேர்த்து எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பாமோலின் எண்ணெய்

135—

(*வினா எண் 12216—)திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமையல் எண்ணையான பாம் ஆயில் தமிழகத்திற்கு மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கியுள்ளது ?

(ஆ) கோட்டாவை எவ்வளவு உயர்த்துமாறு மாநில அரசு கோரியுள்ளது ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பாமோலின் எண்ணெய் ஒதுக்கீடு ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் தொடங்கி அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் முடிவடையும். 1980–81, 1981–82, 1982–83 எண்ணெய் ஆண்டுகளில் முறையே 43,400, 42,491, 55,530 மெ. டன்களும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ஒரு முறை ஒரு கிலோ ரவீதம் வழங்க மாத ஒதுக்கீட்டினை 12,500 மெ. டன்களாக உயர்த்துமாறு இவ்வரசு மத்திய அர சினைக் கோரியுள்ளது.

(இ) எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகமாக உள்ள காலமான நவம்பர் முதல் மார்ச் வரையிலான காலத்தில் குறை வாகவும் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை அதிகமாகவும் பாமோ லின் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது என மைய அரசு பதில் அனுப்பியுள்ளது. இந்த எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

136—

(*வினா எண் 15590) —திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சமையல் எண்ணெய் பற்றாக்குறையைப் போக்க தமிழக அரசிடம் ஏதாவது புதிய திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசால் இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் (பாமோலின்) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படு கிறது. மத்திய அரசின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சமையல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கி அதிக எண்ணெய் உற்பத்தி செய்ய பல திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாலின் எண்ணெயைப் பொறுத்த மட்டில் சமையலுக்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. ஏற்கெனவே சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த, தேங்காய் எண்ணெய் போன்றவற்றின் விலை தென்னை மர உயரத்திற்கு ஏறி விட்டதால், இந்த எண்ணெயை மக்கள் சமை யலுக்கு இப்போது பெரிதும் பயன்படுத்துகிறார்கள். நாமும் இந்த எண்ணெயை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசைப் பொறுத்தமட்டில் அவர்கள் உயர்த்துவதாக தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் இருந்து பார்த்தால், முதலில் 43,400, பிறகு 42,491 என்று இருப்பதைப் பார்த்தால், வர வர குறைந்துக் கொண்டே வருகிறதோ என்று தோன்றுகிறது.

ஆகவே, இதில், மத்திய அரசாங்கம் நிச்சயமாக உயர்த்திக் கொடுக்கும் என்கிற வகையில் ஏதாவது கடிதம் எழுதியிருக்கி றதா ? அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டா இல்லையா ?



அப்படி வாய்ப்பு இல்லை என்றால், அதற்கான முறையிலே வற் புறுத்தி பெறுவதற்கு மாநில அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது வினியோகத் திட்டத் தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோவாவது ஒரு அட்டைக்கு கொடுக்க வேண்டும் என்று வைத்து கணக்கைப் பார்த்தால் கூட மாதம் ஒன்றுக்கு 12,500 மெட்ரிக் டன்கள் தேவைப்படுகிறது. அந்த வகையிலே ஆண்டு ஒன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் டன் இருந்தால்தான் ஒரு அட்டைக்கு ஒரு கிலோ வீதம் தர முடியும். ஆனால் இப்போது மத்திய அரசு நமக்கு வழங்குகிற அளவு 1981–82 ஆம் ஆண்டில் முறையே 43,400 மெட்ரிக் டன்களும், 42,491 மெட்ரிக் டனகளும் ஆகும்.

ஆகவே கொடுப்பதை வைத்துக் கொண்டு ஓரளவிற்கு பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த பாமாலின் எண்ணெயை வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறோம். குறிப் பாக மலேஷியாவிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. மைய அரசு அதை அதிகமாக ஆக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். மக்கள் பயன்படுத்தும் வேறு சமையல் எண் ணெயின் விலை அதிகமாகிக் கொண்டு போவதன் காரணமாக, மக்களுக்கு ஓரளவிற்கு ஏற்ற விலையுள்ள இந்த பாமாலின் எண்ணெயை அதிகமாகப் பெறுவதற்கு வேண்டி நாம் பல தடவை மைய அரசுக்கு வற்புறுத்தி இருக்கிறோம். நாம் மட்டும் அல்ல, வேறு பல மாநிலங்களும் வற்புறுத்தி வருகிறார்கள்.

இந்தப் பாமாலின் எண்ணெயையும், எண்ணெய் வித்துக்களை யும் இறக்குமதி செய்யும் வகையில் மட்டுமே மைய அரசுக்கு 800 கோடி ரூபாய் ஆகிறது என்றும், அந்த வகையில் அன்னியச் செலாவணியை செலவழித்து இதை இறக்குமதி செய்கிறோம் என்றும், இதற்குமேல் இறக்குமதி செய்வதற்கு அன்னியச் செலா வணி இல்லை என்றும் காரணம் சொல்லி, இருப்பதை வைத்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும் என்ற அளவுக்கு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் ஓரளவிற்கு நாலாயிரத்துச் சில்லரை அளவுக்குக் கொடுத்தவர்கள் 6, 7 ஆயிரம் என்ற அளவுக்கு வந்தார்கள். சில நேரங்களிலே குறைகின்ற நிலையும் ஏற்படுகிறது. பாம்ஆயில் இறக்குமதி பெருமளவுக்குக் குறைந்து இருக்கிறது. அதற்குப் பதிலாக சோயாபீன்ஸ் எண்ணெய் பயன் படுத்த வேண்டுமென்றும் அந்த அளவுக்கு ஈடாக அதிகமாகவும் ஒதுக்க முடியும் என்றும் மத்தியஅரசுசொல்கிறது. அந்த வகையில் குறைந்த அளவு 12,500 டன்னாவது தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

[1984 பிப்ரவரி 23

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாமாலின் இறக்குமதி அதிக மாக இறக்குமதி செய்யப்பட்டது, இப்போது அது குறைந்திருப் பதன் காரணமாகவும் உற்பத்தி குறைந்த அளவிலே இருப்பதன் காரணமாக வருகையும் குறைந்திருப்பதன் காரண மாகவும் இருக்கிறதைக் கேட்கிறபோது கொடுக்காத நிலைமை இருக்கிறபோது சோயா பீன்ஸ் எண்ணெய் இதைவிட அதிக சத் துள்ளது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதிக மான அளவுக்கு சோயா பீன்ஸ் எண்ணெய் கொடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி மக்களுக்கு அதிக அளவுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்றுதான் மாநில அரசு வற் புறுத்தி வருகிறது. பாமாயில் ஒரே நாட்டிலிருந்து அதிகப்படியாக வாங்குகிற அளவுக்கு இருக்கின்ற காரணத்தினால் அவர்களும் அதை வைத்துக் கொண்டு அடிக்கடி கிராக்கியை அடிப்படையாகக் கொண்டு விலையை உயர்த்திக் கொண்டு வருகிறார்கள். 2, 3 இடங்களிலே வாங்குகிற சூழ்நிலை இருக்குமானால் விலை அந்த அளவுக்கு உயராத நிலை ஏற்படும். சோயா பீன்ஸ் எண்ணெய் உலகத்திலே உள்ள வேறு பல நாடுகளிலிருந்து வாங்கி இதை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு கூடுதலாக வரவழைத்து அந்த அடிப்படையில் தேவையை நிறைவேற்ற வேண்டும். பாமாயிலை விட சோயா பீன்ஸ் எண்ணெய் அதிகமாக தரக்கூடிய நிலைமை ஏற்படுத்த அதிகப்படியாக அதை வரவழைக்க வேண்டுமென்று கருத்தை நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்,

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாமாலின் எண்ணெய் பற்றிக் குறிப்பிட்டார்கள். அன்றாடம் ஏழை எளிய மக்கள் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள். ஒரு கிலோ கடலை எண்ணெய் இன்றைக்கு 16 ரூபாய் 18 ரூபாய் என்று விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தேங்காய் எண்ணெய் 38 ரூபாய் முதல் 40 ரூபாய் வரையில் கிலோ விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி விலையேறிக் கொண்டிருக்கிற காரணத்தினாலேயும் பாமாலின் எண்ணெய் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினா லேயும் தமிழகத்திலே அதிகப்படியாக சூரியகாந்தி எண்ணெய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படக் கூடிய முறையை ஏற்படுத்தி விநியோகம் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகப் படுத்தி எண்ணெய் தேவையை ஓரளவுக்கு நிறைவேற்றவும், கூடுதல் விலை கொடுத்து மக்கள் அவதிப்படுகின்ற நிலையைப் போக்கக் கூடிய முறையிலேயும் இதற்காக தனித்துறை மூலமாக எண்ணெய் வித்துக்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான



1984 பிப்ரவரி 23]

ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரித்தல், எள் உற்பத்தியைப் பெருக்குதல், தென்னையில் நிபான்டைஸ் செர்னோபா எனப்படும் நோயைத் தடுக்க ஒட்டுண்ணிகளைப் பெருக்குதல், தென்னை மரக் கன்றுகளை வளர்த்தல், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தென்னையின் உற்பத்தி மற்றும் விநி யோகத்தினை அதிகரித்தல், ஒட்டுத் தென்னைக் கன்றுகள் பட்டுக்கோட்டையில் உற்பத்தி செய்தலும், விநியோகித்தலும், தென்னை உற்பத்தியை அதி விரைவில் தமிழ்நாட்டில் பெருக்கு தல், தீவிரத் தென்னை சாகுபடி, தீவிர எண்ணெய் வித்துக்கள் சாகுபடி, புதிய பாசனப் பரப்புகளில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி, சூரியகாந்தி வளர்ச்சித் திட்டம், தஞ்சாவூரில் தென்னை சாகுபடிக்கான பல்நோக்குத் திட்டம், ஒட்டுத் தென்னங்கன்றுகள் தயாரித்தல் ஆகியவற்றைக் கவனிக்கின்ற முறையிலே தனித் துறையை அமைத்திருக்கிறோம் அது மட்டுமல்லாமல், சூரிய காந்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக திட்டங்களைச் செயல் படுத்திக் கொண்டு வருகிறோம். மார்ச் 1984, ஏப்ரல் 1984, அக்டோபர் 1984 இல் அறுவடையாகி நமக்குக் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கக்கூடிய அளவு, நிலக்கடலை மார்ச்சிலே 5 இலட்சம் டன்னும், ஏப்ரலிலே 8 இலட்சம் டன்னும், அக்டோ பரில் 13 இலட்சம் டன்னும் எள் மார்ச்சில் 38 ஆயிரம் டன்னும், ஏப்ரலில் 22 ஆயிரம் டன்னும், அக்டோபரில் 60 ஆயிரம் டன்னும் சூரியகாந்தி மார்ச்சில் 40 ஆயிரம் டன்னும், ஏப்ரலில் 19 ஆயிரம் டன்னும் அக்டோபரில் 59 ஆயிரம் டன்னும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி எந்த எந்த அளவுக்கு எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்கி எண்ணெய் கிடைக்கச் செய்கின்ற முயற்சியை தனித் துறை மேற்கொண்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, பாமாலின் எண்ணெய்க்கும் சூரியகாந்தி எண்ணெய்க்கும் உள்ள விலை வித்தி யாசங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். சூரியகாந்தி எண்ணெயை நியாய விலைக் கடைகளிலே விரைவிலே கொடுக்க அரசு முன் வருமா ?

(முற்பகல் 9–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விலை வேறு பாடுகள் குறித்த குறிப்புகள் இப்போது என்னிடத்தில் இல்லை. ஓரளவுக்கு பாமாயில் எண்ணெயின் விலையை விட சூரியகாந்தி எண்ணெயின் விலை கூடுதலாக இருக்கக் கூடும் என்று கருதுகிறேன். அதைப்பற்றி திட்டவட்டமாக இப்போது சொல்வதற்கு இல்லை. ஆனால் அது கிடைக்கும் அளவைப் பொறுத்து நாம் வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம். நான் முதலில் சொன்னபடி 40 ஆயிரம் டன் மார்ச் மாதத்திலும், 19 ஆயிரம் டன்

ஏப்ரல் மாதத்திலும் 59 ஆயிரம் டன் அக்டோபர் மாதத்திலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூரியகாந்தியைப் பயிரிடுகின்ற பரப்பளவை அதிகமாக்குவதற்கு முயற்சியும் அதன் மூலம் நமக்கு கிடைக்கின்ற உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது பாமாயில் கஷ்ட நிலைமையை எல்லாம் சொன்னார்கள். மத்திய அரசு அன்னிய செலாவணியினால் அதிகமாக கொடுப்பதற்கு முன்வரவில்லை என்று சொன்னார்கள். எப்படி இருந்தாலும் இன்று மணிலா எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவைகளின் விலைகள் 16 ரூபாய் 40 ரூபாய் என்று விற்கின்றபோது கிராமத்தில் மட்டும் அல்ல, நகரத்தில் அதிகமான அளவில் உபயோகப் படுத்துகின்ற நடுத்தர மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. 1984 ஜனவரிக்கு பிறகு குடும்ப கார்டுக்கு எவ்வளவு பாமாயில் கொடுக்கச் சொல்லி அரசு முடிவு செய்து இருக்கிறது. அதைக் கொடுக்கின்றபோது எல்லா அட்டைக்கும் மாதத்திற்கு ஒரு நாள் கிடைப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்க வேண்டிய அலுவலகம் என்ன நடவடிக்கையை எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அதைப்பற்றிய முழு விவரம் இப்பொது என்னிடத்தில் இல்லை என்றாலும் மதுரை, சென்னைப் போன்ற பெரிய நகரங்களில் அடிக்கடி இப்படிப்பட்ட எண்ணையை பயன்படுத்துகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் கார்டு ஒன்றுக்கு ஒரு கிலோ தரவேண்டும் என்றும் மற்ற கிராம பகுதிகளுக்கு 2 மாதம் 3 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு கிலோ தரவேண்டும் என்றும் ஏற்பாடு இருக்கிறது. இப்படி ஏற்பாடு நடைபெற்றுக் .கொண்டிருக்கிறது இப்போது அங்கு அதை ஓரளவுக்கு இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இப்போது இருக்கிறது. கிடைப்பதற்கான குறிப்புகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ,ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆயிரம் டன்னாவது கட்டாயமாக ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசு இப்போது அதனால் பாரின் எக்சேன்ஜ் அதிகமாக இருப்பதால் கொடுப்பதை இப்போது யூட்டிலைஸ் செய்து அட்ஜெஸ்ட்டு செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள் என்று





சொன்னார்கள். நான் கேட்க விரும்புறேன், அரிசி விஷயத்தில் ஒதுக்கியது ஒன்று, ஆனால் நம் கைக்கு வந்து சேர்ந்தது கம்மியாக இருக்கிறது. சரி, கொடுப்பதை அட்ஜெஸ்ட்டு செய்யுங்கள் என்று சொல்லும்போது அவர்கள் ஒதுக்குவது அந்த கேரண்டட்டி கரெக்ட்டாக வந்து சேருகிறதா? இல்லை என்றால் முதலில் அதாவது கரெக்ட்டாக கிடைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் திங்கள் தோறும் ஒதுக்கீடு செய்பவற்றை கூடுமானவரையில் ஒதுக்கீடு முழுவதையும் எடுத்து விடுகிற சூழ்நிலையில் இருக்கிறோம். ஏன் என்றால் எவ்வளவு கொடுத்தாலும் நமக்கு தேவைப்படுகிற காரணத்தினால் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிப்பட்ட கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் எண்ணெயை கூடுதலாக இறக்குமதி செய்வதற்கு அதிக அந்நிய செலாவணி ஆகிறது என்ற காரணத்தினால் அதிகமாக இறக்குமதி செய்யவில்லை என்று மத்திய அரசு சொல்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் எண்ணெய் வித்துக்கள் விளையக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. எனவே அந்நிய செலவாணி இப்படி அதிகமாவதை தடுப்பதற்கு நம்முடைய நாட்டிலேயே எண்ணெய் வித்நுகளை உற்பத்தி செய்து தேவையை பொறுத்து செய்வதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தால் இங்கே நம்முடைய தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளமுடியும். தேவையான எண்ணெயை நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும். எனவே அப்படிக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு இதற்காக ஏதாவது செய்யப்பட்டு இருக்கிறதா என்ற அந்த விவரத்தையும் அப்படி இல்லை என்றால் இங்கே எண்ணெய் வித்துகளை உற்பத்தி செய்யத் தக்க அளவில் நிதியை கூடுதலாக பெற்று இங்கே அந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி இந்தியாவில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகமாக்கவேண்டும். எண்ணெய் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்திய அரசின் வேளாண்மைத் துறைகளும், மாநில அரசின் வேளாண்மைத் துறைகளும் இதிலே ஒன்றாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசு பாமோலின் எண்ணெயை வெளி

[1984 பிப்ரவரி 23

நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதால், இறக்குமதி செய்த பிறகும் நமக்கு 8 ரூபாய் 90 காசுக்குக் கிடைக்கின்ற அளவிற்கு இருப்பதால், இந்தியாவிலேயே பாம் மரங்களை வளர்த்து இங்கேயே அந்த எண்ணெயை எடுப்பதற்கான முயற்சிகளை ஆங்காங்கு எடுத்துக் கொள்ளுமாறும், மத்திய வேளாண்மைத்துறை அதற்கான கூறுபாடுகளையும் எந்த அளவிற்கு வளர்க்கலாம் என்பதையும் ஆராய்ந்து வருகிறார்கள். அதன் மூலம் உற்பத்தியைச் செய்வதற்கு மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, எண்ணெய் வித்துக்களை நாம் பெருக்குவதற்கான திட்டங்களுக்கு மத்திய அரசிலிருந்து மானியம் தர வேண்டும், உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கான முழு புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நிதியமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது எவ்வளவு ஆயிரக்கணக்கான டன் நிலக்கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் கிடைக்கும் என்று சொன்னார்கள். இந்தக் கேள்வி கேட்டபொழுது, அதற்கு அதிகாரிகள் பதில் தயாரித்தபொழுது இருந்த நிலமைகளை அவர்கள் சொன்னார்கள். அதற்குப்பிறகு இந்த மாதம் பெய்த மழையில் நிலக்கடலை அழுகிப்போய் பத்து சதவீதம் கூட தென்னாற்காடு மாவட்டத்தில் தேறாது என்று சொல்கிறார்கள். ஆகவே, வரப்போகின்ற மார்ச் மாதத்தில் எண்ணெய் வித்துக்கள் பத்து சதவீதம்கூடத் தேறாது. எண்ணெய்ப் பஞ்சம் அதிகமாக இருக்கப் போகிறது. இதை மனத்திற் கொண்டு முன்னேற்பாடாக என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறுவதைப்போன்று, நாம் ஏற்கனவே உள்ள சகஜமான நிலை இருக்கும் என்று கருதி, மார்ச், ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் எவ்வளவு வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இப்பொழுது ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது, அதை எந்த அளவிற்குத் தீர்க்க வேண்டுமென்ற கணக்குகளையெல்லாம் எடுத்து, அவர்கள் சொல்வதைப் போன்று நமக்கு ஏற்படுகின்ற பற்றாக்குறையைத் தீர்க்கின்ற அளவிற்கு நமக்கு உதவி செய்ய வெண்டுமென்று மத்திய அரசினிடத்தில் கோர வேண்டும். அதற்கான புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



1984 பிப்ரவரி 23]

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, சமையல் எண்ணெய்கள் கடுமையான விலையேற்றத்தில் இருக்கிறது. ஆகவே, இதை ஒரு கட்டு திட்டத்திற்குள் கொண்டு வந்து நிறுத்துவதற்கு மத்திய அரசிடம் பேசி விலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா? சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவிற்கு விலைகள் உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாகக் கடுமையான கலப்படம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இதில் அரசு விசேஷமான கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விலைவாசிகளைப் பொறுத்த வரையில், எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த இயலும் என்று தெரியவில்லை. ஆனால் சாதாரணமாக நிலக்கடலையைப் பொறுத்த வரையிலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கூடுதலாகக் கிடைக்கிறது. தேங்காய் எண்ணெயைப் பொறுத்த வரையில் நாம் பெரும்பாலும் கேரளத்தை எதிர்பார்த்து அங்கிருந்து வர வேண்டியதாக இருக்கிறது. வேறு சில எண்ணெய்கள் வடமாநிலங்களிலேயிருந்து வரவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், தேங்காய் எண்ணெயின் விலை அதிகமாக இருக்கிறது. அது இங்கு மட்டுமல்ல, அதிமாக உற்பத்தியாகின்ற கேரளாவிலேயும் விலை மிகவும் அதிகமாகச் சென்று, இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அங்கேயும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், உற்பத்தி மிகவும் குறைந்திருப்பதாகவும் எனவே அங்கேயும் விலை ஏறியிருப்பதால் தான் நம் மாநிலத்திலும் அதிக அளவிற்கு விலை ஏறுகின்ற சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்தி ஓரளவிற்கு வர வேண்டுமென்றால் விவசாயிகளுக்குப் போய்ச் சேருகின்ற அளவு மிகமிகக் குறையக் கூடும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப்போன்று இதைக் கட்டுப்படுத்தி, கட்டுப்படியான விலைக்குக் கொண்டு வருவதற்கு சர்க்கரை, மைதா போன்றவைகளுக்குக் கொண்டு வருவதைப்போன்று, இதைக் கொண்டு வர இயலுமா என்று ஆராயும்படி மத்திய அரசுக்கு யோசனையாக எடுத்துச் சொல்லலாம்.

**விளவங்கோடு தாலூகா களியல் செக்போஸ்ட் வழியாக கேரளாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட அரிசி.**

137 (*வினா எண். 18272)—**திரு. டி. மணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—2—1983 காலை சுமார் 7 மணியளவில் உணவு தானியக் கடத்தல் தடுப்புப் பிரிவு பறக்கும்படையினரால் துரத்திவரப்பட்ட சுமார் 10 டன் அரிசி ஏற்றிய லாரி ஒன்று

[1984 பிப்ரவரி 23

விளவங்கோடு தாலூகாவில் களியல் என்னுமிடத்தில் உள்ள
செக் போஸ்டில் 5 காவலர்கள் பணியிலிருக்கும் போதே
அந்த செக் போஸ்ட் வழியாகக் கேரளாவுக்குக் கடந்து சென்
றுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை
என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ)
20—2—1983 அன்று கே.இ.எப். 306 எண் உள்ள அரிசி
மூட்டைகள் ஏற்றிய லாரியை அரசு அலுவலர்கள்
விரட்டிச் சென்றபோது அது கேரளாவுக்குள் சென்று
கவிழ்ந்து விழுந்தது. லாரி கவிழ்ந்த இடம் கேரள மாநிலத்
தின் எல்லைக்குட்பட்டதால் லாரியையோ அரிசி மூட்டை
களையோ பறிமுதல் செய்ய முடியவில்லை.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய
கேள்வியின் ஒரு பகுதியிலே கூறியிருப்பதைப்போன்ற இந்தக்
கடத்தல் லாரியைப் பறக்கும் படையினர் துரத்தி விட்டார்கள்
என்பது உண்மை. அதைக் களியல் என்னும் இடத்தில் உள்ள
செக் போஸ்டில் உள்ளவர்கள் கவனிக்காததால்தான் அது
அடுத்த மாநிலத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. அதன்
மேல் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கே
அந்தச் சாவடியில் இருந்தவர்களின் உதாசீனத்தின் காரணத்
தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதா? அல்லது ஏதேனும்
முறைகேடுகள் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை வந்ததா?
அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, 20—2—1983 அன்று விடியற்காலையில் பனகுளம்
என்னுமிடத்தில் கே. இ. எப். 306 எண் ஃண உடைய, அரிசி
மூட்டை ஏற்றிய லாரி ஒன்று ஒரு காரின் துணையுடன் நாகர்
கோவிலை நோக்கிச் செல்வதை கண்காணிப்புக் குழுவினர்
டி.எம்.ஒய். 2297 என்ற எண்ணை உடைய ஜீப்பில் திருநெல்
வேலி மாவட்ட எல்லையில் இரவு வேளையில் கண்காணித்திருக்
கிறார்கள். அந்தக் கண்காணிப்புக் குழு லாரியை விரட்டிச் சென்று
லாரியை முந்திக்கொண்டு தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி செய்தது
ஆனால் அந்த லாரியானது தேசிய நெடுஞ்சாலையில் காவல்
கிணறு என்னும் ஊரை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டி
ருந்தது. அந்த லாரியானது காவல் கிணறு செக் போஸ்ட் குறுக்கு
தடியை நாசப்படுத்திவிட்டு நெடுமாங்காடு சாலையின் ஆரம்பத்
தில் உள்ள ஆரல்வாய்மொழி என்னுமிடத்தை நோக்கிச் சென்றது
வருவாய், காவல்துறை அதிகாரிகள் அடங்கிய குழு களியல்



1984 பிப்ரவரி 23]

எல். ஐ. பி. செக்போஸ்ட்டை கடந்து கன்னியாகுமரி மாவட்டத்
தில் உள்ள கைலாசம் எஸ்டேட் செக்போஸ்ட் வரை அந்த
லாரியை விரட்டிச் சென்றது. ஆனால் இக்குழுவால் அந்த லாரியை
தடுத்து நிறுத்த இயலவில்லை. களியல் செக்போஸ்ட்டில் ஒரு
தலைமைக் காவலர், நான்கு காவலர்கள் காவலுக்கு இருந்தும்,
அவர்களால் அந்த லாரியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.
அந்த லாரியானது கேரளாவுக்குள் கடந்து சென்று ஒரு கிலோ
மீட்டர் சென்றதும் சாலையின் பக்கத்தில் கவிழ்ந்தது. லாரி
கவிழ்ந்த இடமானது கேரள மாநிலத்தின் எல்லைக்குட்பட்டதால்
அந்த லாரியையும், அரிசி மூட்டையையும் கைப்பற்ற
முடியவில்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட எனக்கு அதுபற்றிய
விவரங்களை எழுதித் தந்தவுடன், இதுபற்றி என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டது, ஏன் அவர்களை விட்டார்கள், கவனக்குறைவு
காரணமாக அவ்வாறு ஏற்பட்டதா, என்றெல்லாம் கேட்டேன்.
ஆனால் அதற்குக் காவல் துறையைச் சார்ந்தவர்கள் சொல்லி
யிருப்பது என்னவென்றால் அதனைக் கூடுமான வரையில்
விரட்டிச் சென்றதாகவும் அந்த லாரி மிக வேகமாகச் சென்றதன்
காரணத்தால், அது கழியினை முறித்துக்கொண்டு சென்றதன்
காரணத்தால், மேலும் அது கேரளாவின் எல்லைக்குள் சென்று
விட்டதன் காரணத்தால் அந்த லாரியினையும், அரிசி மூட்டை
யையும் கைப்பற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். ஆகவே
இப்படிப்பட்ட நிலைமை குறித்து கேரள அரசுக்கு நாம் தெரிவிக்க
முடியுமே தவிர நாம் அங்கே சென்று கைதுசெய்ய இயலாது
என்று சொன்னாலும் கூட நான் ஏற்றுக்கொள்ளவில்லை.
இருந்தாலும் கூட அது வேகமாக உயிருக்கு ஆபத்து தருகின்ற
அளவுக்கு வேகமாகச் சென்றதன் காரணத்தால் நாம் வழக்கு
பதிவு செய்ய உரிமை இருக்கின்றது. குறுக்குத் தடியினைச்
சேதப்படுத்தியதன் காரணத்தாலும் நாம் வழக்கு பதிவு செய்
வதற்கு உரிமை இருக்கின்றது. ஆகவே ஏன் இந்த இரண்டையும்
செய்யவில்லை என்று கேட்டபோது காவல்கிணறு செக்போஸ்-
டுக்கும், களியல் செக்போஸ்டுக்கும் எந்தவிதமான நாசமும்
ஏற்படவில்லை, ஆகவே நடவடிக்கை எடுக்கவில்லை என்று பதில்
வந்தது.

இருப்பினும் முறைப்படி அதைத் தடுத்து நிறுத்தி உரியநடவடிக்
கைகளை எடுக்கத் தவறியதற்காகத் தக்க ஒழுங்கு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று காவல் துறையின் மேலதிகாரிகளுக்கும்
கடுமையான நடவடிக்கையை எடுக்குமாறு திருநெல்வேலி மாவட்
டக் காவல் கண்காணிப்பாளரும் கோவைபுதூரில் உள்ள தமிழ்
நாடு சிறப்புக் காவல் படையின் நான்காம் பிரிவு தளவாயும்
கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது
விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதிலே ஈடுபட்டு இருக்
கிறார்கள். அவர்களிடத்திலே இருந்து தகவல் வந்ததற்குப்
பிறகு தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஆரல்வாய்மொழிக்கும், களியலுக்கும் இருக்கின்ற தூரம் கிட்டத்தட்ட 40 அல்லது 50 மைல்கள். இவ்வளவு தூரம் இருப்பதன் காரணத்தால் எத்தனையோ இடங்களிலே அந்த லாரியை மறித்துப் பிடித்திருக்க முடியும். ஆகவே அதைக் கவனிக்கவேண்டும்.

அடுத்து இப்போது இன்னொரு யுத்தியைக் கையாண்டு வருகிறார்கள். அதாவது விளவங்கோடு, கல்குளம் தாலுக்காவில் தனியார் கடைகளுக்கு அதிகமான உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமங்களிலே சில வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வழிமுறைகளின்படி அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கின்றபோது அதாவது உரிமங்களை ரத்து செய்கின்றபோது அவர்கள் ஹைக்கோர்ட்டிலே வழக்கு போட்டு, அந்த ஹைக்கோர்ட்டும் அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு கொடுத்ததன் காரணத்தால் தினந்தோறும் நம்முடைய மாநிலத்திலிருந்து 20 முதல் 50 லாரிகள் வரை இவ்வாறு அரிசியைக் கடத்திக் கொண்டு செல்கின்ற காட்சியினை நாம் காண்கிறோம்.

ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டம் பற்றாக்குறை பகுதியாக இருக்கின்ற நிலைமையில் அங்கே பச்சரிசிதான் ஓரளவுக்குக் கிடைக்கின்றது. ஆகவே அங்கே எல்லாம் இம்மாதிரியான உரிமங்கள் தனியார்களுக்குத் தரப்பட்டிருப்பதன் காரணத்தால் அரிசி வெளிமாநிலத்திற்குப் போகின்றது. எனவே அந்த லைசன்ஸ் முறையினை ஒழுங்குபடுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திலே புழுங்கல் அரிசி கிடைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற தகவலின் அடிப்படையில் அப்படி துஷ்பிரயோகம் செய்கிற அளவிற்கு அல்லது பொதுமக்களுக்கு உதவி செய்கிற நோக்கத்கத்தை நிறைவேற்ற முடியாத அளவிற்கு இருக்குமானால் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களின் அடிப்படையில் விசாரித்து தக்க ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் உயர்நீதிமன்றத்தில் அதற்கு ஸ்டே கொடுத்திருந்தால் அதுவரை நாம் பொறுத்திருக்கவேண்டும். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களின் அடிப்படையில் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராயும். அதுமட்டுமல்ல. எங்கெங்கே கடத்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவோ — நாள் ஒன்றுக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட லாரிகளில் போய்க்கொண்டிருக்கிறது என்ற செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்— தீவிரமாக அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் குறிப்பாக கேரள எல்லைப் பகுதிகளிலும் வேறு பல பகுதிகளிலும் இந்தக் கண்காணிப்பு





தணிக்கை முறைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அதற்காக கூடுதலாக காவல்துறை அதிகாரிகள் தேவைப்படுமானால் காவல் துறைக்கு அதை ஒதுக்கீடு செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறேன் என்று சொல்லி சிலயிடங்களில் கொஞ்சம் வலுப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மி. வின்செண்ட் :** தலைவர் அவர்களே, கேரளாவிற்கு அரிசி கடத்திச் செல்வதைத் தடுப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தாலும் கடத்தல்காரர்கள் செக் போஸ்ட்களை லாரிகளை வைத்து இடித்துத் தகர்த்து அரிசியைக் கடத்திச்செல்கிறார்கள். இப்படி வன்முறையைக் கையாண்டு கடத்தல் செய்யும் கடத்தல்காரர்களை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அங்கே கண்காணிப்பு, தணிக்கைமுறையை எவ்வளவுக்கெவ்வளவு வலுப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு வலுப்படுத்துவதற்கு முயற்சியை ஒரு பக்கம் எடுக்க வேண்டும் என்று இந்தத் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டுவர இயலுமா என்பதைப் பற்றியும் அதை எந்தளவுக்குக் கொண்டு வர முடியும் என்பதைப் பற்றியும் அந்தத் துறை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள். ஆனால்கட்டாயம் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பார்கள் என்று இப்போது சொல்வதற்கில்லை. நிலைமைகளை ஆராய்ந்து, யார் யார் என்று ஆராய்ந்து செய்ய அதற்கென்று வழிமுறைகள் இருக்கின்றன. அதைப் பின்பற்றி அவர்கள் தொடர்ந்து குற்றம் செய்கிற அளவிற்கு அரசாங்கத்திற்குப் படுமானால் தடுப்புக் காவல் சட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கலாம். அதையும் அரசாங்கம் ஆராயும்.

**திங்களூர் கிராம பள்ளவாரி ரெவின்யூ புறம்போக்கில் அனுமதி இல்லாமல் வெட்டப்பட்ட மரங்கள்.**

138 —(*வினா எண். 17550)—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், திங்களூர் கிராமத்தில் பள்ளவாரி, ரெவின்யூ புறம்போக்கில் அனுமதி இல்லாமல் அரசுக்குச் சொந்தமான மரங்களை வெட்டியதாகப் புகார் மனு அரசிற்கு வந்துள்ளதா ?

—

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) புகார் மனுவின்படி சம்பந்தப்பட்ட இடங்களை வருவாய்த்துறை மற்றும் வன அலுவலர்களால் பார்வையிட்டதில் ரூ. 60,499 மதிப்புள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. மேற்படி மரங்களை வெட்டிய நபர் மீது இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) 447, 427, 420 மற்றும் 379 பிரிவின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மரங்களை வெட்டியவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் இந்த மரங்களை ஏலத்தில் விடுகிறபோது ஏலத்தில் எடுத்தவர்கள் புறம்போக்கில் இருக்கக்கூடிய மரங்களையும் சேர்த்து வெட்டிவிடுகிறார்கள். அப்படி வெட்டுகிறபோது ஆரம்பத்திலேயே அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அப்படி வெட்டுபவர்கள்மீது, வெட்டுவதை சரியாகக் கண்காணித்து தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு, இதை உடனடியாக விசாரித்து எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது, எப்படி முறைப்படுத்துவது என்பது பற்றி ஆராய்ந்து அரசுக்கு சிபாரிசு செய்வதற்காக அரசாங்கத்தின் இரண்டாவது செயலாளராக இருக்கும் திரு. டி. வி. அந்தோணி அவர்களையும் திரு. வில்சன், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் அவர்களையும் கொண்ட ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அவர்கள் விரைவில் ஆராய்ந்து முடிவை அறிவிப்பார்கள்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வந்திருக்கக்கூடிய அந்தத் தகவல் அதிகாரிகளிடத்திலிருந்து வந்திருக்கிறதா அல்லது பொது மக்களிடமிருந்து வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முதலில் பொது மக்கள்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்தில் குறிப்பாக திங்களூர் மலை வட்டாரத்தில் ரெவின்யூ புறம்போக்கு நிலமும் காட்டு இலாகாவினுடைய நிலமும் அருகாமையில் உள்ளதால் காட்டு இலாகாவிற்குச் சொந்தமான மரங்



களை திருடிக்கொண்டு போவதும் அதன் பேரில் இதே மன்றத்தில் கேள்வி கிளப்புவதும் வழக்கமாக இருக்கிறது. அதேயிடத்தில் அந்த மரங்களை வெட்டுபவர்கள் ரெவின்யூ புறம்போக்கு மரங்களையும் வெட்டிவிடுகிறார்கள் காட்டு இலாகா இடம் என்று. ஆகவே, இந்த இடங்களை வரையறுத்து, ரெவின்யூ புறம்போக்கு எந்தெந்த இடங்கள் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து அதற்கு தகுந்த பாதுகாப்பு போட்டு அந்த மரங்களை கான்ட்ராக்டர்கள் அல்லது யாரும் வெட்டமுடியாத அளவிற்கு திருடர்களைப் பிடிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டிருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது காட்டிலாகா மரமானாலும் சரி, ரெவின்யூ இலாகா புறம்போக்கு நிலத்திலுள்ள மரமானாலும் சரி, இரண்டுமே அரசுக்குச் சொந்தமான மரங்கள்தான். ஆகவே காட்டிலாகா மரத்தை வெட்ட வேண்டுமென்றோ அல்லது ரெவின்யூ புறம்போக்கு மரத்தை வெட்ட வேண்டுமென்றோ, அரசுக்கு அந்த எண்ணம் இல்லை. இரண்டையுமே பாதுகாக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அப்படி தவறு நடந்திருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தவறைச் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. இனிமேல் இம்மாதிரியான தவறு நடக்கக்கூடாது என்பதற்காகத்தான், அரசின் இரண்டாவது செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்களையும், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் அவர்களையும் கொண்ட ஒரு குழுவைப் போட்டு, ஆராய்ந்து வருகிறோம். விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

**தென் ஆலப்பாக்கம் இராமப் புறம்போக்கு நிலத்தின் மனைப் பட்டா கோரி மனு செய்துள்ள ஏழை மக்கள்.**

139 —(*வினா எண். 18805)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) திண்டிவனம் தொகுதி மயிலம் ஒன்றியம் தென் ஆலப்பாக்கம் கிராமத்தில் புறம்போக்கு இடங்களில் வீடு கட்டி வசித்து வரும் ஏழை மக்கள் மனைப்பட்டா கோரி அரசுக்கு மனு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

[1984 பிப்ரவரி 23

(ஆ) இருந்தபோதிலும், திண்டிவனம் வட்டம் தென் ஆலப் பாக்கம் கிராமத்தில் ரி.ச. எண். 121/3 நத்தம் புறம்போக்கில் ஆக்கிரமித்து வீடு கட்டியிருப்பதை முறைப்படுத்தி 4 வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த கோரிக்கை பற்றித் தனித்தனியாக தென் ஆலப்பாக்கம் கிராமத்தில் வாழுகின்ற விவசாயக் கூலிகள் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று வருவாய்த்துறை அதிகாரிகளிடம் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்க ளுக்கு உடனடியாக அந்த நிலங்களையெல்லாம் வீட்டுமனைப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப் பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையென் றால், விரைவிலே அதை பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. கே. எம். தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் குடியிருந்து வரும் அந்த இடங்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு தேவையில்லை என்பதை அங்குள்ள எல்லா மக்களும் ஒத்துக்கொள்கின்ற உண்மை. வருவாய்த்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார் கள். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க காலத்தை வீண டித்து வருகிறார்கள். எனவே, உடனடியாக உத்தரவு வழங்கி, அவர்களுக்கு அந்த வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள எல்லா பொதுமக்களும் அரசுக்குத் தேவை இல்லை என்று சொன்னால், மகிழ்ச்சிதான். எந்த இடத்திலும் அப்படிச் சொல்வதில்லை. இருந்தாலும்,, வேண்டுமென்றே வருவாய்த் துறை அதிகாரிகள் காலதாமதம், செய்து வருவார்களேயானால், விரைவில் கொடுப்பதற்கான ஏற் பாடுகளை இந்த அரசு செய்யும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நமது விதிப்படி பாங்கியில் கடன் வாங்கு வதற்கோ, கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்குவது என்றாலோ, அவர்களுக்குச் சொந்த சொத்து, பட்டா இருந்தால்தான், அது வும் ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு ஏதாவது உதவி கிடைக்கின்ற நிலைமை இருப் பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அதே சம [illegible] கிராமங்களில் கிராம நத்தம் புறம்போக்கில் வாழ்ந்து



1984 பிப்ரவரி 23]

வருகின்றவர்களுக்கு, சொந்த பட்டா கிடையாது. ஆனால், இடைக்காலத்தில் இப்படி வாழ்ந்து கொண்டு வருகின்றவர் களுக்கு அவர்கள் பின்தங்கியவர்களாக இருந்தாலும், ஆதிதிரா விட மக்களாக இருந்தாலும், முற்போக்கு வகுப்பினராக இருந் தாலும் அவர்கள் வாழ்ந்து வருகின்ற இடங்களுக்கு பட்டா, கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்கெனவே இருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ கடந்த இரண்டு ஆண்டு களாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புறம் போக்கு நிலத்திலே வாழ்வது என்பது ஒன்று; கிராம நத்தம் புறம்போக்கிலே வாழ்வது என்பது மற்றொன்று. வாழ்கின்ற இடத்திலே பட்டா போட்டு கொடுத்தால், அரசாங்கம் கொடுக் கின்ற கடன் உதவியைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அது அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு, அது திண்டிவன மாக இருந்தாலும் அல்லது மற்ற இடங்களாக இருந்தாலும், அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தேர்தல் அறிக்கையில், விரைவாக எல்லோருக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென சொல்லியிருக்கிறோம். அதன்படி, உங்களுக்குச் சொல்ல, வேண்டுமென்றால், சென்ற 1981—82-ல் 94,000 வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1982—83-ல் 1,49,000 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இந்த ஆண்டு அதையும் மிஞ்சிப் போகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வீட்டு மனைப் பட்டா கொடுப்பதிலே இந்த அரசு கண்ணும்கருத்துமாக இருந்து விரைவிலே கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காக கட்டப்பட்ட குடியிருப்பு.

140—(* வினா எண். 19687)—திரு. க. பாரமலை : மாண்பு மிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை வட்டாரம் கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காகக் கட்டப்பட்ட கட்டி டம் முடிக்கப்பெறாமலும், கட்டிய கட்டிடமும் உபயோகப் படுத்த இயலாத நிலையிலும் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குத்தகை வருவாய் ஆய்வாளர் குடியிருப்புப் பழுது பார்க்கப்பட்டு, அது இப்போதைக்கு முடிவுற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் வரை அது குடியிருப்புக்கு இலாயக்குள்ளதாக இருக்கவில்லை. அதில் யாரும் குடியிருக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இப்பொழுது குடியேறும் நிலையிலுள்ளது என்று தகவல் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சரியானது என்று தெரியவில்லை. என்றாலும், அதே மாதிரி பல அரசுக் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து முடியாமலேயே இருக்கிறதே என்ன காரணம் ? எந்த ஆண்டு துவக்கப்பட்டது ? இவ்வளவு காலதாமதமாவதற்கு என்ன காரணம் ? அதிகாரிகள் பொறுப்பா ? அல்லது கட்டிய ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆயிரக்கணக்கான கட்டிடங்களும் தாமதப்படுகின்றன். ஏதோ ஒன்றிரண்டு அப்படி தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், 1978-லிருந்து இன்றைக்கு 1983 வரையிலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு 958 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இதுயும் போன்று ஒரு சில இடங்களில் தாமதமாகியிருக்கிறது என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். 1979 ஆம் வருஷம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. முதலில் திரு. சின்னசாமி என்பவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. 60 சதவீதம் கட்டி விட்டு, முடிக்காமல் விட்டுவிட்டுப் போய்விட்டார். பிறகு திரு. பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. அவரும் பாதி கட்டிவிட்டுப் போய்விட்டார். அதற்குப் பிறகு இறுதியாக வேறொரு ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்து அது கட்டி முடிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சில குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான கோரிக்கை**

*141— (* வினா எண். 20863) :* **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மிளகாய், மல்லி, புளி, வெல்லம், வெல்ல சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகிய பொருட்களை உணவுப் பொருளாகக் கருதி விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனக் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?*



*(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?*

*(இ) அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன ?*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ), (ஆ) மற்றும் (இ) ஆம். மிளகாய், மல்லி, புளி, வெல்லம், சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகியவற்றிற்கு வரி விலக்குக் கோரி வியாபாரிகளிடமிருந்து பலமுறை மனுக்கள் வரப்பெற்றன. அவைகளையெல்லாம் அரசு நன்றாக ஆராய்ந்து பார்த்து வரி விலக்குக் கொடுப்பதற்கு இயலாது என்ற பதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே சிறு குடும்பங்கள் அல்லது நடுத்தர குடும்பங்கள் மிக அதிகமான விலைவாசி உயர்வினாலே, கஷ்டப்படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். அந்த வகையில் இது வியாபாரிகள் கேட்டது என்று கருதிவிடாமல், நீங்கள் வரியைக் குறைப்பீர்களானால் இந்தப் பொருள்கள் விலை குறையும், நம்முடைய பொதுமக்கள் மிகவும் நன்மை அடைவார்கள். அதைக் கருதி, அரசாங்கத்தின் வருவாய் கொஞ்சம் குறைந்தாலும் பரவாயில்லை என்று, எண்ணற்ற பொதுமக்களின் நலன் கருதி அதை மறுபரிசீலனை செய்து இந்த வரியைக் குறைப்பதற்கு அல்லது எடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நோய்க்கு மூல காரணத்தை நாம் கண்டுபிடிக்காமல் நோய்க்கு மேலே புனுகு பூசிக் கொண்டிருக்கிற மாதிரி எனக்குத் தெரிகிறது. நோய்க்குக் காரணத்தைப் பார்க்கிறபோது, செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்கள் கணக்கிலே வராத கறுப்புப் பணம் — நாட்டிலே உலவுவதுதான். அதுதான் நோய்க்கு மூல காரணம். இப்படிப்பட்ட சிறு பொருள்களின் மேல் வரி போடுவதால் அல்ல— பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் இன்றைக்குக் கறுப்புப் பணமாக நாட்டிலே உலவுவதுதான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாகும்.

(முற்பகல் 9-40)

**திரு பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல காரணம் எப்படி இருந்தாலும் ஒரு வியாதி, விபத்து என்றால் முதல் உதவி என்று உண்டு. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் டாக்டராக இருந்து நோய்க்கு மூல காரணமான கறுப்பு பணத்தை ஒழிக்கிற அதிகாரம் அவருக்கு இல்லை என்பதை அறிவேன். ஆகவே வியாதியை ஒழிக்கிற அதிகாரம் அவரிடத்திலே இல்லையென்றாலும் முதல் உதவி செய்கிற அதிகாரம் அவருக்கு இருக்கிறது என்று

கருதுகிறேன். ஆசவே பொதுமக்களுடைய நலன் கருதி அரசாங்கத்
திற்கு சிறிது வருவாய் குறைந்தாலும் பரவாயில்லை என்கிற அளவில்
இந்த வரியை ரத்து செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, முதலுதவி செய்கிற முறையிலே தான்
இப்படிப்பட்ட பொருள்களுக்கு அதிகமான வரியைப் போடாமல்
குறைத்துப் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்
களே, மிளகாய், மல்லி, புளி, வெல்லம், வெல்ல சர்க்கரை,
மஞ்சள், பூண்டு ஆகியவைகள் எல்லாம் ஏழை, நடுத்தர மக்கள்
அதிகமாக பயன்படுத்துகிற பொருள்கள். இந்தப் பொருள்களின்
மீது வரியை ரத்து செய்வதாலே அரசாங்கத்திற்கு எவ்வளவு
வரி இழப்பு என்று அமைச்சர் அவர்கள் கணக்கு பார்த்திருக்கி
கிறார்களா? மதுக்கடைகளை திறந்திருப்பதால் அரசிற்கு பல
கோடி வரி கிடைக்கிறது. அதேபோல் லாட்டரிக்கு வரி போட்
டிருக்கிறோம். ஆகவே பெரும்பாலும் ஏழை மக்கள், நடுத்தர
மக்கள் பயன்படுத்துகிற காய்கறிகளோடு சம்பந்தப்பட்ட அழுகு
கிற பொருள்களாக இவை இருப்பதால் அரசு மனிதாப
மான நோக்கத்தோடு இந்தப் பொருள்களின் மீதான வரியை
ரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்
பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் அழுகும் பொருள்கள்
இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால்
அரசாங்கத்திற்கு சுமாராக 5 கோடி ரூபாய் வருவாய் இழப்பு
ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு
உறுப்பினர்கள் மதுக்கடைகள், லாட்டரி டிக்கட் என்றெல்லாம்
சொன்னார்கள். நான் முன்பே சொன்னேன். லாட்டரி டிக்
கட்டிற்கு வரி போட்டோம், அதற்கு உயர்நீதி மன்றத்தில் தடை
கேட்டு இருக்கிறார்கள். மது வகைகளை தொடர்ந்து இந்த
அரசு வைத்துக் கொண்டிருக்காது. படிப்படியாக குறைக்கும்.
மது விலக்கில் இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது என்று
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்
கிறார்கள். நானும் சொல்லி இருக்கிறேன். ஆகவே அதில்
வருகிற வரி என்பது டெம்ப்பரரி தான் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது விலைவாசி
உயர்விற்கு கறுப்புப் பணம் காரணம் என்று சொன்னார்கள்.





இந்த கறுப்புப் பணத்தை ஒழிப்பது என்பது மத்திய அரசு நட
வடிக்கை எடுக்க வேண்டிய விவகாரம். ஆகவே அதை ஒழிக்க
மத்திய அரசிற்கு தமிழக அரசு ஆலோசனை செய்து உள்ளதா?
குறிப்பாக 100 ரூபாய் நோட்டை செல்லாது என்று அறிவிக்க
மத்திய அரசிற்கு ஆலோசனை சொல்லப்படுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்
கும் தொடர்பில்லை.

### தொடர்ந்து நெல்பயிர் செய்வதால் வயல்களில் ஏற்படும் துத்த நாகப் பற்றாக்குறை.

142—(*வினா எண். 19308)—திரு. பி. கணேசன் : மாண்பு
மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தொடர்ந்து ஒரே இடத்தில் நெல் பயிர் செய்வதால்
துத்தநாகப் பற்றாக்குறை எற்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அக்குறையைப் போக்க விவசாயப் பல்
கலைக் கழகம் ஆராய்ந்து செயல்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நமது
மாநிலத்தின் பல பகுதிகளில் செய்த ஆராய்ச்சியின் மூலம் துத்த
நாகப் பற்றாக்குறை நெல் வயல்களில் வெகுவாக இருப்பதை
கண்டறிந்துள்ளது. இப்பற்றாக்குறை வராமல் தடுக்க,
நெல் நடவு செய்யுமுன்பாக ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ அல்லது
எக்டேர் ஒன்றுக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும்.

### உற்பத்தியை அதிகரிக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ரக கரும்பு.

143— (*வினா எண். 19458)—திரு. சி. சிவப்பிரகாசம் :
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும்
பொருட்டு புதிய ரக கரும்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த ரக கரும்பு பயிரிட எந்தெந்த மாவட்டங்
களுக்கு ஏற்றது?

(இ) ஒரு ஏக்கருக்கு மகசூல் எவ்வளவு வருகிறது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம். கோ. க. 8001, கோ.க. 8201 ஆகிய இரு புதிய ரகங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கோ. க. 8001, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களுக்கு ஏற்றது. பிற மாவட்டங்களிலும் பயிரிட லாம்.

கோ. க. 8201 எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது.

(இ) கோ. க. 8001 ஏக்கருக்கு 42 டன்கள் மகசூல் தரும்.

கோ. க. 8201 ஏக்கருக்கு 45 டன்கள் முதல் 56 டன்கள் வரை மகசூல் கொடுக்கவல்லது.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயத்தில் விவசாயிகளுக்கு பயன் அளிக் கிற வகையில் ஒரு குறுகிய காலப் பயிரைக் கண்டுபிடிக்க அரசு முயற்சி எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, யுனிவர்சிடியில் இது தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சி, வெள்ளம் என்று மாறி மாறி வருகிற காரணத்தால் இரண்டையும் தாங்கக் கூடிய விதத்தில் குறுகிய கால பயிராக புதிய ரகத்தைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 8001 என்கிற ரகம் வறட்சியைத் தாங்கக் கூடிய சக்தி கொண்டதாகும்.

**திரு. தி. க. நல்லப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய புதிய ரகங்களை-கரும்பில் எத்தனையோ ரகங்கள்-அரசு கண்டு பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும், அவற்றின் விலை குறைவாக இருப்பதால் அவைகளைப் பயிர் செய்ய விவ சாயிகள் தயங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு விலையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர் களை, நியாயமான விலை வழங்கப்படுகிறது.

---





### சிறுமலைப் பகுதியில் வாழைக்கு ஏற்பட்ட முடிக்கொத்து நோய்.

144—*வினா எண் 21078*—வேடசெந்தூர் **திரு. வி. பி. பாலசுப் பிரமணியன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் வாழைக்கு ஏற் பட்ட 'முடிக்கொத்து' நோயால் மலைவாழை முழுவதும் அழிந்து விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் அப்பகுதியில் வாழைச் சாகு படியை முறைப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை கள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் வாழைப்பயிர் ''முடிக்கொத்து நோயால் பரவலாக பாதிக்கப்பட்டது.

(ஆ) ''முடிக்கொத்து நோயினை'' முழுமையாக போக்க இயலாது. எனினும், தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்கள் அப்பகுதியில் வேளாண் பெருமக்களுக்கு எவ்வாறு''முடிக்கொத்து நோய்'' தாக்கிய வாழைகளைக் கண்டறிவது மற்றும் அதனைக் களைந்தெடுப்பதில் உள்ள முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்ப துடன்செயல்படுத்தியும் வருகின்றனர்.

நோயால் தாக்கப்படாத மலைவாழை கன்றுகளை உற்பத்தி செய்து, அப்பகுதிக்கு வழங்க சேலம் மாவட்டம் சின்னகல்வராயன் மலைப்பகுதியில் சீரிய வாழைத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நோயற்ற கன்றுகள் உற்பத்தி செய்து வருங்காலத் தில் மேற்படி மலைப்பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மிகச் சிறப்பான அந்த சிறுமலை வாழை முடிக் கொத்து நோயால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயத்தையே பாதித்துவிட்டது. மீண்டும் அந்தப் பகுதியில் அந்த வாழையைப் பயிரிட்டால் வராது என்று சொல்கிறார்கள். ஆகவே, முடிக் கொத்து நோயை முழுமையாகத் தடுக்க அரசு தகுந்த ஆராய்ச் சியை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள குடியன்குடிசை என்ற இடத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு இருக்கிறது. இது தொடர்ந்து முடிக்கொத்து நோயைக் கட்டுப்படுத்தவும், தடுக்க வும் போன்ற முயற்சிகளைச் செய்து வருகிறது முடிக்கொத்து நோய் வராமல் வாழை எப்படிப் பயன்படுத்துவது, மற்றும் புதிய வாழை ரகங்களை எப்படிப் பயிரிடுவது என்பதைப்பற்றி வாழை சாகுபடியாளர்களுக்கு விரிவாக்கப் பணி அலுவலர்கள பயிற்சி தந்து வருகிறார்கள்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, சிறுமலை வாழை பயிரிடும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இந்த முடிக்கொத்து நோய் வந்து அந்த நிலங்களைப் பாதித்து விட்டதால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன சலுகைகளை இந்த அரசு செய்ய இருக்கிறது? அவர்கள் வேறு வகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கு உதவி செய்ய அரசு முன் வருமா? அதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

**திரு என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் மலைவாழை மிகவும் புகழ்பெற்றது. அது நல்ல மகசூலைத் தந்து, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளுக்குக் கூட ஏற்றுமதியானது என்று சொன்னார்கள். இப்போது முடிக்கொத்து நோய் அந்த பிரசித்திபெற்ற வாழையை அடியோடு அழித்து விட்டது. இதனால் விவசாயிகள் கடன் தொல்லையாலும் மற்றும் பலவற்றாலும் பாதிக்கப்பட்டு விவசாயம் செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள். நமது அரசு விஞ்ஞான அடிப்படையில் புதிய புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கவும், இந்த நோய் முழுமையாக வராமல் தடுக்கவும் அவற்றை விவசாயிகளுக்கு வழங்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே அந்த நோய் முழுமையாக வராமல் இருக்கவும், நோய் பாதிக்காத புதிய ரகங்களை உருவாக்கவும் சேலம் சின்னகல்ராயன் மலைப்பகுதியில் புதிய வாழைத் தோட்டம் அமைத்து, அந்த நோய் வராத வாழையை உற்பத்தி செய்யவும் போதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அந்த முடிக்கொத்துநோய் திண்டுக்கல் பகுதியில் மட்டுமல்ல, கொடைக்கானல் பகுதியில் கூட முடிக்கொத்து நோய் வந்து, பூராவும் நாசமாகிவிட்டது. அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே இயலாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதே கேள்வியை நான் கேட்டேன். ஓராண்டு ஆகியும் இன்னும் அதற்குப் பரிகாரம் காணமுடியவில்லை. இந்த நோயை அடியோடு ஒழிக்க முடியாதா? எல்லாப் பகுதியிலும் இந்த நோய் வந்து வாழை பாதித்து விட்டது. எத்தனையோ புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கிறோம் இந்த நோயைப்போக்க





ஒரு மருந்து கண்டு பிடிக்கக்கூடாதா? விவசாயிகள் இதனால் அதிக நஷ்டம் அடைந்து இருப்பதால், பயிர்ப்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ் இவைகளைக் கொண்டு வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே அவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான் நாம் புதிய வாழைக் கன்றுகளை தர இருக்கிறோம்.

## 1982 ம் வருடம் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் குடி நீருக்காக போடப்பட்ட கைப்பம்புகள்.

145 *வினா 16463 **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடி தண்ணீருக்காக பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் 1982 ஆம் வருடம் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் புதிதாகப் போடப்பட்ட கைப்பம்புகள் (Hand pumps) எத்தனை?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 469.

(முற்பகல் 9—50)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் இதற்கு முன்னால் போடப்பட்டிருந்த கைப்பம்புகள் எத்தனை? மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கணக்கை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவை எந்த எந்த வகைகளிலே போடப்பட்டவை? எந்த எந்த காலகட்டத்தில் போடப்பட்டவை? நான் இரண்டு மாதங்களுக்கு போடப்பட்ட எண்ணிக்கையைத்தான் கேட்டிருக்கிறேன். அந்த இரண்டு மாதங்களில் இவ்வளவு போடப்பட்டிருக்கின்றனவா? அல்லது வேறு எங்காவது போடப்பட்டவையும் இந்தக் கணக்கிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக எத்தனை இந்த காலகட்டத்திற்குள் போடப்பட்டன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 234 சட்டமன்றத் தொகுதிக்கும் இப்பொழுது எப்படி புள்ளிவிவரம் கொடுக்க முடியும்?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த விவரங்கள் கிடைக்கும் என்று கருதித்தான் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறேன். பொருத்தமுடைய கேள்வி, பதில் வைத்திருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொன்னேன், 469 என்று. இவை கிராமக் குடிநீர் திட்டத்திற்காக வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவைதான்.

[1984 பிப்ரவரி 23

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே அந்தப் பகுதியில் இந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில் நிறைய அடிக் குழாய்கள் போடப்பட்டிருப்பது தான். அப்படிப் போடவேண்டாமென்று சொல்கிறவனல்ல நான். போட வேண்டியதுதான். ஆனால், அதே வேகமும் உற்சாகமும் ஏனைய பகுதிகளிலும் காட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இவை வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவை என்று சொன்னார்கள். வேறு ஏதாவது திட்டத்தின் கீழ் அங்கே குழாய்கள் போடப்பட்டிருக்கின்றனவா ? பெரியகுளம் நாடாளுமன்ற இடைத் தேர்தல் வந்த நேரத்தில் 100 அடி, 150 அடி தூரத்தில் கூட குழாய்கள் போட்டிருக்கிறார்கள். ஓரே ஊரில் 2, 3 இடங்களிலேகூட போட்டிருக்கிறார்கள். இந்த வேகமும் உற்சாகமும் மற்றப் பகுதிகளிலும் காட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் சென்ற ஆண்டு மட்டும் 22,000—க்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகளை 46 கோடி ரூபாய் செலவில் போட்டிருக்கிறோம். மக்களுடைய கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விண்ணப்பம், பிரஷர் அவ்வப்போது அமைச்சரிடம் சொல்லக்கூடிய விண்ணப்பம்—இவைகளை எல்லாம் பார்த்து தமிழ்நாடு பூராவும் சிராக எங்கெங்கே அவசரமோ அவசியமோ அங்கங்கே போடுகிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் தேவையான கைப்பம்புகள் போடப்பட்டிருக்கின்றனவா ? மேலும் சில கைப்பம்புகள் போட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவரவர்களே நான் ஏற்கெனவே சொன்னேன். கோரிக்கை வந்து, பிரஷர் ஜாஸ்தியாக வந்து, அங்கே இருக்கின்ற மக்கள் தேவை என்று சொல்லி, அமைச்சருக்கு விண்ணப்பம் வந்து, அது பரிசீலிக்கபட்டு, 'வாட்டர் போர்டு சேர்மேன்' ஆம், போடலாம் என்று சொன்னால் போடலாம்.

## சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்திற்கு மாற்றும் திட்டம்.

146—*வினா 17173 திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்துக்கு மாற்றும் செயற் குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?



1984 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள கோயம்பேட்டில் புதிதாக 230 ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் மொத்த வியாபாரஸ்தலத்திற்கு கொத்தவால் சாவடி மார்க்கெட்டை மாற்றும் செயற் குறிப்பு உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தை கையகப் படுத்தப்பட்டு மேம்படுத்தும் பணிகள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன. மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு ஆகியவை முடிவடைந்துள்ளன. இத்திட்டம் ரூ. 14.32 கோடி செலவில் ஐந்தாண்டுகளில் முடிவுறலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## ஊத்துக்குளி பேரூராட்சியிலுள்ள அரிசி ஆலைகள்.

147—*வினா 19661 திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சியில் உள்ள பல அரிசி ஆலைகள் தொழிற்சாலைச் சட்ட விதிகளை நடைமுறையாக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆலைகள் அப்படி நடக்கின்றன ? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஆலைகள் எவ்வளவு ? பதிவு செய்யப்படாதவை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இது பற்றி குறிப்பாக அரசுக்கு புகார்கள் ஏதும் வரவில்லை. இருப்பினும் தொழிலாளர் துறை அலுவலர்கள் தொழிற்சாலை சட்டம் 1948—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகளை அவ்வப்போது ஆய்வு செய்து அது சமயம் காணப்படும் குறைபாடுகளுக்கு நடவடிக்கை மேற்கொள்கிறார்கள்.

(ஆ) ஒன்பது அரிசி ஆலைகள் மீது தொழிற்சாலைகள் சட்ட விதி மீறுதலுக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(இ) 1. பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகள்—33

2. பதிவு செய்யப்படாத அரிசி ஆலைகள்—4

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு புகார் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக பெரியார் மாவட்டத்திலிருந்து அங்கே இருக்கின்ற சங்கங்கள் அரசுக்கு புகார் செய்திருக்கிறார்கள் என்பது எனக்குக் கிடைத்த விவரங்கள். இருந்த

போதிலும், இதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே இருக்கிற அரிசி ஆலைகளில் பலவற்றில் தொழிற்சாலை சட்டப்படி ஆய்வு செய்யப்பட வேண்டிய உத்தியோகஸ்தர்கள் சுராராக போக வில்லை என்றும், அங்கே உள்ளே வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கை சரிவர வைக்கப்படவில்லை என்றும், ஒழுங்காக இல்லை என்று தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பெரும் பிரச்சினை யாக இருக்கிறது. இப்படிப்பட்ட விவரங்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பான திட்டங்கள் இருக் கின்றனவா ? இப்போது சொன்ன மாதிரி சில கேஸ்கள் வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்னும் பல ஆலைகளில் மொத்த தொழி லாளர்கள் எத்தனை பேர்கள் என்று பதியாமலே இருக்கிறார்கள். ஒரு சிலரின் பேர்களைத்தான் தொழிற்சாலையில் பதிவு செய் திருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் கிடைத்த தகவலைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் ஒரு சிறந்த தொழிற் சங்கத் தலைவர். அவருக்குக் கிடைத்த தகவலுக்கு மதிப்பு தரும் வகையில் திடீர் சோதனைகளைச் செய்வதற்கான ஏற் பாடுகளை இந்த அரசு செய்யும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை களில் அதிகப்படியான வேலை செய்யும் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட, அரிசன மக்கள், அவர்களை தொழிற்சாலை அதிகாரிகள் தொழிற்சாலைக்கு வரும் போது, அந்தத் தொழி லாளர்களைக் கொண்டு போய், அந்த தொழிற்சாலையின் பெரிய காம்பௌண்டிற்குள்ளே மறைத்து வைத்ததாகக் கூட எனக்குக் கிடைத்த தகவல் இருக்கிறது. எனவே அந்த அதிகாரிகளுக்கு தெரியாதபடி, 'சர்பிரைஸ் செக்' செய்ய வேண்டுமென்றும், அந்த நிர்வாகிகளைப் பார்ப்பதோடு மட்டும் அல்லாமல், தொழிற் சாலையின் டிபார்ட்மெண்டுக்குள்ளே, காம்பௌண்டிற்குள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த தொழிலாளர்களையும் பார்த்து, தொழிலாளர்களிடத்தில் கலந்து பேசி அவர்களையும் கேட்கும்படி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எல்லா தகவல்களையும் சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் அவர்களிடத்தில் சொல்லி, இங்கேயிருந்து அனுப்பப்படும் அதிகாரிகளிடத்தில் எல்லா தகவல்களையும், எவ்வளவு தந்திரமாக செய்ய முடியுமோ, அப்படிச் செய்யச் சொல்கிறேன். கமிஷனரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்.





எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்து, அங்கே தவறுகள் நடக்குமேயானால், அதைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திண்டுக்கல் நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கான மாற்றுத் திட்டம்.***

148—(*வினா 20915)—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு முடிந்து ஆயுள் காப்பீட்டு கழகத்தின் நிதி உதவி பெறுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆயுள் காப்பீடு கழக நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் குடிநீர் நெருக்கடி இப்போது நீண்ட காலமாக இருக்கக் கூடிய பிரச்சினை. இப்போது ஆய்வு முடிந்திருக்கிறது. ஆகவே இப்போது முதல் கட்டமாக 'பைலட் ஸ்கீம்' என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, இதிலே பிரச்சினை எதனால் எழுந்தது என்றால், 1986ஆம் ஆண்டு எவ்வளவு ஜனத் தொகை இருக்க வேண்டுமென்று கணக்கிட்டுப் போட்டோமோ, அதை விட 20,000 பேர்களை அதிகமாக 1981-லேயே உற்பத்தி செய்து விட்டீர்கள். நீங்கள் திண்டுக்கல்லில்தான் இருக்கிறீர்கள். மக்கள் தொகை அதிக மானதால்தான் பிரச்சினை. இல்லையென்றால், இந்தப் பிரச்சினை கிடையாது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி பெற்று வேலை செய்வதாக இருக்கிறது. அந்தத் திட்டம் ஆரம்பித்து தண்ணீர் கொடுக்க ஏற்பாடுகள் செய்யலாமா என்று அதிகாரிகளோடு இந்த அரசு ஆலோசனை செய்யும்.

[1984 பிப்ரவரி 23

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வு செய்து முடிந்து ஒரு பைலட் ஸ்கீமாக ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு கூடுதலான மழை பெய்து அதனால் நிறைய தண்ணீர் இருக்கிறது. ஆனால் திண்டுக்கல் நகரத்திற்கு உதவியாக இல்லை. இந்தத் தண்ணீரை பம்ப் செய்வதற்கு உண்டான ஏற்பாடுகள் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே துரிதமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? அடுத்து, உயர்ந்த அழுத்தமான டாங்குகள் மூலமாக விநியோகம் செய்வதற்கு முயற்சிகளை அரசு எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதை நிறைவேற்றுவதற்கு முன்னதாக இடைக்கால ஏற்பாடாக, தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு ஏதாவது செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வியை நான் என்ஜினியர்கள் இடத்தில் கேட்டு, அவர்கள் முடியும் என்றால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வோம். முடியாது என்றால் கைவிட்டு விடுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 149 மற்றும் 150 ஒன்றாக எடுத்துக்கொள்ளப் பெறும்.

கைத்தறி வளர்ச்சிக்கான திட்டம்.

149 —(*வினா 16524)— **திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1981-82 ஆண்டில் கைத்தறி வளர்ச்சிக்காகப் பல கோடி ரூபாயில் ஒரு திட்டம் உருவாகியுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) இத் திட்டத்தால் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு எந்த அளவு பலன் கிடைக்கும் ?



1984 பிப்ரவரி 23]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலே சேர பங்குத்தொகை கடன், தறிகளை நவீனப்படுத்தல், உற்பத்தி செய்த துணியை நல்ல விலைக்கு விற்பனை செய்தல், வீட்டு வசதி திட்டம் போன்ற திட்டங்கள ரூ. 1733.75 இலட்சம் செலவில் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

(இ) கைத்தறித் துணிகள் மக்களிடையே அதிக அளவில் வாங்கப்படுவதோடு, நெசவாளர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடைந்து வருகிறது.

150 —(*வினா எண். 19072)— **திரு. ஆர். ரங்கசாமி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஈரோட்டில் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் மூலம் எத்தனை தறிகள் இயங்குகின்றன ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புச் கொடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) 3380 தறிகள் இயங்குகின்றன.

(ஆ) 8112 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 17½ கோடி திட்டத்தில் எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் ஆரம்பிப்பதாக உத்தேசம் இருக்கிறதா ? அல்லது படிப்படியாகக் கொண்டு வருவதற்காக அரசு முயற்சிகளை எடுத்து திட்டமிட்டு இருக்கிறதா ? என்பதைப் பற்றி விளக்குவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 1981-82 ஆம் ஆண்டைப் பற்றியது. நான் சொன்னது நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது நிறைவேற்றப்பட்ட திட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த திட்-

டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதாவது அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆண்டுதோறும் நடைபெற்று வருகிற ஒன்றாகும். 1980-81-ல் 743 லட்சம் ; 1981-82-ல் 625 லட்சம் ; 1982-83-ல் 1,760 லட்சம், இப்போது நான் ஏற்கனவே சொன்னதைப் போல 1,735 லட்சம் என்று இப்படி ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிற திட்டங்கள்தான் இவைகள்.

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் உள்ள சங்கத்தின் கொள்கைகள் என்ன ? அதன் மூலம் என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் சிவராமன் அவர்கள் தலைமையில் மத்திய அரசு அமைத்த நிபுணர் குழுவின் அடிப்படையில் தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மற்றும் மதுரை ஆகிய 4 இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களையும் அதேபோல் கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களில் ஏற்றுமதி கிடங்குகளும், 1976-77 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் திட்டம் 5 ஆயிரம் கைத்தறிகளை உள்ளடக்கிய குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், 1976 வாக்கிலே நிர்வாகக் காரணங்களுக்காக தமிழ்நாடு கைத்தறி வர்த்தக கார்ப்பரேசன் என்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தது. இந்த தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டம் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, 5 ஆயிரம் கைத்தறிகளை ஒருங்கிணைத்து அந்தப் பகுதியிலே வாழ்கின்ற நெசவாளர்களுக்கு புதிய டிசைன்ஸ், அதேபோல் மக்கள் விரும்புகிற புதிய துணிகளைத் தயாரித்தல், ஆகியவற்றிற்கு போதிய ஊக்குவிக்கும் திட்டமாக, முன்னோடி திட்டமாக, இந்த 6 இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆகவே இது 1976-லே ஆரம்பிக்கப்பட்டது.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கைத்தறி சங்கங்களுக்கு வரவேண்டிய தொகை பெரிய அளவில் நிலுவையில் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இதனால் பல கைத்தறிச் சங்கங்கள் நிற்கும் நிலையாலும், கைத்தறி துணித் தேக்கத்தினாலும் மிகவும்





நிற்கக் கூடிய நிலைமை ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா? இதைப்போக்குகிற விதத்திலே, கைத்தறிச் சங்கங்களுக்கு தரவேண்டிய தொகையை உடனடியாக கோவாப்டெக்ஸ் நிறுவனம் வழங்குவதற்கான வகையிலே விரைவிலே அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கி இருக்கிற, உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளை, பிரதம சங்கமாக இருக்கும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் வாங்கி 600-க்கும் மேற்பட்ட தன்னுடைய விற்பனை அங்காடிகளின் மூலமாக விற்பனை செய்து வருகிறது. கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் சுமார் 60, 65 கோடி ரூபாய்க்கு மேல் துணிகளின் தேக்கம் இருக்கிறது. இதுபோலவே ஆங்காங்கே உள்ள பிரதம கூட்டுறவுச் சங்கங்களிலும், தேக்கங்கள் அதிகமாகி வருகிறபோது, அவற்றை மக்களிடத்திலே கொண்டு சென்று விற்பதற்காகத்தான் சிறப்புத் தள்ளுபடி அல்லது ரிபேட் போன்ற திட்டங்களை அமுல்படுத்தி விற்பனையை அதிகரிக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 20 சதவீதம் ரிபேட் அளிக்கப்படுவதோடு, 30 நாட்கள் மட்டுமே இந்த ரிப்பேட் என்கிற முறையை 60 நாட்களுக்கு என்று உயர்த்தியும் விற்பனையை அதிகரித்து வருகிறது. ஆண்டுக்காண்டு கோவாப்டெக்ஸின் விற்பனை கூடிக் கொண்டே வந்து, இப்போது 70 கோடியை எட்டியிருக்கிறது. இந்த ஆண்டு 100 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோவாப்டெக்ஸ் மூலமாக பிரதம சங்கங்களுக்குத் தரவேண்டிய பணத்தை கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள தலைமை சங்கத்தைப் போல, கோவாப்டெக்ஸ் நிறுவனம், மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெற்று, நெசவாளர்களுக்கு தறிகள் வாங்கிக் கொடுத்து, அதில் அவர்கள் நெசவு செய்து, பிறகு அவர்களிடமிருந்து துணிகளை வாங்கி விற்பனைக்கு கடைகளைத் திறந்து, இவ்வளவையும் செய்து வருகிற நிலையிலும், மற்ற துணிகளைப் போல் விற்பனை செய்ய முடியாமல் தேங்கிக் கிடக்கின்ற சூழ்நிலையில்தான் இருக்கிறது.

ஆகவே, தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டம் என்ற வகையில், மாவட்டத்திலேயே பெரிய அமைப்பாக செயல்படக் கூடிய அளவிற்கு, மற்ற கைத்தறி சங்கங்களுக்கு வழிகாட்டியாக செயல்பட்டு, புதிய புதிய வடிவமைப்புகளையும், விற்பனை முறைகளையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, பல புதிய சாதனைகளைச் செய்யும் வகையில், அதில் முறைகள் மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 23

பாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இப்போதே கோவாப்டெக்ஸ் நிறு
வனம் இவைகளையெல்லாம் செய்து வருகிறது. மேலும்,
தீவிர கைத்தறி வளர்ச்சித் துட்டத்தின் மூலம் ஜனதா மற்றும்
ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யவும் தகுந்த நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தி
னால் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் பெறுமான துணி ரகங்கள்
அதிகமாகத் தயாரிக்கப்பட வாய்ப்பு உள்ளது, ஏற்கனவே
விற்பனைப் பெருக்கத்திலே அரசு முழுமையாக ஈடுபட்டு
வருகிறது. அதை அதிகரிப்பதற்கான முறையிலே அரசு உரிய
நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆற்காட்டிலுள்ள கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம்.

151—(*வினா எண். 17420)—திரு. ஏ. எம். சேதுராமன் ;
மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆற்காட்டில் கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கும்
சங்கத்திற்கு கிடங்கோடு கூடிய அலுவலகம் கட்டப்பட்டும் அச்
சங்கம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத்
தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்ய
அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆற்காட்டில் உள்ள விவசாய கடன் கூட்டுறவு வங்
கிக்குச் சொந்தமாக கட்டப்பட்டிருக்கிற கட்டிடத்தின் மதிப்பீடு
எவ்வளவு? அதைக் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது? அந்தக்
கட்டிடத்தை தற்போது இந்த கூட்டுறவு வங்கி அனுபவித்துக்
கொண்டு இருக்கிறதா? என்பதையும், அந்தக் கட்டிடத்
தில் அதற்கான அலுவலகமும் சேர்த்து கட்டப்பட்டிருக்கிறதா
என்பதையும், அப்படி இல்லை என்றால், அலுவலகத்தையும்
அங்கேயே இயங்கச் செய்யும் வகையில், அமைச்சர் அவர்களோ,
அரசோ நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்பு
கிறேன்.



1984 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சுமார் 40,000 மதிப்பீட்டிலே இந்தச்
கிராமக் கூட்டுறவுச் சங்கம் கட்டப்பட்டிருக்கிறது. 1981-இல்
கட்டி முடிக்கப்பட்டது. இது ஆற்காடு கிராமத்திலிருந்து
2 கிலோ மீட்டர் தொலைவிலே அமைந்திருக்கிற காரணத்
தாலும் இந்தச் சங்கம் ஆற்காட்டில் உள்ள 4 வார்டுகளுக்கும்
உணவு சம்பந்தமாக அத்தியாவசியப் பொருள்களை வினி
யோகம் செய்து வருகிற காரணத்தாலும், ஊரிலிருந்து இந்தக்
கட்டிடம் 2 கிலோ மீட்டர் வெளியிலே இருக்கிற காரணத்தாலும்
பொது மக்களுக்கு அங்கே கடை இருந்தால் அது இடையூறாக
இருக்கும் என்ற காரணத்தாலும், ஆற்காடு கிராமத்தின் மையப்
பகுதியில் ஒரு வாடகை கட்டிடத்தில், கடையும், கோடவுனுடன்
கூடிய அலுவலகமும் 15—11—1970 முதல் இயங்கி வருகிறது.
இந்தச் சங்கத்தில் நகைக் கடனும் வழங்குகிற காரணத்தால்,
சுமார் 7,26,894 ரூபாய் மதிப்புள்ள நகைகளும் இந்தச் சங்கத்
திலே இருக்கிற காரணத்தால், இது வரையில் ஊரின் மையப்
பகுதியிலேயே இந்த அலுவலகம் இயங்கிக் கொண்டு வருகிறது.

ஆனாலும், இதற்காக ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற இந்த
புதிய கட்டிடத்திலேயே உர விற்பனையும் இந்தச் சங்கத்தின்
மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் புதிய
கட்டிடத்திலேயே சங்க அலுவலகத்தையும் மாற்ற, சங்கத்தி
னுடைய தலைவருக்கு ஏற்கெனவே ஆலோசனை வழங்கப்பட்
டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது ஆற்காடு நகரத்தி
லிருந்து அந்தக் கட்டிடம் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாக
அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. அது ஆற்காட்டை
ஒட்டி இருக்கிறது, கிராமப் பகுதி, அரை கிலோ மீட்டர் கூட
இல்லாத இடத்தில் கோடவுன் கட்டி இப்போது விவசாயிகளுக்கு
அனுகூலமான இடத்தில் இருக்கிறது என்றும் அந்த கோடவுனி
லிருந்துதான் உர மூட்டைகளை வினியோகம் செய்து வருகிறார்
கள் என்றும் தெரிவித்துக் கொளகிறேன். நகைகள் வைப்பதற்கு
வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையிலே
வேலூர் கூட்டுறவுச் சங்கத்திலே கேட்டிருக்கிறோம், அதற்கான
பாதுகாப்பு வசதிகளைச் செய்வதற்கு மனு செய்யப்பட்டிருக்
கிறது. அந்த வசதியை அந்தச் சங்கத்திற்கு உடனடியாக வழங்க
அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே
சொன்னேன். புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற கட்டிடத்திலே
தான் உர விற்பனை நடந்து வருகிறது. அலுவலகமும் புதுக்
கட்டிடத்திலே இயங்க வேண்டுமென்று ஜே. ஆர். மூலமாக

சொல்லப்பட்டு, அந்தச் சங்கத் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தியாவசியப் பொருட்களை சம்பந்தப்பட்ட வார்டுகளிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சங்கத் தலைவருக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படும் நோயாளிகள்.**

152 —(*வினா 18499)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழு நோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகளைச் சேர்க்கும் பொழுது அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சேர்க்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அத்தொழுநோய் பரவும் என்பது உண்மையா ?

(இ) அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) பொதுவாக அது வயது வந்தவர்களுக்குப் பரவுவதில்லை. குழந்தைகள தான் பாதிக்கப்படுவார்கள்.

(இ) குழந்தைகள் பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியிலே தொழு நோயாளிகள் மறுவாழ்வு இல்லத்தில் அந்த நோயாளிகளோடு குழந்தைகள் இருப்பதை நாங்களே பார்த்தோம். அப்படி இருப்பதால் நோய் அவர்களுக்கும் பரவாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியில் பெரியவர்களோடு அவர்களுடைய குழந்தைகள் தங்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நோய் பரவுகிறது என்ற அடிப்படையில் குழந்தைகளைத் தனியாகப் பிரித்து தனியாக விடுதி அதற்காக ஆரம்பித்து பள்ளி விடுதியில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விண்ணம்பள்ளி பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அப்படி ஏதாவது குழந்தைகள் அவர்களோடு இருந்தால் தனியாகப் பிரித்து அந்த விடுதியில் சேர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழு நோய் பரவாதது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : பெற்றோர்களிடமிருந்து அந்தக் குழந்தைகளுக்கு நோய் பரவுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே தனியாக வைப்பதற்கு ஏற்ற முறையில் தனியாக ஹோம் ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நான் விடையிலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். குழந்தைகள் பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

**பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் தினசரி உணவுச் செலவுக்கான தொகை**

153 —*வினா எண். 18524 :—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உறைவோர் தினசரி உணவுக்காக வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்பட்டு மீண்டும் குறைச்சகப்பட்டு விட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

(இ) மீண்டும் உதவித் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

[1984 பிப்ரவரி 23

(இ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ள வயது வந்தோர்க்கு ரூ. 2.30-ம், சிறுவர்களுக்கு ரூ. 1.15-ம் தினசரி உணவுச் செலவுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத் தொகை, 1—9—1974 முதல் அமுலில் உள்ளது. இதனை வயது வந்தோர்க்கு ரூ. 4 ஆகவும், சிறுவர்களுக்கு ரூ. 3 ஆகவும் உயர்த்துவதற்கான செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக இருக்கிற அந்த நோயாளிகளுக்கும் அதே போல் சிறையில் கைதிகளாக இருப்பவர்களுக்கும் கொடுப்பதை விட இங்கே நோயுற்றவர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்கிற தொகை மிகவும் குறைவு என்பது அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறதா? அவர்களுக்குத் தேவையான மாற்றுப் பொருட்கள் கொடுக்காத சூழ்நிலை இருக்கிறது. அதையும் அரசு நிவர்த்தி செய்ய முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழு நோயால் பாதிக்கப்பட்ட அந்த பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும், அந்த இல்லங்களில் அதாவது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற தொகைக்கு ஏற்றவாறு உணவு நல்ல முறையில் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. காலையில் அவர்களுக்கு சிற்றுண்டி, தேநீர், கொடுக்கப்படுகிறது. மத்திய உணவு கொடுக்கப்படுகிறது. மாலையில் தேநீர் கொடுக்கப்படுகின்றது. இரவில் உணவு கொடுக்கப்படுகின்றது. வாரத்திற்கு ஒரு முறை இறைச்சியும் கொடுக்கப்படுகின்றது. காச நோயாளிகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சுதந்திர தினத்திற்கும், காந்தி அடிகள் பிறந்த நாள் அன்றும் மற்றும் முக்கியமான குறிப்பிட்ட நாட்களில் அவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. இப்படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு ஏற்றவாறு உணவு கொடுக்கப்படுகிறது. அந்த உணவுத் தொகையை கூட 4 ரூபாய் பெரியவர்களுக்கும், 3 ரூபாய் சிறுவர்களுக்கும் உயர்த்தலாம் என்ற செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கின்ற தொகைக்கு ஏற்றவாறு உணவு வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் நேரடியாக ஒரு உணவு விடுதியில் சாப்பிட்டேன். அந்த உணவு மிக மோசமான நிலையில் இருந்தது என்பதை சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட நோய் உள்ளவர்களுக்கு காச நோய் உள்ளவர்களுக்கு சிறப்பு உணவாக முட்டை, கறி, பால், ரொட்டி, தேவையான மருந்துகள் கொடுக்க வேண்டும். அவற்றை அரசு கொடுப்பதற்கு முயற்சி செய்யுமா? அதேபோல் சிறைக் கைதிகளுக்கும் மருத்துவ மனையில் உள்ள உள் [illegible]



1984 பிப்ரவரி 23]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தொழுநோய் பற்றியது. சிறைக் கைதிகளைப் பற்றியது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லங்களைப் பார்த்தேன் என்று சொல்கிறார்கள். அந்த உணவு சரியான முறையில் இல்லை என்று அவர்கள் கூறினார்கள். நான் செங்கற்பட்டில் உள்ள பரனூர் இல்லத்திற்கு திடீர் என்று சென்று பார்த்தேன். அந்த உணவுகளைப் பார்க்கின்றபோது அவைகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டு இருந்தது. இப்படிப்பட்ட நல்ல உணவுகளை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு இன்றைக்குச் செய்து இருக்கிறது. நல்ல முறையில் உணவு செய்யப்பட்டு இருக்கிறது என்று அவர்களிடம் சொல்லி விட்டு வந்தேன். நான் கூட அந்த உணவை அருந்தி விட்டுதான் அந்த இல்லத்தைவிட்டு வந்தேன். அந்த அடிப்படையில் நல்ல உணவுகளைத்தான் அவர்களுக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களை எங்கு எங்கே இருக்கிறார்களோ அவர்களை மறுவாழ்வு இல்லத்திற்கு கொண்டு வந்து அடைப்பதைவிட அந்த பிச்சைக்காரர்கள் எங்கு எங்கே இருக்கிறார்களோ அவர்களை அழைத்து அவர்களுக்கு ஒரு தொழில் தொடங்க கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொடுக்க மத்திய அரசிடம் இந்த அரசு ஏதேனும் சிபாரிசு செய்து இருக்கிறதா? அப்படிச் செய்யவில்லை என்றால் அப்படி சிபாரிசு செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்? வாரத்திற்கு ஒருநாள் மனு நீதி நாள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டி மக்கள் குறைகளை கேட்கிறார்கள். அதுபோல இந்தப் பிச்சைக்காரர்களுக்கு என்று ஒரு நாள் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுடைய குறைகளைக் கேட்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்? அதேபோல் தமிழ்நாட்டில் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களுக்கு என்று தமிழ்நாட்டில் தனியாக 10 இல்லங்கள் மாவட்ட வாரியாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் பிச்சைக்காரர்களை அந்த இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு மறு வாழ்வு கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் பிற்காலத்தில் சுயமாக, சுதந்திரமாக வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு தொழில் கற்றுக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும்.

[1984 பிப்ரவரி 23

வாழ்வதற்கான வழி வகைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஆண்கள் மொத்தம் 1,985, பெண்கள் 987, சிறுவர்கள் 316 மொத்தம் 3,288. தொழு நோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் மறு வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.20)

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சைக்காரர்களின் நலத்திற்காக என்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, அதற்குத் தாமரைக்கனி போன்ற உறுப்பினர்களைத் தலைவராக நியமிப்பதற்கான யோசனை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் பதவி ஒன்றும் இப்பொழுது காலியாக இல்லை (சிரிப்பு).

154—

பெரியார் மாவட்டத்திலுள்ள நடமாடும் கால்நடை மருந்தகங்கள்.

*வினா எண். 18603— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இயங்குகின்றன ?

(இ) அவைகளில் என்னென்ன வசதிகள் உள்ளன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு கோபிசெட்டிபாளையம், தாராபுரம் கோட்டங்களில் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் கட்டுப்பாட்டில் மூன்று நடமாடும் கால்நடை மருந்தகங்கள் இயங்குகின்றன.

(இ) இந்த நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திகள் ஒரு வாரத்தில் 5 நாட்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று கால்நடை



1984 பிப்ரவரி 23]

மருத்துவத் தேவைகளை கவனிக்கின்றன. ஒவ்வொரு நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தியிலும் ரூ. 10,000- பெறுமானமுள்ள கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளும், ரூ. 20,000- பெறுமானமுள்ள வைத்தியத்திற்கு தேவையான கூடுதல் வசதிகளும், உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர், ஒரு ஊர்தி ஓட்டுநர், இரு கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளது. குடற்புழு நீக்க பணிகளும், தொற்று நோய் தடுப்பூசி போடும் பணிகளும், மலட்டுத் தன்மை நீக்கத்திற்கான பணிகளும், செயற்கைக் கருவூட்டல் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கால்நடை மருத்துவமனைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. போதாததாக உள்ளது என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா? ஆமெனில், அந்த நடமாடும் மருத்துவ மனைகளுக்கு அதிக அளவிற்கு மருந்துகளை ஒதுக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடமாடும் கால்நடை மருத்துவ மனைகளுக்குப் போதுமான மருந்துகள் சரியாக அளிக்கப் படவில்லை என்பது பற்றிய தகவல் அரசுக்கு வரவில்லை. ரூபாய் 10,000 பெறுமானமுள்ள கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகளும், ரூ. 20,000 பெறுமானமுள்ள வைத்தியத்திற்குத் தேவையான கூடுதல் வசதிகளும், உபகரணங்களும் வைக்கப் பட்டுள்ளன. இதுவே போதுமானது என்று கருதுகிறேன். அப்படிப் போதுமானதாகத் தெரியவில்லை என்றால் அதைப் பற்றி அதிகாரிகளிடத்தில் நான் சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடைகளுக்கு வரும் தொற்று நோய்களைத் தடுக்கும் மருந்துகளை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில மருந்துகள், அதாவது, குடற்புழு நீக்கப் பணிகளும், தொற்று நோய்த் தடுப்பூசி போடும் பணிகளும், மலட்டுத் தன்மை நீக்கத்திற்கான பணிகளும், செயற்கைக் கருவூட்டல் பணிகளும் மேற்கொள்ளப் படுவதற்கான சில மருந்துகளை இலவசமாகக் கூடக் கொடுக்க லாம். அந்த மருந்துகள் தமிழ்நாட்டில் தயார் செய்யக்கூடிய மருந்துகளாக இருப்பதால் கொடுக்கலாம். சில மருந்துகளை இங்கே தயார் செய்ய முடியாமல் இருப்பதால், நிதி நிலைமை

கேற்றவாறு அந்த மருந்துகளை மானிய விலையில்கூடக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### அவையை ஒத்திவைக்குமுன் அவையின் கருத்து அறிதல்.

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை நடவடிக்கைகள் குறித்துச் சொல்வதற்கு—

It is high time இது அவசியம் என்று நான் நினைக்கிறேன். இது குறித்து துணைத் தலைவரவர்களோடு நீங்கள் கொஞ்சம் டிஸ்கஸ் செய்ய வேண்டியது அவசியம்.

நேற்று மாலை வறட்சி, வெள்ளம் சம்பந்தமான விவாதம் நடந்து கொண்டிருந்தபொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பதிலைக் கூறி முடிக்கவில்லை. அவர் பதில் கூறிக்கொண்டிருந்தபோது, திரு. கருப்பையா அவர்கள் இன்டர்வீன் செய்ய எழுந்தபொழுது அமைச்சரவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். ஆனால் என்ன ஆச்சரியம் என்றால் டக்கென்று டெப்டி ஸ்பீக்கர் அவர்கள், அவை முடிந்து விட்டது என்று சொல்லி ஒரேடியாகப் போய் விட்டார்கள். I am telling this, in the interest of the House. வெளியிலே இருப்பவர்கள், இங்கே எப்படி ஹவுஸை நடத்து கிறார்கள் என்பதுபற்றித் தப்பான எண்ணத்திற்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அமைச்சரவர்கள் பேச்சை முடிக்கவில்லை. இவர் இன்டர்வீன் செய்தார். உடனே அமைச் சரவர்கள் உட்கார்ந்துவிட்டார்கள். அதற்குள் துணைத் தலைவ ரவர்கள் எழுந்து அவையை ஒத்திவைத்துவிட்டு கிடுகிடு என்று எழுந்து போய்விட்டார். நாங்கள் அப்படியே Stun ஆகி நின்று விட்டோம். உங்களுக்கும் தெரியும் நாடாளுமன்ற நடைமுறை கள் பற்றி.

The Speaker or the Deputy Speaker are not above the House. They are part of that House. Their power is to regulate all the proceedings of the House, that too under the rules. There is no subordinate–super subordinate relationship or master–servant relationship.





ஆகவே, இனிமேலும் எங்களால் டாலரேட் பண்ண முடிய வில்லை. அவர்களிடத்திலே ரொம்பவும் மரியாதை கொடுக்கின்ற குணம் இருக்கின்றது. சில சமயங்களில் கடுமையாகப் பேசு வார்கள். அவ்வளவுதான். அதை நான் புரிந்துகொண்டேன். வேண்டுமென்று அவர் அவ்வாறு பேசுவதில்லை என்றும் அவரு டைய சுபாவமே, அதாவது இயற்கையான சுபாவமே அதுதான் என்றும் புரிந்து கொண்டேன். ஆனால் இந்த பார்ட்டிகுலர் காண்டெக்ஸ்டை பொறுத்த வரையில், எங்களால் சகிக்க முடிய வில்லை. டாலரேட் பண்ண முடியவில்லை. நான் கன்ஃப்ரண் டேஷனைத் தவிர்க்க விரும்புகிறேன். எனவே இம்மாதிரி விஷயங் களில் டிஸ்கஸ் பண்ணுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய கவனத் திற்கு வந்தது. அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள் என்பதாகத்தான் நான் கேள்விப்பட்டேன். (குறுக்கீடுகள்).

**திரு. பி. எச். பாண்டியன்:** தலைவர் அவர் களே எல்லோரும் பேசி முடித்து விட்டார்கள் என்று அறிந்த தற்குப் பிறகுதான் அவையினை நான் முடித்தேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** அமைச்சர் அவர்கள் நேற்று பேசி முடிக்கவில்லை.

**திரு. ரா. உமாநாத்:** அமைச்சரவர்கள் நேற்று பேசி முடிக்க வில்லை. (கூச்சல் குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** நேற்று அவை முடிந்த தற்குப் பிறகு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய அறை வழியாகத்தான் போனார்கள். எனவே, அப்போது அவர் பேசி முடிக்காதது போல் தோன்றவில்லை. இருந்தாலும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு கள், குழப்பம்) இப்படிப்பட்ட ஏதாவது பிரச்சினை என்றால், அதனை என்னுடைய அறையிலே வந்து சொல்லி இருக்கவேண் டுமே தவிர, திடீரென்று எழுந்து அவையிலே சொல்லக் கூடாது.

**திரு. எல். இளையபெருமாள்:** இது முக்கியமான பிரச்சினை. இதுபற்றி தலைவர் அவர்கள் அவையிலே சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி கலந்துபேசி நல்ல முடிவுகளை எடுக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக எடுக்கின்ற மற்ற பிரச்சினைகள் என்றால் அதற்குரிய முடிவு தெரியும். அதாவது ஆம், இல்லை என்ற வகையிலே முடிவு தெரியும்,

ஆனால் நேற்று விவாதம் நடந்தது வெள்ளை அறிக்கையின் மீது. எனவே, அதிலே அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பேச்சை முடித்துவிட்டார்கள்.

**திரு. எல். இளையபெருமாள் :** இல்லை. அமைச்சர் பேசி முடிக்கவில்லை. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவை முடிந்தபோது நானும் அவையிலே இல்லை. ஆனால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா என்று...... (குறுக்கீடுகள்)...... அதாவது ஒரு பிரச்சினையிலே அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு ஒரு உறுப்பினர் ஏதேனும் ஐயம் கேட்கின்றபோது அதையும் அனுமதித்து, அவ்வாறு அதை அனுமதித்த பிறகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொல்வது என்பதுதான் நடைமுறை. அந்த முறை காப்பாற்றப்பட வேண்டும் என்ற அளவில் ஒத்துக் கொள்கிறோம். எனவே, இனி எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலை அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பியது போன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கின்ற வகையிலே, இருசாராரும் ஒப்புக் கொள்கின்ற நிலைமையில் ஏற்பாடுகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் எடுத்துக் கொள்வார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. தகவல் கோரல்.

**அவை நிகழ்ச்சி தொலைகாட்சியில் தவறாக ஒலிபரப்பப்பெற்றது.**

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் இரவு 9.00 மணிக்குத் தொலைக்காட்சியில் செய்தி அறிவிக்கப்படுவதை நாம் அறிவோம். அப்படி வாசிக்கப்படும் போது நேற்று முன்தினம் ஒரு தவறு நடைபெற்றது ; நேற்றும் ஒரு தவறு நடைபெற்றது. சபையினுடைய நிகழ்ச்சியைத் தவறுதலாக அறிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10·30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் என்ன தவறு என்று எழுதிக் கொடுப்பார்களானால் அதைப் பரிசீலித்துப் பார்க்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** முதலமைச்சர் சொன்னதைத் தவறாக அறிவித்திருக்கிறார்கள். மாநகராட்சியில் ரூபாய் 1,000 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு செய்யப்படவிருக்கின்றது என்று அறிவித்தார்கள். முதலமைச்சர் அவ்வாறு சொல்லவில்லை எங்கே போவது ரூபாய் 1,000 கோடிக்கு என்றுதான் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொன்னேன். எழுதிக் கொடுங்கள், பரிசீலிக்கிறேன் என்று.





### 4. உரிமைப் பிரச்சினை

### ''தினமலர்'' மீது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 21—2—1984 ஆம் நாள் சென்னை பதிப்பு தினமலர் பத்திரிகையில் 4-வது பக்கத்தில் ஒரு கருத்துப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு குரங்கு '' என்னண்ணே, சட்டசபை பக்கம் போயிட்டு இருக்கீங்க'', என்று ஒரு நாயிடம் கேட்பதாகவும், அந்த நாய் '' எங்க சாதிக்காரங்க சத்தம் கேட்குதே, போய் பாத்துட்டு வரலாம்னுதான் '' என்று பதில் கூறுவதாகவும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் அவற்றின் அருகில் வேஷ்டி சட்டை மற்றும் நீளத்துண்டு அணிந்திருக்கும் நபர் ஒருவரும் நிற்கும் காட்சியும் உள்ளது. தினமலர் பத்திரிகை தமிழில் மட்டுமே பிரசுரமாகும் பத்திரிகையாகும். இப்பத்திரிகை நிர்வாகத்தினர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களை வேண்டுமென்றே நாய்களுக்குச் சமமாக பாவித்து வெளியிடப்பட்டுள்ள கருத்துப் படமாகும். இச்செயல் தெரிந்தே அவமானப்படுத்தும் எண்ணத்தில் வெளியிடப்பட்டவையாகும். எனவே, இப்பேரவையை அவமதித்தும், சட்டத்திற்குப் புறம்பாகவும், உரிமைகளை மீறியும் வெளியிட்டுள்ளதால், இந்த உரிமை மீறல் பிரச்சினையை இப்பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, பத்திரிகையினுடைய சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம், என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. பத்திரிகைத் தடைச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என்பது இந்த நாட்டுக்குத் தெரியும். பொதுவாக, இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜனநாயகத்திற்கு வேட்டு வைக்கக்கூடிய ஒரு முறையில் செயல்பட்டிருப்பது ஜனநாயகத்திற்கே ஒரு துரோகம் விளைவிக்கக் கூடிய நிகழ்ச்சியாகத்தான் கருதுகின்றோம். சட்டசபை நடவடிக்கைகளில் சில குறைபாடுகளிருக்கலாம். அந்தக் குறைபாடுகளைப் பொறுத்தவரையில் சில நேரங்களில் கலகலப்பு ஏற்படுத்தக்கூடிய ஒரு நிகழ்ச்சி நிகழலாம். அப்படிப்பட்ட சில காரியங்களைப் பெரிதுபடுத்துவது ஜனநாயகத்திற்கு உதவியாக இருக்காது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில பத்திரிகைகள் வியாபார நோக்கத்திற்காகவே இந்த நடவடிக்கைகளின் சில தேவையற்ற காரியங்களைப் பெரிதுபடுத்தக்கூடிய ஒரு நடவடிக்கையையும் தொடர்ந்து நாம் பார்க்கின்றோம். அது அந்தப் பத்திரிகைகளுடைய நிரந்தர நடவடிக்கை என்பதையும் நாம் கவனிக்க வேண்டியதாக உள்ளது.

அதோடு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஏற்கனவே நமது மேலவையினுடைய உறுப்பினர் மாண்புமிகு வலம்புரி ஜான் அவர்கள் காமன்வெல்த் பேரவையில் ஒரு கருத்

தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றம், சட்டசபை போன்றவற்றில் கூச்சல், குழப்பம் ஏற்படுவதை மக்களின் பிரதிபலிப்பாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கின்றார். ஆகவே, இந்தக் கருத்துப்படம் ஏதோ இன்றைக்கு மட்டும் வந்ததாக நாம் நினைக்க வேண்டாம். அதற்கு முந்தைய நாள், 20 ஆம் தேதிய பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய ஒரு கருத்துப்படம், இதே சட்டசபையில் தூங்கிக் கொண்டிருப்பது போன்று கருத்துப்படம் வெளிவந்திருக்கிறது. அதாவது, இங்கே ஒரு கேள்வி நேரம். சொகுசுப் பேருந்தில் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு இடம் வேண்டுமென்று கேட்கப்படுகிறது. ஆகையினால், அப்படித் தொடர்ந்து வேண்டுமென்றே வந்திருக்கிறது. ஆனால் இது பொதுவானது என்று பொதுமைப்படுத்த முடியாது. அல்லது தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களைக் குற்றம் சாட்டியது அல்ல என்றும் சொல்லி தப்பிக்க முடியாது. காரணம் என்னவென்றால், 20 ஆம் தேதி பத்திரிகையில் கூட இங்கே, சென்னை, என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் வந்திருக்கக் கூடிய நபர்தான் அடுத்த நாள் வந்திருக்கக்கூடிய நபராக— அது தொடர்பாகத்தான் வந்திருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களைச் சிறுமைப்படுத்துகின்ற நோக்கமாகத்தான் இருப்பதாக நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட கீழ்த்தரமான நடவடிக்கை, ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டுமல்ல, இங்கு இருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல, இந்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய வாக்காளர் பற்றியும் இந்தப் பத்திரிகை என்னதான் கருதுகிறது என்பது ஒரு கேள்விக்குறியாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, இந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பாதுகாக்கப்படும் வகையில் இது பிரசுரம் ஆவதைத் தடுக்க முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம். ஏற்கனவே மக்களுக்கு ஏற்படும் பல்வேறு நெருக்கடிகளைப் பற்றி பிரசுரிப்பதற்காகவே இந்தச் சட்டமன்றம் கூடுகிறது; விவாதங்களிலே கலந்து கொள்கின்றோம். ஆகவே, ஒவ்வொரு நிமிடமும் மாறிக் கொண்டு வருகின்ற நாடுகளின் பிரசவ வேதனை என்றுதான் இந்தக் குழப்பத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதும் ஒரு கருத்து. இப்படி சட்டமன்ற உறுப்பினர்களை மிகவும் தரக்குறைவாக மக்கள் மத்தியிலே கருத்துக்கள் உருவாகக் கூடிய முறையிலே வெளியான இந்தக் கருத்துப்படம் உறுப்பினர்களிடையே உரிமையைப் பாதித்து இருக்கிறது. ஆகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த உரிமைப் பிரச்னை உள்ளபடியே அவையில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனைபேருக்கும் மிக்க கவலை தருகிற ஒன்று தான். தினமலர் பத்திரிகையிலே இப்படிப்பட்ட கார்ட்டூன் வந்திருக்கிறது என்பது வியப்பிற்குரிய ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் தினமலர் பத்திரிக்கையைப் பொறுத்தவரையில் அது பொதுவாகவே செய்திகளை வெளியிடுவதில் ஒரு தரமான முறையைத் தான் கையாண்டு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட பத்திரிக்கையிலே இப்படிப்பட்ட கார்ட்டூன்— கேலிச்சித்திரம் வந்திருப்பது வருந்தத்தக்கது. செய்திகளை வெளியிடுகிற போது சட்டமன்றத்தை இழிவுபடுத்துகிற முறையிலே, சட்டமன்றத்திலே இருக்கிற 234 உறுப்பினர்களையும் இழிவுபடுத்துகிறதாக அமைகிற வகையிலே எதற்கும் இடம் கொடுக்கக் கூடாது. ஜனநாயக நாட்டிலே ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிக்கக் கூடிய மனப்பாங்கு மக்களிடத்திலே வளர்ந்தால் தான் நாம் ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும். அப்போது தான் ஜனநாயகம் நிலைக்கும், தழைக்கும், அது தழைக்க வேண்டுமென்றால் ஜனநாயக கருத்துகளுக்கு, ஜனநாயக முறைகளுக்கு மதிப்பு தருகிற பாங்கு பொதுமக்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்துவதற்கு செய்தித் தாள்களும், மற்றவைகளும் உறுதுணையாக இருக்க வேண்டும். ஆனால் கேலிச்சித்திரம் என்பது ஆரம்ப காலத்திலே பார்ப்போமேயானால் குறைகளை நகைச்சுவையோடு எடுத்துச் சொல்கிற ஒன்றாக தான் வந்தது. கார்ட்டூன் என்ற அளவிலே அந்த கேலிச்சித்திரங்கள் சென்ற நூற்றாண்டிலே வர ஆரம்பித்தன. குறைகளை நகைச்சுவையோடு எடுத்துச் சொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட கார்ட்டூன் சமீபத்தில் குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதற்கும், உள்நோக்கம் கற்பிக்கிற வகையிலேயும் வளர்ந்துவிட்டன. அவை குற்றம் சுமத்துகிற ஒன்றாகவோ, உள்நோக்கம் சற்பிக்கிற ஒன்றாகவோ வெளி வருவதை எந்த நிலையிலும் யாரும் அனுமதிக்க இயலாது. பொதுவாக 4-314 கோடி மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கியிருக்கிற இந்த அவையை நாடு எந்த அளவிற்கு மதிக்கிறதோ அந்த அளவிற்குத்தான் ஜனநாயகத்திற்கு மதிப்பு ஏற்படும். இந்த அவையைப் பொறுத்தவரைக்கும் ஏதாவது குற்றம் குறைகள் ஏற்பட்டாலும், விதிமுறைகள் மீறப்பட்டாலும், அவைக்கு இழுக்கு தருகிற செயல்கள் ஏற்பட்டாலும் அதைத் தடுத்து நிறுத்தி, சீர்படுத்த செம்மைபடுத்த முழு அதிகாரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவையிலே ஏதேனும் ஒரு குறைபாடு ஏற்பட்டாலும் அந்தக் குறைபாடு இல்லாத அளவிலே தவிர்ப்பதற்கான முழு உரிமையை பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றிருக்கிற நிலையிலே, வெளியார் யாரும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை; வேறு யாரும் அதை சீர்படுத்த வேண்டிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 பிப்ரவரி 23

உரிமையை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே பொதுவாக எடுத்துச்சொல்லிய இத்தகைய தன்மைகள் உள்ளபடியே சட்டமன்றத்தை இழிவு படுத்துகிற ஒன்றாகவும், உள்நோக்கம் கற்பிக்கிற ஒன்றாகவும் இருக்கிறது. குறிப்பிட்ட தன்மையிலே யாராவது தவறு செய்வாாகளானால், இழிவு படுத்துகிற வகையில் நடந்து கொள்வார்களானால், அதைத் தடுத்து நிறுத்த, தண்டனை கொடுப்பதற்கு பேரவைக்கு முழு உரிமையும் இருக்கிறது. அண்மையிலே கூட பேரவைத் தலைவர் ஆகிய நீங்கள் குறிப்பிட்ட போது இந்த அவை, அவையைச் சேர்ந்த செயலகம் மற்றவைகள் பற்றிய முழு பொறுப்பும் பேரவைத் தலைவரைத் தான் சேர்ந்தது. உயர்நீதிமன்றத்திற்குக் கூட இந்தப் பேரவையில் நடக்கிற செயல்களை கண்காணிக்கவும், விசாரிக்கவும் தீர்ப்பளிக்கவும் முன் வந்தாலும் உரிமை இல்லையென்றும், அதற்கு இந்தப் பேரவை இடம் கொடுக்க முடியாது என்றும் தாங்களே அறிவித்திருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்னை மிக மிக கவலைக்குரிய பிரச்னை தான். ஆனால் நான் கேள்விப்படுவது அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து தங்களிடத்திலே வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே இந்தக் கார்டூன் வந்ததற்கு வருந்துகிறோம் என்று சொல்லி செய்தி வெளியிட்டு தங் ளுக்கும் அறிவித்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்தவகையில் அவர்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் முன்னெச்சரிக்கை செய்து தாங்கள் விட்டு விடலாம். இந்தப் பிரச்னையில் அவர்கள் வருத்தம் தெரிவித்ததை ஏற்றுக்கெ ண்டு விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். ஆகவே உவமை சொல்வதற்குக் கூட, தொல்காப்பியனார் அவர்கள் அழகாக சொல்லி இருக்கிறார்கள். 'உவமை தானே உயர்ந்ததன் பேற்றே' என்று சொன்னார்கள். எப்போது உவமை சொல்கிறபோது உயர்ந்த பொருள்களை வைத்து சொல்ல வேண்டுமே தவிர, தாழ்ந்த பொருள்களை வைத்து உவமை சொல்லக் கூடாது. இந்தப் பிரச்னையில் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். தங்கள் தவறை அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். இருந்தாலும் தாங்கள் இந்தப் பிரச்னையை அடிப்படையாக வைத்து எதிர்காலத்திலே இது போன்று வராமல் இருப்பதற்கு எல்லா செய்தித் தாள்களுக்கும் பொதுவாக அமையத்தக்க வகையிலும், தினமலருக்கு குறிப்பிட்டு அமையத்தக்க வகையிலும் எச்சரிக்கை செய்து விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையை அவையே நேரடியாக எடுத்து இருப்பதால், அவையின் சார்பாக முன்னவர்கள் அவர்கள் சொன்னார்கள். நானும் என்னுடைய கருத்தை சொல்லிய



1984 பிப்ரவரி 23] [திரு. ரா, உமாநாத்]

பிறகு தாங்கள் இதிலே தீர்ப்பு அளிப்பது நல்லது. அந்தப் பத்திரிகையில் வந்த கார்ட்டூனையும் நான் பார்த்தேன். அவர்கள் வருத்தம் தெரிவித்து செய்தி வெளியிட்டதையும் பார்த்தேன். கார்ட்டூன் போட்டு இருப்பது முதல் பக்கத்தில், ரொம்ப பிராமினென்ட்டாகத் தெரிகிறமாதிரி போட்டு இருக்கிறார்கள். ஆனால் வருத்தம் தெரிவிப்பது 3-வது பக்கத்தில் வருகிறது. அதைக் கூட வருத்தம் என்று போடாமல், 'வாசகர்களின் கவனத்திற்கு' என்று அறிவிப்பு மாதிரி போட்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் அவையே அது 'ப்ரிச் ஆப் பிரிவிலேஜ்' என்று கருதி இருப்பதால், அதன் மீதான முடிவு எடுப்பதற்கு முன், அந்தப் பத்திரிகை எந்தப் பக்கத்தில் அந்தக் கார்ட்டூனை பிராமினென்ட்டாக பப்ளிஷ் செய்ததோ அதே இடத்தில் ''வருந்துகிறோம்' என்பதையும் பிராமினென்ட்டாகப் போட வேண்டும் என்று பேரவைத் தலைவர் தெரிவித்தால், அது இந்த அவையின் மரபையும், கெளரவத்தையும் காப்பாற்றியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கார்ட்டூனை முதல் பக்கத்தில் போட்டு விட்டு, வருத்தத்தை 3 ஆம் பக்கத்திலே போடுவது சரியல்ல. வருத்தம் தெரிவிப்பதும் முதல் பக்கத்திலேயே வரவேண்டும். அப்படிச் செய்யச்சொல்வதுதான் வருங்காலத்தில் இந்த அவையின் கண்ணியத்தையும், கெளரவத்தையும் காப்பதற்கு வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் நீங்கள் எடுக்கிற நடவடிக்கை எதுவாக இருந்தாலும் அது அவையின் முடிவாக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதிலே சந்தேகம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட பத்திரிகைகள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன். அரசாங்க சார்பில் அவர்களுக்கு எந்தவிதமான விளம்பரமும் கொடுக்கக்கூடாது. அது நிறுத்தப்பட வேண்டும். அப்போது தான் அவர்கள் அதை உணருவார்கள். அப்படிச் செய்யவில்லையென்றால், இப்போது வருத்தம் என்று சொல்லி விடுவார்கள், பிறகு 6 மாதம் கழித்து மறுபடியும் அதையே செய்வார்கள். ஆகவே, இதை ஒரு கடுமையான விஷயமாகக் கருத வேண்டும் என்பதை தான் இங்கே வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமலர் பத்திரிகைக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பத்திரிகையில் இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களைப் பழிப்பதுபோல் கேலிச்சித்திரம் வந்திருப்பது வருந்தத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர்கள்

சொல்லியதுபோல் அந்த வருத்தம் தெரிவிப்பதை முக்கியத்து வம் கொடுத்து வெளியிடச் செய்ய வேண்டும். அதுமட்டு மல்லாமல், இங்கே இப்போது நடந்த விவாதத்தையும் முழுமை யாக அவர்கள் வெளியிட வேண்டும் என்று சொல்ல வேண் டும். அப்படிச் செய்தால் தான் எதிர்காலத்தில் இந்த மாதிரி நிகழ்ச்சி நடைபெறாமல் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கி றேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, 'தினமலர்' பத்திரிகையில் வந்ததைப் பற்றி மாண்புமிகு உமாநாத் அவர்கள் தெரிவித்ததில் இரண்டு விதக் கருத்துக்கு இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். இப்படி தவறு செய்யும் பத்திரிகைகளுக்கு உரிய முறையில் பாடம் கற்பிக்க வேண்டும் என்றால் அரசு தரும் விளம்பரங்களைக் கொடுக்கக்கூடாது. அப்போதுதான் இப் படிப்பட்ட நிலைமை எதிர்காலத்தில் நீடிக்காமல் இருக்கும். அந்த நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கள் இங்கே எடுத்துத் தெரிவித்த உணர்வுகளை அந்தப் பத்தி ரிகைக்கு எழுதுகிறேன். அந்தக் கார்ட்டூனை நானும் பார்த் தேன். திரு. கிருஷ்ணன் அவர்களும் அதைப் பற்றி உரிமைப் பிரச்னை எழுதிக் கொடுத்தார்கள். அதை எடுத்துக்கொள்ள லாம் என்று இருந்தநேரத்தில், அதற்குள்ளாக அந்தப் பத்திரி கையே 3-ம் பககத்தில் வருத்தத்தைத் தெரிவித்து இருக்கிறது. இருந்தாலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள உணர்வுகளை நான் அந்தப் பத்திரிகைக்கு அனுப்புகிறேன். அந்தப் பத்திரிகை என்ன நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதைப் பார்த்து, பின்னர் என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கி றேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இதிலே, இரண்டு ப்ரொசீஜர் இருக்கிறது.

Now it has been taken in the House........
(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கள் அனைவரும் முன்பக்கத்தில் அந்தப் பத்திரிகை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதை அந்தப் பத்திரிகைக்கு நான் எழுதுகிறேன். அவர்களுக்கு ஒரு நாள் அவகாசம் கொடுப்போம். அதற்குப் பின் நான் என்னு டைய தீர்ப்பை அளிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தைபோல், முதல் பக்கத்திலேயே வருந்துகிறோம்



என்று அந்தப் பத்திரிகை வெளியிட வேண்டும். அந்தப் பத்தி ரிகை என்ன செய்கிறது என்பதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு தீர்ப்பு வழங்கும் முறையைத் தாங்கள் பின்பற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான்கூட தினமலர் பத்திரிகையைப் பார்த்தேன். அவர்கள் வருத்தம் தெரி வித்துப் போட்டிருப்பது என்னுடைய கண்ணுக்குத் தெரிய வில்லை. பின்னால்தான் அலுவலகத்தில் உள்ளவர்கள் 3-ம் பக்கத்தில் வருத்தம் தெரிவித்து போட்டிருக்கிற செய்தியை எடுத்துக் காட்டினார்கள். அதிலே, "தினமலர் இதழில் வெளியான கார்ட்டூன் சட்டமன்ற உறுப்பினர்களை இழிவு படுத்துவதாக உள்ளது என்று சில உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்தகைய நோக்கம் எதுவும் தினமலருக்கு கிடையாது. எனினும், அவர்கள் மனம் புண்படக் காரணமாக அந்த கார்ட்டூன் அமைந்துவிட்டதற்காக வருத்தத்தைத் தெரி வித்துக் கொள்கிறோம்" என்று போட்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களையும் கேலி செய்கின்ற வகையிலே அந்தக் கார்ட்டூன் இருக்கிறது. அதைப்பார்த்து நானும் வேதனைப் படுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வு களை மதித்து, முன் பக்கத்திலேயே வருத்தம் தெரிவித்து செய்தி வெளியிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவர்கள் அந்தவகையில் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பொதுவாக கார்ட்டூனுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப் பதில்லை. எத்தனையோ கார்ட்டூன்கள் பற்றி உரிமைப் பிரச் சனை கொடுக்கப்பட்டாலும் அவற்றை எல்லாம் கார்ட்டூன் தானே என்று சொல்லி சமாளிப்பதுதான் இதுவரை என்னுடைய வழக்கமாக இருந்தது. பத்திரிகைகளில் எவ்வளவோ போடுகி றார்கள். ஆனால் இந்த கார்ட்டூன் கொஞ்சம் அதிகமாகவே போய், அனைவருடைய மனதையும் புண்படுத்தியிருக்கிறது. இந்த அவையைப் பொறுத்தவரையில் இங்கே கருத்து மாறு பாடுகள் வரலாம். வேறு விளைவுகள் வருவதில்லை. உணர்வு களின் அடிப்படையில் கருத்து மாறுபாடு வரும்போது கொஞ்சம் சத்தம் அதிகமாக இருக்கும். அது சத்தம் என்று நினைக்கிற வர்களுக்கு சத்தமாகத் தெரியும் ; அதேநேரத்தில் வார்த்தை என்று நினைத்தால் வார்த்தையாகத் தெரியும் ; கருத்து என்று நினைத்தால் கருத்தாகத் தெரியும். அது அவரவர் நினைப்பைப் பொறுத்தது ; மனப்பான்மையைப் பொறுத்தது. சட்டமன்றத்தில், நாடாளுமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சி கள் பலவகைப்பட்டவை. அதைப்பற்றி கார்ட்டூன் போட்டு, தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு, உறுப்பினர்கள் மனதை புண்படுத்துவது முறையல்ல. இந்த அவையின் உணர்வுகளை மதித்து, நாளை அவர்கள் எப்படி செய்தி வெளியிடுகிறார்கள் என்று பார்த்து, பின்னர் என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக் கிறேன்.

[1984 பிப்ரவரி 23

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, ஒரு காலத்தில் நீங்களும் பத்திரிகை ஆசிரியராக இருந்திருக்கிறீர்கள். இன்றைக்கும் பத்திரிகையில் எழுதக்கூடிய எழுத்து வல்லமை உடையவராக இருக்கிறீர்கள். எனவே பத்திரிகை நடைமுறையைப் பற்றி, சில தன்மைகளை ஒட்டி, உங்கள் எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். ஒரு தனிப்பட்ட ஆளைப்பற்றி இப்படி வரைவது, அந்த தனிப்பட்டவர் விருப்பத்தைப் பொறுத்தது, அவருடைய மனப்பாங்கைப் பொறுத்தது. ஆனால் இந்த மன்றத்தையே அவமானப்படுத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. நீதிமன்றங்களை விட, உயர்நீதி மன்றத்தை விட இந்த மாமன்றமே சுப்ரீம் என்ற நிலையை இரண்டு, மூன்று முறை நீங்கள் நிலைநிறுத்தியிருக்கிறீர்கள். கோர்ட் நோட்டீஸ் வந்தாலும் வாங்கக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். இது ஒரு 'இன்டிப்பென்டன்ட் பாடி'' என்பதை நீங்கள் நிலைநாட்டியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட இந்த மாமன்றத்தை இழிவுபடுத்தியிருக்கிறார்கள். இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்கள், சபாநாயகர் எல்லோரும் இருக்கிறார்கள். அத்தனை பேர்களுடைய உள்ளமும் வேதனைப்படக்கூடிய அளவுக்கு கார்ட்டுன் போட்டிருக்கிறார்கள் என்றால் இதிலே நீங்கள் லீனியன்டாக இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே நான் லீனியன்டாக இல்லை. மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதை முன்பக்கத்தில் போட வேண்டும் ; நாளையே போட வேண்டும் என்று சொல்கிறேன். அவர்கள் எப்படிப் போடுகிறார்கள் என்பதைப் பார்த்து, என்னுடைய தீர்ப்பை பின்னால் வழங்க இருக்கிறேன்.

### 5. கவன ஈர்ப்பு.

பெரியார் மாவட்டத்தில் பல்லாயிரம் ஏக்கரா நெல் பயிர் பூச்சி தாக்கப்பெற்று பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், ச. பாலகிருஷ்ணன், ஆர். ரங்கசாமி, பி. ஜி. நாராயணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டத்திலுள்ள தடப்பள்ளி, காளிங்கராயன், அரக்கன் கோட்டை வாய்க்கால் பாசனங்களில் பயிரிடப்பட்டுள்ள ஐ. ஆர். 50 நெற்பயிர்கள் இலைக்கருகல் நோய் மற்றும் பூச்சிகளால் தாக்கப்பெற்று 20,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப் பெற்றுள்ளதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1984 பிப்ரவரி 23] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இவ்வருட பனிக்கால பருவ நிலை வழக்கத்திற்கு மாறாக மிக்க குளிராக இருந்தது. இரவு வெப்பநிலை மிகவும் குறைவாகவும் ஈரப்பதம் அதிகமாகவும் இருந்தது. கடந்த டிசம்பர் மாத கடைசி வாரத்தில் அடித்த புயல் மழைக்குப் பிறகு கால நிலை மப்பும் மந்தாரமுமாகவே இருந்து விட்டது. இந்நிலை குலைநோய் தாக்குதலுக்கு மிகவும் சாதகமாகப் போய்விட்டது. பெரியார் மாவட்டத்தில் இக்குலை நோய் ஐ. ஆர். 50-ல் 1,500 ஏக்கரில் தாக்கியுள்ளது. ஐ. ஆர். 50 அதிக விளைச்சல் தரவல்லது. ஆனால் குளிர், பனி மாதங்களில் இதனைப் பயிரிடக்கூடாதென் இணை வேளாண்மை இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டது. இந்த அறிவுரையை மீறி கடந்த வறட்சி ஆண்டுகளில் ஐ. ஆர். 50 பயிரிட்டு அதிக மகசூலை பெற்றதன் காரணமாக இவ்வாண்டும் குளிர் காலத்தில் விவசாயிகள் அதை பயிரிட்டார்கள்.

2. இணை வேளாண்மை இயக்குநர், பெரியார் மாவட்டம், மேற்படி நோய் தாக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டு தக்க பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார். அதிக பலனளிக்கும் பூஞ்சான நோய் மருந்துகள் தாக்கப்பட்ட பரப்பில் தெளிக்கப்பட்டு இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது.

3. இந்நோய் தாக்கப்பட்டதன் விளைவாக தாக்கப்பட்ட ஐ. ஆர். 50 மகசூல் ஏக்கருக்கு இரண்டு டன் உற்பத்தியாவதற்குப் பதில் குறைவான மகசூல்தான் தரும்.

4. விவசாய துறை அலுவலர்களால் உடனடி தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் இக்குலை நோய் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது. தேவையான பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு தேவையான போதெல்லாம் கிடைப்பதற்காக எல்லா விவசாயக் கிடங்குகளிலும் போதிய அளவு வைக்கப்பட்டிருந்தது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, விளக்க அறிக்கையில் 75 சதவீதம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், ஐ. ஆர். 50 நெல் சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1984 பிப்ரவரி 23

சுமார் 1,400 ரூபாய்க்குமேல் சாகுபடி செலவு ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்ற அளவுக்கு விவசாயம் செய்திருக்கிறார்கள். ஆகவே இதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் ரூ. 1,400 செலவுசெய்த உற்பத்தி செலவில், சுமார் 50 சத வீதத்தையாவது, அரசு அவர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுத்து உதவும் படி முன்வருமா என்றும், அல்லது குறைந்த பட்சம் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில் நிலவரி, மற்றும் தண்ணீர் தீர்வை இவைகளை ரத்து செய்வதற்கும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு அதை ரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா. என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நோயால் பயிர்கள் பாதிக்கப்படக் கூடிய நேரத்தில், நாம் நிலவரி, தண்ணீர் வரி இவைகளை ரத்து செய்வது இயலாது. குறிப்பிட்ட வகையிலே ஏற்பட்டிருக்கின்ற இந்த பாதிப்பை அரசு கருத்தில் கொண்டு, என்ன சலுகையை அளிக்க வேண்டுமோ, அதை அளிக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கும். அந்த வகையில் வேளாண் பெரு மக்களுக்கு உதவி செய்து வருகிறது. ஆனால் நிலவரியை ரத்து செய்ய வேண்டிய நிலைமைகள், தேவைகள் ஏற்படுமானால், ஆட்சித் தலைவருடைய கருத்தைப் பெற்று, அதை அரசு ஆலோசிக்கும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் போகம் அறுவடை செய்யும் சமயத்தில் பெருத்த மழையின் காரணமாக அறுவடை செய்ய முடியாமல் பெருத்த நஷ்டத்திற்கு விவசாயிகள் ஆளானார்கள். பட்டகாலே படும், கெட்ட குடியே கெடும். என்பது போல பயிர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளானார்கள். அதைப் போல இரண்டாம் போகம் பயிரிட்ட போது, இலைக்கருக்கு நோயால் பயிர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகள் மீண்டும் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு நஷ்ட ஈடு செய்யும் வகையில், அவர்களுக்கு உதவிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப் போல, மானிய விலையில் மருந்துகளைக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய சாகுபடியைத் துவங்குவதற்கு,



1984 பிப்ரவரி 23] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

ஆகியவைகளையும் இலவசமாக விதை நெல்லையும், உரம், மருந்து கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இலவசமாகக் கொடுப்பது என்றால் பல்வேறு தவறுகளுக்கு வழிவகுக்கும். ஆங்காங்கே பாதி மானிய விலையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முற்படும்.

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இழப்பு அரங்கோட்டை வாய்க்கால் பகுதியில் சுமார் 4,000 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறுகிய காலத்தில் குறைந்த தண்ணீர் இருந்த காரணத்தினால், ஒரே நேரத்தில் அனைவரும் சாகுபடி செய்ய வேண்டுமென்று எண்ணி, அதிகமான முட்டுவழிச் செலவு செய்தும், அந்தப் பயிர் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த நாற்றுகளைக் களைந்து, மாடுகளை விட்டு, மேய்க்கும் அளவிற்கு கெட்டுப் போயிருக்கிறது. அந்தப் பாதிப்பிற்காக, அரசு துறையினால், ஏதாவது மான்யம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அந்த விதமான பாதிப்பு மதுரை மாவட்டம் கம்பம் பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. ஐ. ஆர். 50-லே ஏற்பட்ட பாதிப்பினால் துன்பத்திற்குள்ளான விவசாய மக்களுக்கு மான்ய விலையில் விதைகள், பூச்சி மருந்து, உரம் வழங்க இருப்பதை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 32 (1) ஐ அரசு அலுவலுக்கென தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 32(1)-ஐ தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

[1984 பிப்ரவரி 23

(ஆ) விதி 30 (3)ன் கீழ் அலுவல் வரிசை மாற்றம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவையின் விதி 30 உள் விதி (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4. அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து, மற்றவற்றைத் தொடர்ந்து வரிசைப் படி எடுத்துக் கொள்ளலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன் வடிவு 1984— தொடர்ச்சி.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நேற்று நான் இந்தச் சட்டத்தின் மீது பேசியதைத் தொடர்ந்து இன்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் வீடியோக் கள் மூலம் திரைப்படம் காட்டுவதற்கும், அப்படி திரைப்படம் காட்டுகின்றபோது, பொது இடங்களில் அவைகள் காட்டப்படுமானால், அரசாங்கத்தினுடைய லைசென்ஸ் பெற வேண்டும். அதைப் போலவே வீடியோ லைப்ரரி வைத்திருப்பதற்கும், அரசாங்கத்தினுடைய லைசென்ஸ் வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய தணிக்கை செய்யப்பட்ட படங்கள் தான் காட்டப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், வீடியோவிலே படம் பார்ப்பதாக இருந்தாலும், பொது இடங்களில் பார்ப்பதாக இருந்தாலும், வீடியோ லைப்ரரி வைப்பதாக இருந்தாலும், அவர்கள் எல்லாம், படத்தை எடுத்த சொந்தக்காரர்கள் இடத்திலேயிருந்து, காப்பி ரைட் சம்பந்தமாக, கன்சன்ட் லெட்டர், சம்மதக் கடிதம் வைத்திருக்க வேண்டும். அப்படி இந்த ஷரத்துக்களை மீறினால், ஒரு வருடம் ஜெயில், அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம், அதைப் போலவே தணிக்கை செய்யப்பட்ட படம் காட்டாமல் வேறு படத்தைப் போட்டாலும், 3 மாதம் ஜெயில், ஆயிரம் ரூபாய் அபராதம். போலீஸ் அதிகாரிகள் இந்த மாதிரி, வீடுகளிலே நாம் திரைப்படங்கள் பார்த்துக் கொண்டு இருந்தாலும், பொது இடங்களில் பார்த்துக் கொண்டிருந்தாலும், அல்லது வீடியோ லைப்ரரி வைத்திருந்தாலும், லைசென்ஸ் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அந்த இடங்களில், சென்சார் செய்யப்படாத படங்கள் காட்டப்படுகின்றன என்ற தகவல் வந்தால் போதும், போலீஸ் அதிகாரிகள் அதை நம்புவதற்குக்



1984 பிப்ரவரி 23] [திரு. அ. ரகுமான்கான்]

காரணம் என்று அவர்கள் கருதுவார்களேயானால், இரவு நேரங்களில், பகல் நேரங்களில் அவர்கள் போகலாம், நடவடிக்கை எடுக்கலாம், வன்முறையைப் பயன்படுத்தலாம் அவர்களைக் கைது செய்யலாம. அவர்கள் ஜாமீனிலே வரமுடியாது என்ற ஷரத்துக்களை எல்லாம் உள்ளடக்கி இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றம் என்பது எவ்வளவு மாண்புமிக்கது என்பதைப் பற்றி எல்லாம்— இங்கே சற்று நேரத்திற்கு முன்னர்தான்,—ஓர் பத்திரிக்கை இந்த சட்டமன்றத்தைக் குறித்து ஒரு கேலிச் சித்திரம் வரைந்தது தொடர்பாக—இந்த நாட்டுக்கு நாம் நினைவு படுத்திக்கொண்டு இருந்தோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே இருச்கிற ஒரு சட்ட முன்வடிவைப் பற்றி விவாதிக்கிறார் கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய பிறகு, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும், இந்த நாட்டு மக்களுக்காக. அவர்கள் பேசுகிறபோது இந்தச் சட்ட முன்வடிவிலே இருக்கின்ற பிரிவுகளைப் பற்றி குறிப்பிட்டுக் கொண்டு வருகிற நேரத்தில், போலீஸ் அதிகாரிகள் எப்போது வேண்டுமானாலும், உள்ளே போகலாம், இரவு, பகல் என்று எந்த நேரத்திலே வேண்டுமானாலும் நுழையலாம், அவர் களாசவே திருப்திப் பட்டுக் கொண்டால் நுழையலாம் என்று சொல்லிக கொண்டு வருகிறபோது, வன்முறையைப் பயன்படுத்த லாம் என்று அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வன்முறையைப் பயன்படுத்தலாம் என்று இந்தப் பிரிவிலே ஏதாவது குறிப்பிடப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு தெரியப்படுத்துகிறேன். ஒரு போலீஸ் அதிகாரி, வீட்டிற்குள்ளே நுழைவதாக இருந்தால் சர்ச் வாரண்ட் இல்லாமல்— மூலச்சட்டத்தில் கூட சொல்லப் பட்டிருக்கிறது 'ஈவன் பை யூசிங் போர்ஸ்',—இந்தச சட்டத்திலே அந்த வாசகம் பர்ட்டிகுலராக இருக்கிறதா? இல்லையா என் பதை அமைச்சர் அவர்கள் இங்கே எந்த அர்த்தத்தில் கேட் கிறார் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து அந்த சூழ்நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு சில அதிகாரங்கள் தரப்படுகின்ற நேரத்தில், வன்முறை என்று நாம் பயன்படுத்துகிற அந்தப் பொதுவான பொருளிலே, அது பயன் படுத்தப்படுகிறதா என்பதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 23

திரு. அ. ரகுமான்கான் : Police is entitled to enter into a house even using force என்று தான் சட்டத்திலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மினிமம். போர்ஸ் உள்ளே நுழையும் போது தடுத்தால் என்றுதான் இருக்கிறது.

(முற்பகல் 11–00)

திரு. அ. ரகுமான்கான் : போலீசினுடைய வார்த்தையில் சொல்லவேண்டும் என்றால், போலீசினுடைய லேங்வேஜில் சொல்லவேண்டும் என்றால், ரத்தக் காயங்கள் ஏற்பட்டு, ரத்த ஆறாகப் பெருகி ஓடினாலும் கூட, அதை அவர்கள் மைனர் லத்தி சார்ஜ் என்றுதான் சொல்வார்கள். ஆகவே, அந்த வாக்கியங்கள் எப்படி இருக்கிறது என்பது அல்ல பிரச்சினை. The spirit of law mu t be understood and not the letter of the law

ஆகவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்புகள் இருப்பதோடு, இப்படி படம் போடுவதற்கான லைசன்ஸ் வழங்கும் அதிகாரம்—வீட்டிலே வீட்டிற்கு இல்லை—வெளியிலே பொது இடத்திலே இப்படி வீடியோ படம் போடுவதற்கோ அல்லது வீடியோ லைப்ரரி வைத்துக் கொள்வதற்கோ லைசன்ஸ் வழங்கும் அதிகாரம் மாவட்ட கலெக்டரிடம் இருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரையில் மாநகராட்சி கமிஷனரிடம் இருக்கிறது. அதற்கென்று சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்ற ஷரத்துக்களும் இங்கே சொல்லப்படுகிறது.

அது மட்டும் அல்ல, அரசாங்கம் விரும்பினால் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடாது என்பதை அடிப்படையாக வைத்தே, இன்ன படத்தை வெளியிடலாம், இன்ன பட்த்தை வெளியிடக் கூடாது என்று உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கலாம் ; அதே போல அரசு நினைத்தால் லைசன்ஸ் இல்லாமலே கூட யார் வேண்டுமானாலும் வீடியோ படம் போட்டுக் கொள்ளலாம், வீடியோ லைப்ரரி நடத்திக் கொள்ளலாம். படம் போடுபவர்கள் தனி நபர்களோ அல்லது நிறுவனங்களோ, அரசாங்கம் இதிலே இருக்கிற ஒரு கிளாஸ்படி, ஒரு பிரிவின்படி யாருக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு வழங்கலாம் என்று இதிலே இருக்கிறது . . . . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கே இதற்கான விளக்கத்தை தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் ஒரு தவறான கருத்தையே எடுத்துக் கொண்டு திரும்ப திரும்ப நீண்ட நேரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்றும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கும் பேசிகொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கப் போகிறார்களோ தெரியவில்லை. அது உங்களுடைய அனுமதியைப் பொறுத்தது.



1984 பிப்ரவரி 23] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ஆனால் அவர்கள் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அரசு அதிகாரம் வைத்துக் கொண்டிருக்கிறது, யாருக்கு வேண்டுமானாலும் அனுமதிக்கலாம் என்பதற்காக என்று. நேற்றே சொல்லியிருக்கிறேன். இங்கே இருக்கிற சட்டத்திலே தரப்பட்டிருக்கிற சில பிரிவுகளிலே, விதிகளிலே, எந்த நேரத்திலேயாவது விதிவிலக்கு தருவதற்கு அவசியம் ஏற்பட்டால், தருவதற்காகத்தான் அந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே, மீண்டும் மீண்டும் தவறான கருத்தையே தவறான பொருளை தருகின்ற வகையிலே—அது அவருக்கு பழக்கமாக இருப்பதினாலேயே—அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் போட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத்திலே யார் வேண்டுமானாலும் லைசன்ஸ் இல்லாமல் வீடியோ படம் காட்டுவதற்கு, லைப்ரரி வைத்துக்கொள்வதற்கு முடியுமா முடியாதா என்பதே சரியாக புரியவில்லை. ஏன் என்று சொன்னால்—சர்டிபிகேட் இல்லாத படம் காட்டுவதற்கு அரசாங்கம் விரும்புகிறதா இல்லையா என்பது வேறு விவகாரம். நம்முடைய அமைச்சரைப் பொறுத்தவரையில் பாரபட்சம் இல்லாதவர். உள்நோக்கம் எதுவும் இல்லாதவர். மாளிகைக்காரன், மண் குடிசைக்காரன் என்கிற வேறுபாடு பார்க்காதவர், எல்லாமே கடந்த ஒரு நிலையில் இருப்பவர் ; ஆகவே அவரைச் சொல்லவில்லை. நாளைக்கு அவர் அமைச்சராக இல்லாமல் போகலாம். ஆனால் அந்த அதிகாரம் இருக்கும். பதவி யாருக்கும் நிரந்தரமானது அல்ல. ஆகவே நாளைக்கு வருகிற அமைச்சர்கள் யாராவது, யார் வந்தாலும், இந்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? நிச்சயமாகச் சொல்ல முடியாது.

நீங்கள் அப்படியெல்லாம் நடக்காது என்று வாக்குறுதி கொடுக்கிறீர்கள். ஒப்புக் கொள்கிறேன். இந்த அரசாங்கம் இதுவரையில் இப்படிப்பட்ட தப்பான காரியங்களில் இறங்கியதே இல்லை என்று சொல்கிறீர்கள், ஒப்புக் கொள்கிறேன். நாளைக்கு, இந்த அதிகாரம் மிஸ் யூஸ் ஆகாது, அதை துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பு இருக்காது என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே அதிகார துஷ்பிரயோகத்திற்கு இதில் வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டித்தான் இவ்வளவையும் சொன்னேன்.

ஆகையினால் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டத்திலே அப்படி விதிவிலக்கு என்னும் ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு வந்திருப்பது என்கிற விவகாரம் வேறு, நாங்கள் அப்படி நடக்க மாட்டோம் என்று சொல்வது வேறு. இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லத்தான் எதிர்க்

கட்சிகள் இருக்கின்றன. ஆகவே இதிலுள்ள அபாயத்தை சொன்னேன். இதற்காக அமைச்சர் அவர்கள் இப்படி கோபப் படுவதிலே நியாயம் இல்லை.

அடுத்து வீடியோ மூலம் திரைப்படம் காட்டுவதிலும், அதைப் போலவே வீடியோ லைப்ரரி வைத்து நடத்துவதற்கும் லைசன்ஸ் வாங்கிக் கொண்டுதான் காட்டப்பெற வேண்டும் என்று சொல் வதை எல்லாம் இங்கே விவாதிப்பதற்கு முன்பாக, அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன்.

வீட்டிலே நாம் வீடியோ கேசட்டுகளை வைத்து, ரெக்கார்டு களின் மூலம் படம் போட்டு திரைப்படம் பார்த்துக் கொண் டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். பார்க்கின்ற படம் சென்ஸார் செய்யப்பட்ட படமா இல்லையா என்ற ஒரு கேள்வி வருகிறது. உதாரணமாக இங்கிலீஷ் படம் ஒன்றை பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் படங்கள் பொதுவாக சென்சார் செய்யப்பட்டு வருவதில்லை. சர்டிபி கேட் பண்ணி வருவதில்லை. நீங்களோ நானோ அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். போலீஸ்காரர்கள் வந்தால் இந்தச் சட்டத் தின்படி நம்மை கைது செய்யலாம். அதற்கு என்ன பாது காப்பு ? என்பதை அறிய விரும்புகிறேன்.

ஏன் போலீஸ் அதிகாரிகளுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால் கூட, உதாரணமாக துரைமுருகனையோ, ரகுமான் கானையோ, சங்கரய்யாவையோ, நெடுமாறனையோ அவர் களுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால், திடீர் என்று வீட்டிற்குள்ளே நுழைந்து, நீங்கள் வீடியோவிலே பார்த்துக் கொண்டிருக்கும் இந்த இங்கிலீஸ் படத்திற்கு சர்டிபி கேட் இல்லை என்று சொல்லி ஆகவே உங்களை கைது செய் கிறோம், வழக்குப்போடுகிறோம் என்று சொன்னால், நான் 3 மாதம் ஜெயில் வாசமோ, அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமோ அனுபவிக்க வேண்டும்.

இது அபாயம் இல்லையாயென்று கேட்க விரும்புகிறேன். நடக்காமல் இருந்தால் சந்தோஷம். இதிலே அபாயம் இருக்கிறது. எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் ? இரண்டாவது வீடியோ மூலம் படம் பார்க்கிறார்கள். நீங்களும் பார்க்கிறீர்கள். எல்லோரும் பார்க்கிறோம். அந்தப் படத்திற்கு காப்பிரைட் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிக் கேட்கிற போது ஒரு பிரச்னை வருகிறது. உதாரணமாக இங்கிலீஷ் படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு யாரிடத்திலே போய் வாங்குவது ? படம் எடுத்தவர்களிடத்திலோ டிஸ்ட்ரி பியூட்டர்களிடத்திலோ வாங்கமுடியுமா ? அதேபோன்று, தொலைக் காட்சியிலே ஒரு நாடகம் போடுகிறார்கள். அதை நாம் கேசட்டிலே ரெக்கார்ட் செய்து வைத்துக்கொண்டு நமக்கு சௌகரியப்பட்ட நேரத்திலே போட்டுப் பார்க்கிறோம்.





அதற்குப் போய் எங்கே காப்பிரைட் வாங்குவது ? இது இரண் டாவது. மூன்றாவதாக இங்கிலீஷ் படமாக இருந் தால், இந்திப் படமாக இருந்தால் காப்பிரைட் படம் எடுத்த வர்களிடமிருந்து வாங்கவில்லை, அதற்கான லெட்டர் உங் களிடத்திலே இல்லை, என்று சொல்லி உங்களையே கைது செய்யலாம், என்னையும் கைது செய்யலாம், படம் பார்த்துக் கொண்டிருக்கிற எல்லோரையும் கைது செய்துவிடலாம், படம் பார்த்துக் கொண்டிருக்கிற தாய்மார்களையும் கைது செய்யலாம், வீட்டிலே பொருள்களை சோதனை போட லாம், பறிமுதல் செய்யலாம் என்ற அபாயம் இல்லாமல் இல்லை. இரவானாலும் பகலானாலும் இந்த ஒரே ஒரு கார ணத்தை சொல்லி உள்ளே நுழைந்து விடலாம். இதற்கு எவ் வளவு தண்டனை தெரியுமா ? ஒரு வருடம் ஜெயில், அன்ட் ஆயிரம் ரூபாய் அபராதம், இங்கிலீஷ் படம் வருகிற நேரத் திலே ஒரு தாய், பெண்மணி படம் பார்த்துக்கொண்டிருக்கிற போது காப்பிரைட் உங்களிடத்திலே இல்லை என்று சொல்லி என்ன தண்டனை கொடுக்கலாம் என்றால் ஒரு வருடம் ஜெயில், அது மட்டுமல்ல 'ஆர்' அல்லது 'அன்ட்' ஆயிரம் ரூபாய் அப ராதம் என்பது மூலச் சட்டத்தில் இருக்கிறதா ? ஆனால் அமைச்சர் அவர்கள் மூலச் சட்டத்திலே இருப்பதைத்தான் அப்படியே கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். ஒரு வருடம் ஜெயில், ஆயிரம் ரூபாய் அபராதம் என்பது மூலச் சட்டத்திலே இருக்கிறதா என்றால் இல்லை.

நான் இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன், துணைத் தலைவர் அவர்களே, உங்கள் வீட்டிலே ஒரு திருமண நிகழ்ச்சி அல்லது முக்கியமான சம்பவம் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நம்முடைய வீட்டிலே ஒரு சம்பவம் நடக்கிறது என்று வையுங்கள், அதை வீடியோ கேசட்டிலே எடுத்துக்கொள்கிறோம், ஒரு கட்சி மாநாடு அல்லது பொதுக் கூட்ட நிகழ்ச்சியை நாம் எடுக்கிறோம் என்றால் அதை வீட்டிலோ அல்லது ஒரு பொது இடத்திலோ போட்டுப் பார்க் கிறோம் என்றால் அதற்கு என்ன தண்டனை தெரியுமா ? அதற்கு கன்செண்ட் இல்லை, கன்செண்ட் வேண்டும், சர்டிபி கேட் வாங்க வேண்டும், அதற்கும் தணிக்கை செய்யவேண்டும் என்று சொன்னால் அதைக் கொண்டுபோய் யாரிடத்திலே தணிக்கை செய்வது. உங்கள் வீட்டுக் கல்யாண நிகழ்ச்சி அதைக் கொண்டுபோய் யாரிடத்திலே தணிக்கை செய்வது ? என்னுடைய வீட்டிலே நடைபெறுகிற கல்யாண நிகழ்ச்சியை நான் டேப் செய்து என்னுடைய இடத்திலே உற்றார் உறவினர் களுக்கு தாய்மார்களுக்கு போட்டுக் காண்பித்தால் அவர்கள் பார்த்தால் அதுவும் குற்றம் என்று சொல்லி தணிக்கை செய்யப் படவில்லை, சர்டிபிகேட் வாங்கவில்லை என்று சொன்னால் ஒரு வருஷம் ஜெயில், ஆயிரம் ரூபாய் அபராதம் என்று சொன் னால் எவ்வளவு கடுமையான சட்டம் இது ?

**Mr. DEPUTY SPEAKER:** with imprisonment which may extend to one year
ஒரு வருடம் என்றால் ஒரு மாதம் கூட போடலாம், ஒரு வருடம் போடலாம், புரபேஷனிலே விடலாம், நீதிமன்றத்திலே அதற்கு நார்ம்ஸ், ஸ்கேல் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் நாம் இங்கே வேண்டாம் என்கிறோம். (குறுக்கீடு) மேக்ஸிமம் தான் அது.

**திரு. அ. ரகுமான்கான் :** மேக்சிமம், மினிமம் என்பது நீதிமன்றத்தைப் பொறுத்தது. பிராசிகியூட்டரைப் பொறுத்தது, கேஸைப் பொறுத்தது. ஆளைப் பொறுத்தது, அம்பைப் பொறுத்தது. அந்த அதிகாரம் நீதிமன்றத்திற்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அபாயகரமானது. தலைக்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கிற கத்தி போல் எப்போதும் அபாயம். நீங்கள் போலீசுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரங்கள் அதிகமானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரிலே போகிறவர்களை திடீரென்று காரை மடக்கி இதே காரணங்களுக்காக கைது செய்யலாம், பஸ்ஸிலே போகிறவர்களை குறுக்கிட்டு இதே காரியங்களைச் செய்யலாம், இதுபோன்ற அபாயங்கள் இருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கிற பீனல் புரவிஷன் இந்த சாதாரண குற்றத்திற்காக டெக்னிக்கல் அபன்சிற்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுப்பது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

இன்னும் ஒன்றையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் படங்களைப் போடலாம், இந்தப் படங்களை போடக்கூடாது என்று சொல்லுகின்ற அதிகாரம் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் தவறாகப் பயன்படுத்தமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ரொம்ப சந்தோஷம். அதே நேரத்தில் அதனால் அபாயமும் இருக்கிறது. உதாரணமாகச் சொல்கிறேன், உங்கள் ஆட்சியைப் பற்றி ஒரு விமர்சனம் செய்து படம் எடுக்கிறோம், அந்த படம் உங்களுக்கு பிடிக்கவில்லை என்று சொன்னால் அதை வீடியோவிலும் வீட்டில் போட்டுப் பார்க்கக்கூடாது என்றும் பொது இடத்திலும் போட்டுப் பார்க்க கூடாது என்றும் அது சம்பந்தமாக கேசட்டுகள் இருக்கக்கூடாது என்றும் தடை உத்திரவை நீங்கள் செய்வீர்கள். இதில் அவ்வளவு பெரிய அபாயம் இருக்கிறது. இதை விட்டுவிட வேண்டும். நீங்கள் உங்கள் இஷ்டமானவர்களுக்கும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் சலுகை காட்டி, அதே நேரத்தில் ஆளும் கட்சியை கண்டிப்பவர்களுக்கு அவர்கள் படம் கூடாது என்று சொல்லுகின்ற அபாயம் கூட இதில் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை கடைசியாகச் சொல்கிறேன். இந்த காப்பி ரைட் மத்திய அரசு சட்டம். உங்களுக்கு அதில் அதிகாரமே கிடையாது. காப்பி ரைட் ஆக்ட். சென்டிரல் ஆக்ட் காப்பி ரைட்





இருக்கிறதா இல்லையா என்பதை பார்ப்பது சென்ட்டிரல் கவர்ன்மெண்டு. அதற்குள் நீங்கள் நுழையவே முடியாது. ஆனால் நீங்கள் இப்போது காப்பி ரைட் சம்பந்தமாக ஒரு சட்டம் போட்டு இருப்பது Compstence the Legislature-ஐ சேலன்ஜ் செய்து திரு. சத்திய தேவ் நீதிபதி அவர்கள் இன்றைக்கு சென்னை ஹைக் கோர்ட்டில் ஸ்டே கொடுத்து இருக்கிறார்கள். அதை வெக்கேட் செய்ய அரசு என்ன செய்து இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் சட்டசம்பந்தமான விளக்கம் சொல்லுவார்களானால் ரொம்பவும் சந்தோஷமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இதன் மூலம் இருக்கக்கூடிய மிகப் பெரிய அபாயம் என்ன என்றால் எதிர்கட்சியினரை அடக்குவதற்கும் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சலுகை செய்வதற்குமான அபாயம் இதில் இருக்கிறது. தமிழ் படங்கள் வருடத்தில் 9 மாதங்கள் போட வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் வீடியோவில் தமிழ் படம் 9 மாதம் போடவேண்டும் என்று சொல்ல முடியுமா? அப்போது இந்தி படமும், இங்கிலீஷ் படமும் ஓடினால் தமிழ் படத்தின் கதி என்ன வாகும்? ஆக இந்த அபாயம் இருக்கிறதா, இல்லையா? ஆக மறைமுகமாக நீங்கள் சினிமா தியேட்டர்களை ஒருபுறம் அனுமதிக் கிறீர்கள். வீடியோ தியேட்டர்களையும் ஒரு புறம் அனுமதிக்கிறீர் கள். கூடாது என்று சொல்லவில்லை. லைசன்ஸ் வேண்டும். அது போலவே அதற்கு சர்டிபிகேட் வேண்டும் என்று சொல்லி அதையும் வளர்க்கிறீர்கள், இதையும் வளர்க்கிறீர்கள். 9 மாதம் என்பது இதற்கு மட்டும் தானா, இதற்கு இல்லை என்று சொன் னால் இந்தி படமும், இங்கிலீஷ படமும் தானே ஓடும். அபாயம் இல்லையா என்று கேட்டு, ஆக இந்த சட்டம் உள்நோக்கங்கள் நிரம்பியது, அபாயகரமானது. இதை ஒரு புறத்தில் ஒழுங்குப் படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் என்று பெயரள வில் சொல்லி தங்களுக்கு பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் என்று வேறுபடுத்தி அவர்களுக்கு உதவி செய்கின்ற விதத்தில் போலீஸ் எக்ஸஸ் அவிழ்த்துவிடுகின்ற விதத்தில் இருக்கின்ற இந்தச் சட்டத்தை வன்மையாக கண்டித்து நான் அமைகிறேன் நன்றி, வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வீடியோ கேசட் ரெக்கார்டுகள் சம்பந்தமான சட்டம் குறித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டில் பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கக்கூடிய நேரத்தில் இந்த குறிப்பிட்ட பிரச்சினைப் பற்றி இவ்வளவு அதிகப்படியான கவனம் செலுத்தி பல்வேறு சரத்துக்கள் கொண்ட பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சட்ட முன் வடிவை இந்த நேரத்தில் கொண்டு வருவது அவசியம்தானா என்ற கேள்வியை நான் முதலில் கேட்க விரும்புகிறேன். காரணம் இந்த மசோதா

பல்வேறு சிக்கலான பிரிவுகளை கொண்டிருக்கிறது. இதிலே நான்
அடிப்படையில் தெரிவிக்க விரும்புவது, 7வது பிரிவில் இந்த
டேப் ரெக்கார்டர்கள் மூலம் திரைப் படங்கள் காட்டுவதற்கு,
கட்டிடங்கள் கட்டுவதற்கு, புதுப்பிப்பதற்கு, இயந்திரங்கள் நிறுவு
வதற்கு, உரிமைகள் வழங்குவதற்காக அதிகாரங்கள் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இதை பார்க்கும் போது இந்த இயந்திரங்கள்
நிறுவுவது எங்கே வருகிறது. இந்த வீடியோ ரெக்கார்டுகள்
என்பது ஒரு சிறிய பெட்டி. அதை வைத்துக் கொண்டு டெலி
விஷன் படம் காட்டுகிறார்கள். அப்போது இந்த இயந்திரம் நிறுவு
வது எங்கே வருகிறது. ஆனால் இதை பார்த்தால் என்ன அபாயம்
வருகிறது என்றால் மினி தியேட்டர்கள் கட்டுவதற்கு செய்யப்
படக்கூடிய அந்த உரிமைகள் வழங்கக்கூடிய அத்தனை விஷயங்
கள் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதில் உதாரணமாக
எத்தனை இருக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கொடுக்
கப்பட்டு இருக்கிறது. அதிலே பார்க்கக்கூடியவர்களுக்கு என்ன
வசதி செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
இன்று கிராமப்புறங்களில் ஒரு வகையான தீப்பிடிக்காத கூரை
யினால் அந்த தியேட்டர்கள் இருக்கின்றன. அதை அதிகப்படுத்த
லாம். ஆனால் அதற்கு பதிலாக இந்த வீடியோ டேப் ரெக்கார்
டர்கள் மூலமாக படம் காட்டுவது என்ற அடிப்படையில் இதிலே
பல ஆயிரக்கணக்கான மினி தியேட்டர்களை உண்டாக்குவது
உங்களுடைய நோக்கம் என்று எங்களுக்குத் தெரிகிறது. அது சரி
யல்ல. இன்றைக்கு நீங்கள் எந்த சினிமா சொந்தக்காரர்களின் நலன்
களைப் பாதுகாக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ? அவர்
களின் நலன்களுக்கு விரோதமான முறையில், இப்படி நூற்றுக்
கணக்கான, ஆயிரக்கணக்கான இடங்களிலே ஏற்படுத்துவதாக
அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாதிரி
கட்டிடங்களைக் கட்டுவதற்கும், புதுப்பித்துக் கட்டுவதற்கும்,
இயந்திரங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்கும் உரிமம்
வழங்குவதைப்பற்றிச் சொல்கிறீர்கள். இதையே நான் ஆட்சேபிக்
கிறேன். இதை வீட்டிலே பார்க்கிறார்கள். டெலிவிஷன் பெட்டி
யோடு சேர்ந்த ஒரு சிறு கருவிதான் இது. இதற்கு இயந்திரங்களை
நிறுவுவதற்கும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் வேண்டிய
அவசியம் என்ன வந்தது? அந்தக் கட்டிடங்களுக்குப் பின்வரும்
சட்டங்கள் பொருந்தாது என்று சொல்கிறீர்கள், அது என்ன
வென்றால், தமிழ்நாடு 1888 ஆம் ஆண்டு பொது வாழிடங்கள்
சட்டம், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக்காவல் சட்டம்,
1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு
1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாடு 1920 ஆம்
ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் போன்ற சட்டங்கள்
பொருந்தாது என்று சொல்கிறீர்கள்.

இதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்றால், நகராட்சி சட்ட
மும், ஊராட்சி சட்டமும் காவல் சட்டமும், பொதுமக்கள் கூடும்
இடங்களில் கடைப்பிடிக்கின்ற விதிகளைக் கொண்டவையாக
உள்ளன. அந்த விதிகளெல்லாம் இதற்குப் பொருந்தாது என்று
சொல்கிறீர்கள். அந்த விதிகளுக்கு உட்படாமல் இப்படிப்பட்ட





கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கலாம் என்று
இந்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வருகின்றீர்கள். இது
எவ்வளவு அபாயகரமானது என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். பொது மக்கள் கூடும் இடங்களில் என்னென்ன
விதிகள் கடைபிடிக்கப்பட வேண்டுமோ அந்த விதிகள் கண்டிப்
பாக கடைபிடிக்கப்பட வேண்டும். இதைத் தியேட்டர் என்று
சொல்கிறீர்கள். அப்படித் தியேட்டர் என்று சொன்னால்
தியேட்டர்களுக்கு என்று இருக்க வேண்டிய எல்லா விதிகளையும்
கடைபிடிக்கத்தான் வேண்டும்.

இப்படிப்பட்ட ரொம்ப ஆழமான விளைவுகளைக் கொண்ட
இந்தச் சட்டத்தை இன்றைக்கு இவ்வளவு அவசரமாக நிறை
வேற்றுவது சரியல்ல. அரசாங்கம் தன்னுடைய நிலையைப்
பரிசீலனை செய்து, தேவையானால் இதை ஒரு பொறுக்குக் குழு
விற்கு விடவும் வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

24-வது பிரிவைப் பார்க்கும் பொழுது, கேளிக்கை வரிச் சட்டத்
தின்படி சினிமா காட்டும்பொழுது என்னென்ன விதிகள் பின்பற்ற
படுமோ, அவைகளைப் பின்பற்ற வேண்டாமென்று சொல்லி
விட்டதாக நான் அறிகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர
வர்களே, இந்தத் திரைப்பட அரங்குகளை அமைப்பதற்கு என்
னென்ன விதிகள் உண்டோ, அவைகள் இதற்கும் பொருந்தும் என்று
தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அது வேண்டாமென்று
சொல்லப்பட வில்லை. தமிழ்நாடு சினிமா ரெகுலேஷன் ஆக்டிலே
சொல்லப்பட்டிருக்கின்ற விதிகளைப் பொறுத்தவரையில் உரிமம்
வழங்குகின்ற அந்த அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாநகராட்சி, போலீஸ் ஆணையாளர் ஆகியவர்களுக்குத் தரப்
பட்டிருக்கின்றபொழுது அவர்கள் விதிகளுக்கு, சட்டத்திற்கு
உட்பட்டு எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுகிறார்கள்.
தனித்தனியாகச் சட்ட விதிகளைக் குறிப்பிட வேண்டாம்
என்றுதான், முன்பே ஏற்படுத்தப்பட்ட, 1955 ஆம் ஆண்டு ஏற்
படுத்தப்பட்ட, திரைப்படச்சட்டத்தின்கீழ் உள்ள விதிகள் உள்ளன.
ஒழுங்கு முறைப்படுத்துகின்ற சட்டத்திலே இருக்கின்றன. அதை
வைத்திருக்கிறோம். நேற்றும் சொன்னேன், இன்றும் சொன்னேன்
திரைப்படக் கொட்டகைகளுக்கு எந்த அடிப்படையிலே அரசு உரி
மம் வழங்குகிறதோ, அந்த அடிப்படையிலேதான் இவைகள்
எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்
களே, பிரிவு 7 (1) (டி) யில் கீழ்க்காணும் சட்டங்களில் அல்லது
அவற்றின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளில் கண்டுள்ள விதித்துறை
எதுவும் மேற் குறிப்பிட்டவைகளுக்குத் தொடர்புள்ள வரையில்

இப்பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் எதற்கும் பொருந்தாது என்று சொல்லி, தமிழ்நாடு 1888 ஆம் ஆண்டு பொது வாழிடங்கள் சட்டம் போன்ற சட்டங்களைக் கூறியிருக்கிறீர்கள்.

நான் கேட்பது, பொது வாழிடங்கள் சட்டம் இதற்கு ஏன் பொருந்தாது ? முனிசிபல் ஆக்ட் இதற்குப் பொருந்தாது என்று சொல்லலாமா ? பஞ்சாயத்து ஆக்ட், போலீஸ் ஆக்ட் போன்றவைகள் இதற்குப் பொருந்தாது என்று சொல்லலாமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இவைகள் எல்லாம் ஏன் பொருந்தாது என்றால் முன்னாலே கொண்டுவரப் பட்டிருக்கின்ற அந்தச் சட்டத்திலே உள்ள சட்ட விதிகளுக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் ஹெல்த் சர்டிபிகேட், பில்டிங் சர்டிபிகேட் போன்றவைகளை இந்தச் சட்டத்தின்படி எந்தெந்த பாது காப்புக்கள் தேவைப்படுகிறதோ அவ்வளவையும் செய்ய தமிழ் நாடு சினிமா ரெகுலேஷன் ஆக்டின் கீழ் அவ்வளவு உறுதிகளையும் பெற்றுக் கொண்டு வழங்குகிறார். ஆகவே, பல்வேறு சட்டங் களும் குறுக்கிட வேண்டாமென்பதற்காகத்தான் அவைகள் இணைக்கப்படாமல் இந்த விதி இருக்கிறது.

(முற்பகல் 11-20)

**திரு. என். சங்கரய்யா :** அரசாங்கம் ஒத்துக் கொண்டாகி விட்டது. அப்படிப்பட்ட சினிமாத் தியேட்டர்களைக் கட்டுவதற் கான ஒரு ஏற்பாடுதான் இது. இப்போது நான் என்ன சொல்கி றேன் என்றால், அது ஒரு அடிப்படையான கொள்கைப் பிரச்சினை. ஆனால் இப்போது நீங்கள் கேளிக்கை வரிச் சட்டத்தை இதிலே பொறுத்தப் பார்க்கிறீர்கள். சினிமா தியேட்டர்களிலே அதாவது பெரிய அகலமான திரையிலே வசதியாக உட்கார்ந்து படம் பார்ப்பவர்களுக்குப் போடுவது போன்று சிறிய அளவிலான வீடி யோவைப் பார்ப்பவர்களுக்கும் கேளிக்கை வரியினைப் பொருத்தக் கூடிய இப்படிப்பட்ட நிலைமை நியாயமானதா? இது ஒன்று.

இரண்டாவதாக இப்படி செய்வதன் மூலமாக சினிமாவிலே வருமானம் குறையாமல் பாதுகாப்பதுதான் என்று சொல்லிவிட்டு அதற்கு நேர் விரோதமாக நிலைமைகளை ஏற்படுத்துகிறீர்கள். அதாவது சினிமா தியேட்டருக்குச் சென்று படம் பார்க்க வேண் டும் என்பது சரிதான். ஆனால் நீங்கள் ஏற்படுத்துகின்ற நிலை அப்படிப்பட்ட நிலைமையையா ஏற்படுத்தும் என்பதை எண் ணிப்பார்க்கவேண்டும். இதிலே ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சினிமா தியேட்டர் வைத்திருக்கிறோம் என்றால் அங்கே பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளைப் பின்பற்றாமலும் இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் கேளிக்கை வரியும் வசூ லிக்கப்படும். உங்களுக்குத் தியேட்டர் காணவில்லை என்றால் மேலும் நூற்றுக்கணக்கான தியேட்டர்களைக் கட்டவேண்டியது





தானே. அப்படிச் செய்யாமல் குறுக்கு வழியிலே மக்களின் பல் வேறு வசதிகளைக் குறைக்கின்ற வகையில் செய்வது சரியல்ல. அதிலே என்னென்ன கட்டணங்களை வசூலிப்பவர்கள் என்ற ஒரு கேள்வியினைக் கேட்டுப் பார்த்தால் அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. இப்படி அவர்களிடத்திலும் கேளிக்கை வரியினை வசூலிப்பது என்றால் அதற்கு என்ன அர்த்தம் ?

இது ஒரு சாதாரணமான சிறிய சட்ட மசோதா இல்லை. இதிலே ஆழ்ந்து அரசாங்கம் சிந்திக்கவேண்டும். தமிழ்நாட்டிலே பல்லாயிரக் கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப் பட்ட இடங்களில் எல்லாம் சென்று கேளிக்கை வரி வாங்கினால் என்ன நிலைமை ஏற்படும்? ஆகவே, அதுபற்றி எல்லாம் தெளிவாக இதிலே சொல்லப்படவில்லை. எனவே, இது ஒருவிதத்திலே ஜனங் களைச் சுரண்டுவதாகத்தான் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சினிமா தியேட்டர்களைப் பொறுத்தவரையில் 4-க்கு மேற்பட்ட சிலைடுகள் போடுவதைப் பொறுத்த வரையில் அவர்களைக் கட்டாயப்படுத்துகிறீர்கள். சினிமா தியேட்டர் களைப் பொறுத்த வரையில் லைசன்ஸ் அதாரிட்டி சொல்வதன் படி செய்ய வேண்டும். மேலும் அங்கே என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் வாங்கவேண்டும். ஆனால் இவை சினிமா தியேட்டர் அல்ல. கொஞ்சம் பணத்தைப் போட்டு படத்தைக் காட்டி ஏராள மான இலாபத்தை சம்பாதிப்பதற்கு வழி செய்கிறீர்கள். எனவே, இது முற்றிலும் தவறான ஒன்றாகும். இதிலே உள்ள 7-வது விதி யும், 24-வது விதியும் இந்த நிலைகளைத்தான் எடுத்துக் காட்டு கிறது. அடுத்து லைசன்ஸ் கொடுப்பதை பொறுத்தவரையில், மாவட்டங்களிலே எல்லாம் கலெக்டர் கொடுக்கவேண்டும் என்றும் சென்னையிலே மட்டும் காவல் துறை கமிஷனர் கொடுக்கவேண்டும் என்ற வகையிலே ஏற்படுத்தி இருப்பது என்ன நியாயம்? இங்கேயும் கலெக்டர் இருக்கிறார். ரெவின்யூ அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே இங்கேயும் அவர்களே கொடுக்கின்ற வகையில் செய்தால் என்ன? ஏன் அப்படிச் செய்யவில்லை?

அடுத்து செக்ஷன் 3-ன் 1-பி என்ற பிரிவிலே, வீடியோ மூலம் தொலைக்காட்சியில் திரைப்படம் காட்டுவதைத் தவிர வேறு தொழில் எதுவும் செய்யக்கூடாது என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் என்ன ஆகும்?- திரைப்படம் பார்க்க வருபவர்களிடம் அதிகப்படியான கட்டணத்தை வாங்கவேண்டிய நிலைமைதான் ஏற்படும். இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி ஆழமாக எண்ணிப் பார்க்கவேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன.

அடுத்து அதே பிரிவு 3-லே உள்ள 2 என்ற உட்பிரிவிலே குடும் பத்தினருக்கு மட்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இங் குள்ள எல்லோருக்கும் தெரியும். வீடுகளில் டி.வி-யிலே படம் போடுகின்றபோது அக்கம் பக்கத்திலே இருப்பவர்களும், சொந்

தக்காரர்களும் வந்து பார்ப்பார்கள். இது சட்டவிரோதமானது
அல்ல. வீடியோ டேப் ரிக்கார்டரை வாங்கி குடும்பத்திலே இருப்
பவர்களும், அக்கம் பக்கத்திலே இருப்பவர்களும், உறவினர்களும்
பார்ப்பார்கள். அப்படி பார்க்கக்கூடாதா? கணவனும் மனைவியும்
குழந்தைகளும் மட்டும் தான் பார்க்க வேண்டுமா? அல்லது மாமா,
மச்சான் ஆகியவர்கள் வந்து பார்த்தால், அல்லது பக்கத்திலே
இருப்பவர்கள் வந்து பார்த்தால் அது சட்ட விரோதமா? நீங்
கள் ஏற்படுத்திய சட்டத்தின்படி அவை எல்லாம் சட்டவிரோத
மானதாக ஆகின்றது. எனவே, அதிலே தெளிவுபடுத்தப்படவில்லை.
இந்தச் சட்டத்தினைப் பொறுத்தவரையில், ஏ.எஸ்.பி. அளவிலே
அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாக்களிலே டி.எஸ்.பி.
அளவிலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர்
கள் விரும்பினால் ஒரு வீட்டிலே வீடியோ படம் பார்ப்பவர்கள்
எல்லாம் ஃபேமலி மெம்பர்கள் தானா என்று எந்த நேரத்திலும்
வந்து பார்வையிடலாம். அப்படியானால் ஏற்படுகின்ற நிலைமை
என்ன? இன்னார் எல்லாம் ஃபேமிலி மெம்பர்ஸ் என்ற வகையிலே
சர்டிபிகேட் வாங்கி வைத்துக்கொள்ளவேண்டுமா? இப்படி
எந்த நேரத்திலும் அதிகாரிகள் போய் விசாரிக்கலாம் என்ற
நிலைமையை ஏற்படுத்துகின்றது. அப்படியானால் பொதுமக்க
ளுக்கு இதனால் எவ்வளவு பெரிய தொல்லைகள் ஏற்படும் என்
பதைச் சிந்திக்கவேண்டும். வீடுகளில் போடப்படுகின்ற வீடியோ
படங்களைப் பொறுத்த வரையில், குடும்ப உறுப்பினர்களுக்கு
மட்டும் என்று அழுத்தந் திருத்தமாகப் போட்டால் வரக்கூடிய
அதிகாரிகள் அதற்கு என்னென்ன வகையிலே வியாக்கியானம்
செய்யவேண்டுமோ, அந்த வகையிலே எல்லாம் வியாக்கியானம்
செய்து, அந்தக் குடும்பத்துக்குப் பக்கத்திலே இருப்பவர்கள் பார்ப்
பதைத் தடை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். அதனால் தண்
டிக்கக்கூடிய நிலைமைகளும் உண்டாகும். ஆகவே, இந்தப் பிரி
வினை நான் மிகவும் கடுமையாக எதிர்க்கிறேன். அதை நீக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் பல்லாயிரக்
கணக்கான ரூபாய் கொடுத்து வீடியோ ரெக்கார்டர் வாங்கி
வைத்துக்கொள்கிறார். இன்றைக்கு அவர்கள் தங்களுக்கு
வேண்டியவர்களுக்கு, தங்களுடைய குடும்பத்திலே உள்ளவர்
களுக்கு, அக்கம்பக்கத்திலே உள்ளவர்களுக்குக் காட்டுவதற்கு
எந்தவிதமான தடையும் இருக்கக் கூடாது.

அடுத்தபடியாக, வீடியோ லைப்ரரி வைக்கக்கூடியவர்கள்
பொது மக்கள் வருதற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று
குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பார்க்கிறேன். அந்த வீடியோ
லைப்ரரி கடை மாதிரி இருக்கிறது. கடையிலே சாமான் வாங்குகிற
மாதிரி, வீடியோ லைப்ரரியிலே வீடியோ கேசட் வாங்குகிறார்கள்.
இதிலே, பொது மக்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்கிற
அளவுக்கு என்ன இருக்கிறது? சாதாரண சிறிய பெட்டிக் கடை
மாதிரி வைத்திருக்கிறார்கள். ரெக்கார்டுகள் வாங்குகிற மாதிரி
டேப்பை வாங்குகிறவர்கள் பொது மக்கள் என்பதை நான் குறிப்
பிட விரும்புகிறேன்.





அடுத்தப்படியாக இங்கே இசைவுக் கடிதம் பற்றி குறிப்பிடப்
பட்டிருக்கிறது. இது பற்றித்தான் ஹைகோர்ட்டிலே வழக்கு
போட்டிருக்கிறார்கள். இசைவுக் கடிதத்தை, சிறிய மினி
தியேட்டர்கள், அல்லது வீடியோ ஹவுசிலே உள்ளவர்கள் வாங்க
வேண்டுமென்பது ஒன்று. ஆனால், குடும்பத்திலே திரைப்படம்
போட்டுப் பார்க்கக் கூடியவர்கள் அந்த இசைவுக் கடிதத்தை—
காப்பிரைட்டை— உரிமையை, முதலாவது உரிமையாளரிடம்
இருந்து அல்லது, அவருடைய பிரதிநிதியிடமிருந்து வாங்கி வைத்
திருக்க வேண்டும் என்று உள்ளது. அதை யாரிடம் காட்ட
வேண்டும்? டி.எஸ்.பி. அல்லது ஏ.எஸ்.பி. போனால் காட்ட
வேண்டுமாம். இன்றைக்கு டெலிவிஷனிலே வரக்கூடிய
படத்தை, டெலிவிஷனிலே வரக் கூடிய நாடகங்களை, வீடியோ
டேப் ரெக்கார்டர் மூலமாக படம் எடுக்க முடியும். அப்படி
யானால் அவர்கள், யாரிடம் அதற்கான அனுமதி வாங்குவது?
அந்தப் படங்களை யார் விற்கிறார்கள்? வெளிநாடுகளிலிருந்து
பல்வேறுவிதமான விளையாட்டுகள், டேப்புகள் வருகின்றன.
அதை வீடியோவில் பார்த்தால் கூட அது சர்ட்டிபைட் பண்ணிய
படம் அல்ல என்று சொல்லி தடுக்கலாம். வீடியோ கிளப்புகள்
மற்றவைகளைப் பொறுத்த வரை வேண்டுமானால் சரி. ஆனால்,
வீடுகளைப் பொறுத்தவரைக்கும் அது எப்படி சரியாகும்? நாங்கள்
சொல்லக் கூடியவைகளை நீங்கள் எடுத்துக் கொள்வீர்களா
என்பது வேறு விஷயம். மாண்புமிகு ரகுமான்கான் சொன்னார்
எவ்வித தடையும் இருக்கக். கூடாது என்று. அவர் சொல்லக்
கூடிய விதத்தில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால், ஒரு
அரசியல் கட்சி மாநாடு, அல்லது குடும்பத்தினர் திருமண விழா,
வீட்டு நிகழ்ச்சி என்று அதைக் கூட வீடியோவில் படம் எடுக்க
முடியும். அதை வீட்டிலே போட்டுக் காண்பித்தால் அதற்கு
யாரிடம் உரிமை வாங்குவது? இதை எல்லாம் நாம் பார்க்கப்
போகிறோம். நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம், ரொம்ப
தூரத்திற்கு தனிப்பட்ட மனிதர்களுடைய உரிமைகளிலே ஆழ
மாக நாம் பிரவேசித்து, அவர்கள் உரிமைகளைப் பாதிக்கும்
காரியங்களைச் செய்வோம் என்று இந்த நேரத்திலே சொல்ல
விரும்புகிறேன். ஆகவே, இசைவுக் கடிதத்தைப் பொறுத்த
வரைக்கும், குடும்பத்தைப் பொறுத்த வரைக்கும், அது இருக்கக்
கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக காப்பிரைட்டைப் பொறுத்தவரைக்கும்,
நேற்றுக் கூட ஜஸ்டிஸ் சின்னப்ப ரெட்டியார் கூறி இருக்கிறார்
கள், காப்பிரைட் உரிமையைப் பாதுகாக்க வேண்டும், எழுத்தாளர்
கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்று. நான் கேட்க
விரும்புகிறேன், ஒரு படத்தை எடுக்கக் கூடியவர்கள், அவர்களே
வீடியோ எடுக்க வேண்டியது தானே. யார், யார், எந்த
படத்தை எடுக்கிறார்களோ அவர்களே அங்கீகரிக்கப்பட்ட
முறையிலே, அவர்களுடைய படத்தை, அதன் மதிப்பை வைத்து,
டேப் செய்து வெளியிட வேண்டியது தானே. ஆனால், என்ன
சொல்லப்படுகிறது என்றால், அவர்களுடைய ஸ்டுடியோவிலே
வேறு விதத்தில் எடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஸ்டுடியோவிலே படம் எடுக்கப்படுகிறது என்றால், அங்கே உள்ள செக்யூரிடியைப் பலப்படுத்துங்கள். அந்தப் படம் எடுக்கிற முதலாளிகளுடைய ஏற்பாட்டைப் பலப்படுத்துங்கள். அதை விட்டு விட்டுப் பொதுமக்கள் பார்க்கக் கூடாது என்று சொல்கிறார்கள். தமிழ்ப் படங்களைப் பொறுத்த வரைக்கும் சொல்ல முடியும். மற்ற மொழிப் படங்கள் எங்கே இருந்து வருகின்றன என்பதைப் பற்றியெல்லாம் யாருக்குத் தெரியும். இன்றைக்குத் தமிழ்நாடு சர்க்கார் காப்பிரைட் இருக்கிறதா என்று பார்ப்பதால் பிரச்னை தீரப் போவதில்லை.

ஒன்றே ஒன்றை வற்புறுத்துகிறேன். போர்னோகிராபி—ஆபாசப் படங்களைப் பார்க்கக் கூடாது. ஆனால், அதற்கு இப்பொழுது சட்டம் தேவையில்லை. தமிழகத்திலே ஏற்கனவே சட்டம் இருக்கிறது. வீடியோ டேப் ரெக்கார்டர்கள் வருவதற்கு முன்னால், பல பெரிய பசை உள்ளவர்கள், வீடுகளிலே தியேட்டர்கள் போலப் போட்டு, ஆப்பரேட்டர்களைக் கொண்டு வந்துதான் ஆபாசப் படங்களைப் பார்த்திருப்பார்களே தவிர, வீடியோ டேப் ரெக்கார்டர்களை வைக்கவில்லை. பல பேர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களுடைய கலையைப் பாதுகாக்க வேண்டும் என்றால், மக்களுடைய மனோபாவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், ஆபாசப் படங்களைத் தடைசெய்ய என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். காரணம் நாட்டினுடைய எதிர்காலத்தை, ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடிய பிரச்னை. அவர்களுடைய மனோபாவத்தைப் பொறுத்த பிரச்னை. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

அதற்கடுத்தபடியாக, இன்னொன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 11-வது விதி (1)-வது பிரிவிலே பொதுமக்களுடைய அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாக இருந்தால் நிறுத்தி வைக்கலாம் என்று இருக்கிறது. நான் கேட்கிறேன், வீடியோவிலே போடக் கூடிய படங்களைப் பொறுத்த வரையில் சான்றளிக்கப்பட்ட படங்களைத்தான் போடவேண்டுமென்று சொல்கிறோம். சான்றளிக்கப்பட்ட படங்கள் போடும்போது பொதுமக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பது எங்கே வருகிறது? அதை நிறுத்தி வைப்பதற்கு பிரச்னை எங்கே இருக்கிறது? அப்படியானால் சான்று அளிக்கப்படுவதிலே கோளாறு இருக்கும். சான்று அளிக்கப்பட்ட பிறகு அதைப் போடக் கூடாது என்று தடுப்பது பல பிரச்னைகளை உருவாக்கும் 11 (1) உப பிரிவை ஏன் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றே தெரியவில்லை. ஏனென்றால் அரசாங்கத்திற்கு இருக்கக் கூடிய வேலையை பாதித்து அதற்கு ஒரு அப்பீல், அதற்கு பரிசீலனை, அதை நீக்குவதற்கான நடவடிக்கைகள் போன்ற வேலைகள் எல்லாம் வருகின்றன. பிறகு தண்டனை என்ற பிரச்னை. நான் சொல்கிறேன் இதை தண்டனைக்குரிய பிரச்னையாக மாற்றக் கூடாது.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதுமட்டுமல்லாமல் 10-வது பிரிவை மீறினால் சான்றளிக்கப்பட்ட படங்களைத் தவிர வேறு படம் பார்த்தால் 3 மாதம் தண்டனை. மாண்புமிகு துணைத் தலைவர் சொன்னார் 3 மாதம் என்றால் 3 மாதமல்ல 3 மாதம் வரையில் என்று; அவர் வக்கீல். நான் கேட்கிறேன் 3 மாதம் வரை தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா? ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா? எத்தனையோ கடுமையான குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டிய இன்றைக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் தண்டனை என்பது சரியாகாது. தண்டனை கொடுப்பது என்றால் அதிகப்படியான நிலைமையை மதிப்பதாகும். மற்றப் பிரிவுகளை மீறினால் ஒரு வருஷம் தண்டனை. இன்னொன்று கேட்கிறேன், பிடியாணை இல்லாமல், வாரண்ட் இல்லாமல் கைது செய்வது; இப்போது போலீஸ் அதிகாரிகளே இல்லை. அவர்கள் கைது செய்வதற்கு உரிமை இருக்கிறதே அது மிக மிக கடுமையானது. மிக மிக தவறானது. நீங்கள் சொல்வீர்கள் ஏ.எஸ்.பி., டி.எஸ்.பி. க்குத் தானே அதிகாரம் கொடுத்திருக்கிறோம் என்று. அவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் அதிகமாக இல்லை என்று நீங்கள் சொல்வீர்கள். சர்கிள் இன்ஸ்பெக்டர்களிடத்தில் அதிகாரத்தைக் கொடுப்போம், சப்-இன்ஸ்பெக்டர்களிடத்தில் அதிகாரத்தைக் கொடுப்போம் என்று சொல்வீர்கள். அது போன்ற விளைவுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இரவிலே, பகலிலே வீடுகளிலே சோதனை செய்வது என்பது இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நியாயமாக சந்தேகத்திற்கு உட்பட்டவர்களை அவர்கள் கைது செய்து மாஜிஸ்ட்ரேட் முன் கொண்டு வரலாம். இது மிகுந்த தொல்லைகளை மக்களுக்கு உண்டாக்கக் கூடியது என்று சொல்கிறேன். இது மிகவும் தவறானது. அதே போல விதிவிலக்கைப் பற்றி சொன்னார்கள். நான் கருதுகிறேன், இந்த விதிவிலக்கு என்பது என்னவாகும் என்றால்— ஆழமாகப் பார்க்கிறபோது எனக்குப்படுகிறது— இது பணம் சம்பாதிப்பதற்காக ஒரு தொழிலாக பல்லாயிரக்கணக்கான மக்களிடத்திலே உருவாகும். இது தியேட்டர்களை பாதிக்கும். அப்படி வருகிறபோது சில பேருக்கு அனுமதி கொடுக்கப்படும்; சில பேருக்கு கொடுக்கப்பட மாட்டாது. இதில் சரத்துகளில் விலக்குகள் அளிக்கப்படும் என்று சொன்னால் அது தவறாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு வழிவகை இருக்கும். அதை வழங்குவதிலே யார் யாருக்கு வழங்குவது என்று போட்டிகள் உருவாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உள்ள இந்த அரசாங்கம் இந்த மசோதாவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எதிர்க்கிற காரணத்தாலே, இன்றைக்கு அவசரச் சட்டம் போட்டு விட்டோம் ஆகவே இதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று கருதாமல், பொது மக்களுடைய நலன் கருதி,

அரசாங்கத்திற்கு இதிலே வீண் பிரச்னைகள் ஏற்படக் கூடாது என்ற காரணத்தாலே சொல்கிறேன், இருக்கிற சரத்துக்களை மீண்டும் பரிசீலனை செய்வது அவசியம். தேவையானால் தியேட்டர் முதலாளிகளை, தேவையானால் மற்றவர்களை, ஸ்தாபனங்களை கலந்து இதில் ஒரு முடிவிற்கு வரலாம். ஆனால் நீங்கள் அதைச் செய்யாது இந்த முடிவிலேயே நின்று விடுவீர்களானால் அது சரியல்ல என்பதைக் கூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த வடிவிலே இருக்கிற சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறேன் என்று தெரிவித்து அமர்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் வீடியோ கேசட் ரெக்கார்டர் சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் வியாபார ஸ்தலங்களில் இந்த வீடியோக்கள் இருக்கின்றன. குறிப்பாக வீடியோ கேசட் இருக்கக் கூடிய இடங்களில் சினிமாக்களுக்கு செல்லக்கூடியவர்கள் குறைந்து, தியேட்டர்களுக்கு வருமானம் குறைந்து விடுகிறது என்ற காரணத்தால் அவசரச் சட்டமாக கொண்டு வந்து, இப்போது சட்டமுன் வடிவு வந்திருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். கேசட்டைப் பொறுத்த வரையில் அனுமதி பெற்று வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் அனுமதியில்லாமல் பார்ப்பதற்கும் சிறு தண்டனை கொடுப்பது என்று இருப்பதால் இது கடுமையான சட்டம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அனுமதி பெற்று நடத்தவேண்டும் என்று சொல்கிறபோது. வீடுகளில் இருப்பவர்கள் அனுமதி பெற வேண்டியது இல்லை என்று சட்டத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வீடுகளில் என்று சொல்கிறபோது சினிமாத் தியேட்டரைப்போல அந்த வீடியோ கேசட்டுகளைப் போடுவதற்கு ஒரு பெரிய திரை யரங்கு தேவையில்லை. சிறிய அறை இருந்தாலே போதும். அதிலேயே போட்டுக் காட்ட முடியும். ஆனால் வீட்டிலே இருப் பவர்கள் திரையரங்குகள் இல்லாமல் கூட 10 பேர், 8 பேரை வைத்துக்கொண்டு இதைக் காட்டிக்கொண்டு இருந்தால், அதைப் போலீசார் கண்டுபிடித்து, அவர்களைக் கைது செய்யலாம், முன்வாரண்டு இல்லாமல் கைது செய்யலாம்.

இன்னொன்றையும் இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டு இருக் கிறார்கள். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சினிமா தியேட்டர்களுக்கு இருக்கும் அந்தச் சட்டத்தையே இதற்கும்.





கொண்டு வருவதாக குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு ஷரத்து
இருக்கிறது. பொதுமக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிப்ப
தாக உள்ளது என்று கருதினால், தொலைக்காட்சியில் வீடியோ
கேசட் ரிகார்டுகள் மூலம் திரைப்படம் காட்டுவதை கட்டுப்
படுத்தும் ஆணை பிறப்பிப்பதன் மூலம் நிறுத்தி வைக்கலாம்
அவ்வாறு நிறுத்தி வைக்கும்போது எவரும் காட்டக்கூடாது—
அதாவது அவரும் காட்டக்கூடாது, மாநிலத்தில் உள்ள மற்ற
யாரும் காட்டக் கூடாது என்று மாநிலத்தில் முழுமையாக
யாரையும் எந்தப் பகுதியிலும் காட்ட அனுமதிக்க முடியாது என்று
கூறப்பட்டிருக்கிறது. அமைதிக்கு பங்கம் விளைவிப்பது என்று
யாரால் எப்படி முடிவு செய்வது? அமைதிக்கு பங்கம் விளைவிப்
பது என்று சொல்லும்போது குறிப்பாக 1966-ஆம் ஆண்டு தேர்
தல் சமயத்தில் ஒரு படம் காட்டப்பட்டது. அது பொதுமக்
களின் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதாக இருந்தாலும் கூட ஒரு
கட்சிக்குச் சாதகமாக இருக்கும்போது காவல் துறையைச் சேர்ந்த
வர்கள் அந்தப் படத்தால் அமைதிக்கும் பங்கம் ஏற்படாது
என்று கூறினார்கள். ஆகவே, இந்த அமைதிக்கு பங்கம் ஏற்
படுவது என்பதை யார் முடிவு செய்வது என்பதை திட்டவட்ட
மாக முடிவு செய்யவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அனுமதி பெறாமல் நடத்துவதாக இருந்தால், பிடி
வாரண்ட் இல்லாமல், முன் எச்சரிக்கை இல்லாமல் அவர்களைப்
பிடித்து சிறை தண்டனை விதிக்கலாம் என்று இருப்பது ஒரு
கொடுமையான தண்டனை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இன்னொன்று சென்னையைப் பொறுத்தவரையில்
போலீஸ் துறையிலும், ஏனைய இடங்களைப் பொறுத்தவரை
யில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் முன் அனுமதி
வழங்கலாம் என்று இந்தச் சட்டத்திலே கூறப்பட்டு இருந்தாலும்
ஏற்கனவே இருக்கும் பல்வேறு மாவட்டங்களில் அந்த மாவட்ட
ஆட்சித் தலைவரின் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்து
தியேட்டர்களுக்கு அனுமதி கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது
ஆகவே, இதைப்பொறுத்தவரையில் இந்த அனுமதி கொடுப்பது
என்பதை தனியாக ஒரு இலாகா அமைத்து அவர்கள் மூலம்
இந்த அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இந்தச் சட்டம் 11-1-1984-ல் இருந்து 4 வாரத்திற்குள்
அதாவது 11-2-1984-க்குள் அமலுக்கு வந்ததாகக் கருதப்
படும். இன்றைய தினம் நாம் இங்கே விவாதித்துக் கொண்டு இருக்
கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அப்படி
காட்டக்கூடியவர்களைக் கைது செய்யும் சூழ்நிலை இருக்கிறது.
ஏன் முன் அனுமதி பெறவில்லை என்று அவர்கள் மீது நட
வடிக்கை எடுக்கலாம். ஆகவே, இம்மாதிரியான கொடுமை
யான சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு).

[1984 பிப்ரவரி 2

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கே பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிற பட்டியலில் உங்களுடைய பெயர் இல்லை.

(முற்பகல் 11-40)

**திரு. துரைமுருகன் :** சட்ட முன்வடிவுகளில் பேசும்போது, பெயர் கொடுத்தவர்கள்தான் பேச வேண்டுமென்றில்லை; மற்றவர்களும் பேசலாம். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது எங்களுடைய கட்சியின் சார்பிலேயும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் காங்கிரஸ் கட்சிகளின் சார்பிலேயும் நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடம் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்கள் பதில் சொல்லும்போது அதற்கும் சேர்த்து பதில் அளித்துவிடுவார்கள். இதிலே 'பப்ளிக் வியூயிங், பிரைவேட் வியூயிங்'' அதாவது தியேட்டரிலே போய் உட்கார்ந்து படம் பார்ப்பது வீட்டிலே உட்கார்ந்து பார்ப்பது என்று இரண்டு நிலை இருக்கிறது. நேற்று உயர்நீதிமன்றத்தில் ரிட் பெட்டிஷன் ஒன்று போட்டிருக்கிறார்கள். வீட்டிலே உட்கார்ந்து படம் பார்ப்பதை தடுக்கக் கூடாது என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

பணம் போட்டவர்கள் நாங்கள் எல்லாம் வசூல் செய்ய வேண்டும் என்கிறார்கள்; அரசாங்கத்திற்கு வரி கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அது வேறு விவகாரம், நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. என்னுடைய வீட்டில் அல்லது ஒரு தனி மனிதன் வீட்டில் உட்கார்ந்து படம் பார்த்துக்கொண்டிருக்கிறபோது நண்பர் அல்லது சொந்தக்காரர் ஒருவர் அங்கே வருகிறார். இந்த மசோதாவிலே 'பாமிலி மெம்பர்' என்று போட்டிருக்கிறீர்கள். வீட்டுக்கு வந்தவரை நீ பாமிலி மெம்பர் அல்ல, வெளியே இரு, நான் படம் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்ல முடியுமா?

இரண்டாவது பிரச்சனை, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட 49-வது இனம் இந்த 'காப்பி ரைட் சென்சார்' செய்வது. மத்திய அரசிடமிருந்து அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ள நமக்கு உரிமை இருக்கிறதா? இதிலே நம்முடைய இஷ்டத்திற்கு சட்டம் போட முடியுமா?

வீட்டிலே கொண்டு வந்து போலீசை விடுவது தவறான காரியம். இதிலே நிறைய இம்ளிகேஷன் வந்துவிடும். அமைச்சரவர்கள் இதை பரிசீலனை செய்து, கவனம் செலுத்தி, இந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 23]

***மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திற்கு வைத்திருக்கிற இந்த தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவின் மீது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ரகுமான்கான் அவர்களும், துரைமுருகன் அவர்களும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மாண்புமிகு சங்கரய்யா அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திரு. நல்லப்பன் அவர்களும் சில சந்தேகங்களை எழுப்பி, அந்த ஐயப்பாடுகளைப் போக்கினால், எந்த நோக்கத்திற்காக இந்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படுகிறது என்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ளவதற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தில் சில பிரச்சினைகளை இங்கே முன் வைத்திருக்கிறார்கள்.

எவ்வளவோ முக்கியமான பிரச்சினைகள் இருக்கிறபோது இப்போது இந்த சட்ட முன்வடிவு தேவையா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் கேட்டார்கள். நாமெல்லாம் நாள்தோறும் செய்தித் தாள்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை செய்தித்தாள்கள் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறோம். நான் நேற்றே சொன்னேன். இன்றைக்கு இந்த வீடியோ பைரசி என்று அழைக்கப்படுகிற திருட்டுத்தனமாக வீடியோவை பயன்படுத்தி திரைப்படம் காட்டுகிற இந்தத் தொழில் இந்தியா முழுவதும் அல்ல உலகம் முழுவதும் இன்றைக்கு மிகப் பெரும் பிரச்சனையாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசின் சார்பிலே மத்திய அமைச்சர்கள் மிக விரைவிலே கடுமையான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களிலே இதற்கான தடைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை எப்படி தடுப்பது, ஒழுங்கு படுத்துவது என்ற அந்தப் பிரச்சனையிலேதான்—எதற்குள்ளே நுழைந்தாலும் அதிலிருந்து சட்டத்தினுடைய சந்து பொந்துகளை பயன்படுத்திக்கொண்டு வெளியே வந்து சமூகவிரோதமான காரியங்களுக்கே தங்களுடைய திறமையை, அறிவை, ஆராய்ச்சியைப் பயன்படுத்துகிற சமுதாய விரோதிகள் இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகிற இந்த காலத்தில் விஞ்ஞானம் நமக்கு கண்டுபிடித்துத் தந்திருக்கிற ஒரு அற்புதமான சாதனத்தை சமூகத்தை அழிப்பதற்கும், சமூகத்தை கறைப்படுத்துவதற்கும் சமுதாய மக்களைக் கெடுப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு கொடிய நோய் போன்ற இந்த வீடியோ திரைப்பட தொழிலை தடை செய்ய வேண்டுமென்ற மிக நெருக்கடியான கட்டத்திலே இந்த நாடும் வந்து கொண்டிருக்கிறது; இந்த உலகமும் வந்து கொண்டிருக்கிறது. பிரிட்டனிலே மிகக் கடுமையான சட்டம் நிறைவேற்றப்பட்டு, நீங்கள் இங்கே இப்போது குறிப்பிட்டு அச்சத்தோடு இதற்கு

விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே, வீடுகளுக்கு உள்ளே யாராவது அந்த வீடியோ படத்தைப் போட்டு பார்த்தால், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி காவல் துறையினர் உள்ளே புகுந்து தொல்லைப் படுத்தமாட்டார்களா, வேண்டுமென்றே தொல்லைப்படுத்தி அவர்கள் மீது வழக்கு போடமாட்டார்களா என்று ; அப்படியே பிரிட்டனில் சட்டம் கொண்டு வந்து இருப்பதால் , கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இந்த டேப்களை வீடியோ நாடாக்களை வைத்துக் கொண்டிருக்கின்ற தனியார்கள் கூட, இது என்னுடையது அல்ல என்று சொல்கிற சூழ்நிலையை பிரிட்டனில் உருவாக்கியிருக்கிறார்கள். நாம் அந்த அளவிற்கு போகப் போகிறோம் என்று நான் சொல்லவில்லை. உங்களுடைய சந்தேகத்தை தெளிவாக்க நான் அரசின் சார்பாக உறுதியாக பதில் அளிக்க இருக்கிறேன். ஆனால் நேற்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பேசும்போது, திரைப்படத் தொழிலை பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்தச் சட்டத்தை கொண்டு வருகிறீர்களா என்று குறிப்பிட்டார். திரைப்படத் தொழில் பாதுகாக்க வேண்டாத தொழில் என்று இப்போது அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்களோ என்னவோ தெரியாது. அந்தத் திரைப்படத் தொழில் மீது இவ்வளவு கோபம் அவருக்கு வரக் கூடாது. ஏனென்றால், நாமெல்லாம் திரைப்படத்திலிருந்து வளர்ந்தவர்கள் , வந்தவர்கள். ஆகவே, திரைப்படத் தொழில் அழிந்து கொண்டு வரவேண்டுமென்று அவர்கள் வேறு ஏதாவது காரணத்தை எண்ணிக் கொண்டிருந்தால், அது—-அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போன்ற காரியமாகுமே தவிர, அந்தக் கோபத்திற்கும், திரைப்படத் தொழில் அழிவிற்கும் சம்பந்தம் அல்ல. திரைப்படத் தொழிலை பாதுகாப்பதற்கு மட்டும் இந்தச் சட்ட முன்வடிவு அல்ல என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உலகத்திலே விஞ்ஞானம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞான கண்டுபிடிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மனித சமுதாயத்தை வாழ வைப்பதற்காகவா அல்லது அழிப்பதற்காகவா என்பது மிகப் பெரிய பிரச்சினையாக விவாதிக்கப்படுகிறது. ஆகவே, மனித சமுதாயத்தை அழிப்பதற்காக விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அல்ல என்பதை நாம் எப்படி ஒப்புக்கொள்கிறோமோ, அது போல மனித சமூதாயத்தின் ஒழுக்கத்தைச் சிதைக்க, கட்டுப்பாட்டைக் குலைக்க, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற முறையில் இன்றைக்கு உலகம் முழுவதும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. எங்கேயோ பற்றிய நெருப்பு நம்மிடத்தில் பற்றிக் கொண்டு, பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, உலகச் சூழ்நிலையில், வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற இந்த விஞ்ஞான உலகத்தில் இப்போது இந்த நோய் நம்முடைய நாட்டையும் பற்றிக் கொண்டிருக்கிறது. வீடியோ பைரசி - பெரிய கொள்ளை நோயாக தொற்றி பரவிக் கொண்டிருக்கிறது.





மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக சங்கரய்யா அவர்கள் சொன்னார். எங்கேயோ ஒரு சிறிய இடத்தில், சிறிய பெட்டியை வைத்துக் கொண்டு வீடியோ டெலிவிஷன் வைத்துக் கொண்டு, படத்தைக் காட்டுகிறார்கள்? அதை தடுக்கிறீர்களே என்று கேட்கும்போது, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற கட்சித் தலைவர் அவர்களா, மாண்புமிகு சங்கரய்யாவா இதைக் கேட்கிறார் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு நாள்தோறும் வருகிற செய்திகளைப் பார்த்தால், நாளிதழ்களில் பார்த்தால், அதில் வருகின்ற படங்கள், குற்றங்கள் அதிகரித்து, சமுதாயத்தைக் கெடுக்க முனைகிறார்களோ என்று பார்க்கிற போது, நெருப்பு பிடித்து விட்டது என்று தெரிந்த பிறகு, அதை அணைக்க வேண்டிய அவசரமான முனைப்பிலே அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, நீங்கள் இவ்வளவு அச்சத்தோடும், அல்லது ஐயப்பாட்டோடும், இந்தச் சட்டத்தை அணுகுகிறீர்களே என்பதைத்தான் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(முற்பகல் 11-50)

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினரா இப்படிப் பேசுகிறார் என்று அமைச்சர் கேட்கிறார். நாங்கள் பேசுவது முற்றிலும் நியாயமானது. நாங்கள் சொல்வது, வீடுகளிலே பார்க்கக் கூடியவர்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் இருக்கக்கூடாது. மற்றபடி இந்தப் படங்களைப் பொறுத்த வரையிலும், அண்ணா தி.மு.க. வைக் காட்டிலும், தமிழகத்தினுடைய மொராலிட்டியைப் பாதுகாப்பதிலே, ஆபாசப் படங்களைத் தடுப்பதிலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் இருக்கிறது. உதாரணமாக, தமிழ்நாட்டிலே போடப்படக்கூடிய ஆபாசப் படங்களுக்காக, அதைத் தடை செய்வதற்காக நீங்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா? அப்படி நீங்கள் எடுத்தால் அதை நாங்கள் வரவேற்போம். ஆகவே, ஆபாசப் படங்களை தடை செய்வதற்கு வேறு சட்ட விதிகள் இருக்கின்றன. அதற்காக இந்தச் சட்டம் தேவையில்லை. ஏற்கனவே இந்த ஆபாசப் படங்களைத் தடை செய்வதற்கு அதைத் தண்டிப்பதற்கு சட்டம் இருக்கிறது. அதை இன்னும் கடுமையாக கடைபிடிக்க வேண்டும். நீங்கள் இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுங்கள். ஆனால், அதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம். இதை ஆட்சேபிப்பதற்கு நாங்கள் கூறியது வேறு காரணங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் வீடுகளுக்குள்ளே போட்டுக் காட்டுவதை தடுக்கின்ற அந்த வகையிலே ஏற்படுகின்ற அச்சத்தை பற்றிக் குறிப்பிட்டதை நான் குறிப்பிடவில்லை. ஒரு தொழிலாக, வியாபாரமாக எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாத வியாபாரமாக, இந்த நாடு மூழுவதும் பரவிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நடத்தப்படுகிற இந்த

நிகழ்ச்சியைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். ஒரு இடத்திலே ஒரு சிறிய டீ கடை என்று இருக்கிற அளவிலே உள்ள இடத்தில் மிகப் பெரிய கூட்டம், ஒரு நாளைக்கு, 5 காட்சிகள், 6 காட்சிகள் நடத்துகிறார்கள். ஒருவருக்கு 20 ரூபாய் வசூலிக்கிறார்கள். 70 பேர்கள் அங்கே உட்காருகிறார்கள். ஒரு காட்சிக்கு 1,400 ரூபாய், 1 நாளைக்கு 5 காட்சிகள் என்றால், 7,000 ரூபாய் . ஒரு மாதத்திலே 2 இலட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய். நான் அவர்கள் ரூபாய் சம்பாதிப்பதைப் பற்றி பார்த்துப் பொறாமைப்படவில்லை. சம்பாதிக்கிறார்களே என்று நான் எண்ணவும் இல்லை. 20 ரூபாய் கொடுத்து அந்தப் படத்தைப் பார்க்கப் போகிறார்கள் என்றால், இந்த நாட்டுக்குள்ளே, திருட்டுத்தனமாக கடத்தி வரப்பட்ட, சென்சார் செய்யப்படாத ஆபாசங்கள் நிறைந்த ஒரு வெளிநாட்டுப் 'படம். அங்கே அதிகாரிகள் போய் கேட்கிறபோது, நாங்கள் வீடியோ பார்லர் நடத்துகிறோம், டீ கடை நடத்துகிறோம், நாங்கள் இந்த 20 ரூபாய் வாங்குவது என்பது படம் காட்டுவதற்காக அல்ல, அவர்களுக்கு டிபன் தருகிறோம், பலகாரம் தருகிறோம், காப்பி தருகிறோம், அதற்காகத்தான் நாங்கள் கட்டணம் வசூலிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இப்படி சட்டத்தை ஏமாற்றுவது, சமூதாயத்தை பாழ்படுத்துவது என்கிற வகையிலே, நிகழ்ச்சிகளை வளர்த்துக் கொண்டு இருக்கிற சூழ்நிலைகள் நகர்ப்புறங்களில் மாத்திரமல்ல, ஒன்றும் அறியாத பாமர மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற கிராமப் பகுதிகளிலே இன்றைக்கு தீ போல், காட்டுத்தீ போல் பரவிக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல், அந்த வீடியோ பார்லரிலே, ஒரு குறிப்பிட்ட பார்லரிலே, வெளிநாட்டிலேயிருந்து வந்த, சென்சார் செய்யப்படாத படம் ஒன்று காட்டப்பட்டது, அதன்மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். நாங்கள் கேட்பது நீங்கள் ஏற்கனவே இருக்கிற அந்தச் சட்டத்தின் மூலமாக அதை தடை செய்து நடவடிக்கை எடுக்க முடியுமா ? இல்லையா ? அப்படி எடுக்க வேண்டியதுதானே ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, அங்கே தான் வருகிறேன். ஏற்கனவே டெலிவிசன் கிடையாது. வீடியோ கிடையாது. வீடியோ டேப் கிடையாது. வீடியோ ரெக்கார்டர் கிடையாது. இது விஞ்ஞான கண்டுபிடிப்பின் விளைவாக புதியதாக வந்திருக்கின்ற கருவிகள். நமக்கு இருக்கிற சட்டம் எல்லாம் திரைப்படங்களை ஒழுங்குபடுத்துகிற சட்டம், அவர்கள் போய் கேட்டவுடனே, ஹை கோர்ட்டிலே ரிட் போட்டு ஸ்டே வாங்கினார்கள். நீங்கள் எந்தச் சட்டத்திற்குள்ளே என்னை வந்து பிடிக்கிறீர்கள், இது திரைப்படத்திற்குள்ளே வராது, நான் சினிமா காட்டவில்லை, நான் டெலிவிசன் காட்ட வைத்திருக்கிறேன். டெலிவிசனுக்கு என்னிடம்





லைசென்ஸ் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த வி.சி.ஆர். என்று சொல்கிறபோது, வீடியோ கேசட் ரெக்கார்டர் அதற்கு சட்டம் தேவையில்லை, அனுமதி தேவையில்லை, நான் அதை வேண்டுமானாலும் காட்டுவேன், நான் அந்தப் படத்தைக் காட்டவில்லை, என்னிடம் அந்தப் படமே இல்லை என்கிறார்கள். உள்ளே நுழைந்தவர்களுக்கு தடை வாங்குவதற்கு உயர்நீதிமன்றத்திற்குப் போனார்கள். நம்முடைய கைகள் கட்டப்பட்டுவிட்டன. காரணம், டெலிவிசன் புதிதாக வந்தது. அந்த டெலிவிசனிலே நம்முடைய தொலை தூரக் காட்சியை நடத்துகிற அந்த டெலிவிசன் நிலையம் இருக்கிறதே அவர்கள் தயாரித்து ஒளிபரப்புகிற காட்சிகளைத் தான் நாம் பார்க்க வேண்டும். அதற்குத் தான் நமக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதைப் போல ரேடியோ வைத்து இருந்தால் எந்த ஸ்டேசன் ஒலிபரப்புகிறதோ, அதைத் தான் கேட்க வேண்டும். புதிதாக நாமே ஒரு ஸ்டேசனை தயாரித்து ஒலிபரப்புகிற அதிகாரம் யாருக்கும் இல்லை. அதைப் போலத்தான் இந்த சென்னை தொலைக்காட்சி நிலையத்திலோ மற்றும் டெல்லியிலோ, அல்லது வேறு மாநிலங்களிலேயிருந்து - உங்களுக்குச் சக்தியிருந்தால் - இங்கே பக்கத்திலேயிருக்கிற இலங்கையிலோ, இருந்து காட்டப்படுகிற அந்தப் படங்களைப் பார்ப்பதற்குத்தான் நமக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களும் அனுமதி தருகிறார்கள். அது கூட வெளிநாட்டுக் காட்சிகளை தடுக்கக்கூட இந்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது, பார்க்க முடியாது. ஆனால், இப்படி டெலிவிஷன் வந்ததற்குப் பிறகு வீடியோ கேசட் ரெக்கார்டர் என்று பெயர் கொண்ட ஒரு விஞ்ஞானக் கருவி வந்ததன் மூலமாக, இப்படித் திருட்டுத்தனமாக பதிவு செய்யப்பட்ட இந்த நாடாக்களின் மூலமாக, எந்தவிதமான அனுமதியும் பெறாமல் யாரிடத்திலும் சொல்லாமல், தவறான முறையிலே அந்த காட்சிகளை நடத்திக் கொண்டிருக்கிற அந்த முறையை தடுப்பதற்கு இன்றைக்கு இருக்கின்ற சட்டத்திலே இடம் இல்லை.

அதற்குத்தான் இந்திய அரசு மட்டும் அல்ல, உலகம் முழுவதிலும் உள்ள அரசாங்கங்களுமே, இவர்களை எதிர்த்து இப்படி திருட்டுத்தனமாக பதிவு செய்யும் தனிப்பட்ட நபர்களை எதிர்த்து சட்டம் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏனென்றால், கோடிக் கணக்கிலே டாலர்களை வெளிநாடுகளிலே திரைப்படத் துறையிலே முதலீடு செய்பவர்களை இவர்கள் உலகம் முழுவதும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இங்கே கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த வீடியோ கேசட்டுகளைப் பயன்படுத்தி, இந்தப் புதிய விஞ்ஞான நுட்பத்தைப் பயன்படுத்தி, அவர்கள் நம்முடைய படங்களையும் அனுமதி இல்லாமல் போடுவதற்கு ஆரம்பித்தார்கள்.

பக்கத்திலே ஒரு திரை அரங்கம்—50, 60 லட்சம் ரூபாய் செலவிலே மிகப்பெரிய வசதியான அரங்கத்தை—கட்டியிருக்கிறார்கள். நாம் கேட்கின்ற வசதிகளை அவர்கள் அங்கே வைத்து கட்ட

வேண்டும். நாம் கேட்கின்றபடியெல்லாம் மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும். இவ்வளவு எல்லாம் செய்து, இவ்வளவு முதலீட்டிற்குப் பிறகு, பணம் செலவழித்து படம் எடுத்தவர்களுக்கும் படத்தை வாங்கியவர்களுக்கும் பணம் கொடுத்து கொண்டு வந்து படத்தைப் போட்டால், அந்தப் படம் ரிலீஸ் ஆவதற்கு முன்னாலேயே திருட்டுத்தனமாக வீடியோ கேசட்டுகளாக தயாரிக்கப்பட்டு வெளியே வந்து, 5 ரூபாய்க்கு டீ கடையிலே போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இதிலே திரை அரங்கத்திற்கு நட்டம் வருவதற்காகவோ, அரசாங்கத்திற்கு கேளிக்கை வரி பாதிக்கப்படுகிறது என்பதற்காகவோ பிரச்னை அல்ல.

இந்த முறையை நாம் அனுமதிக்கப் போகிறோமா ? இந்த முறை நாட்டிலே வளர வேண்டும் என்று விரும்புகிறோமா? கள்ளக் கடத்தல் பொருள்கள் இந்த நாட்டிற்குள்ளே வரக்கூடாது. கலப்படப் பொருள்கள் இந்த நாட்டிலே உலவக் கூடாது என்று நாம் எண்ணுகின்ற நேரத்தில், அதற்கென தனிச் சட்டங்கள் கொண்டு வருகின்றபோது, இப்படி ஒரு விஞ்ஞான தன்மையை பயன்படுத்தி, கள்ளக் கடத்தலையும் கலப்படத்தையும் செய்து கொண்டிருக்கிற, ஒரு தொழிலை கட்டுப்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பதுதான் நம் முன்னாலே இருக்கின்ற கேள்வி.

அந்த அடிப்படையிலேதான் நாம் இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற் நேரத்தில், இதை ஒரு திரைப்பட லைசன்ஸ் பெறுவதற்குள்ள எல்லா உரிமங்களையும் எல்லா நிபந்தனைகளையும் இதற்குள்ளே வைத்தால்தான், இவர்களை முதலிலே கட்டுப்படுத்த முடியும், கட்டுப்பாட்டிற்குள்ளே கொண்டு வர முடியும் என்றுதான் அரசாங்கம் 1955-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சினிமா ரெகுலேஷன் ஆக்ட்டிலே இருக்கிற பிரிவுகளை அப்படியே சேர்த்திருக்கிறது.

இதற்குள்ள ஒரு அடிப்படை காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள், அப்படியானால் இதை வளர்க்கப்போகிறீர்களா, ஆங்காங்கே மினி தியேட்டர்களை உருவாக்கப் போகிறீர்களா என்று கேட்டார். இன்றைக்கு நம்முடைய அரசின் நோக்கம் இதை உருவாக்க வேண்டும் என்பது அல்ல. இதை உற்சாகப்படுத்த வேண்டும் என்பது அல்ல. முதலில் இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

என்றைக்காவது ஒரு நாள் இந்த விஞ்ஞான வளர்ச்சி நம்மை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும்; அப்படி ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகிற போது முறையாக ஆக்கப்பூர்வமாக அதற்குரிய கட்டணங்கள் செலுத்தப்படும்.





100 பேர்கள் சேர்ந்து உட்கார்ந்து பார்க்கும் வகையில் இதை நடத்தப்போவதாக சொல்லி அனுமதி பெற விண்ணப்பிக்கட்டும். அப்போது அவர்களைக் கேட்கலாம். எங்கே வைத்து நடத்தப் போகிறாய் ? என்னென்ன கட்டணம் விதிக்கப்போகிறாய் ? மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் கேட்டார், ' அவர்கள் என்ன கட்டணமா விதிக்கப்போகிறார்கள் ' என்று. கட்டணம் என்பது எல்லாம், லைசென்சிங் கண்டிஷன் வருகிறபோது வரும். அனுமதிக்காக விண்ணப்பிக்கின்ற போது, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்பார்கள். என்ன கட்டணம் வைக்கப்போகிறாய். அதற்கு என்ன வசதி செய்யப்போகிறாய் ? அப்படியானால், சுற்றுப்புறச் சூழ்நிலை எல்லாம் எப்படி ? என்று கேட்டு அப்போது அவர் பார்த்துக் கொள்வார்.

இப்போது உத்திரப் பிரதேசத்திலே ஒரு சட்டம் இருக்கிறது. 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இந்த வீடியோ வரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் இவைகளெல்லாம் சேர்த்துத்தான், அங்கே அவர்கள் விண்ணப்பிக்கின்றபோது, இவர்களை கொஞ்சம் நிறுத்தி வைப்போம். தடைப்படுத்துவோம். தாமதப்படுத்துவோம். எங்கேயாவது தேவையானால் 1, ½ லட்சம் ரூபாய் செலவு செய்து, கிராமப்புறங்களிலேயோ வேறு எங்கேயோ, திரை அரங்குகள் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், அப்போது திரும்பவும் யோசித்து கொண்டு வருகிற நடவடிக்கைகளை தடுக்க முடியாத சூழ்நிலையில் நாம் மேற்கொள்ளலாம்.

(நண்பகல் 12–00)

ஆனால் இப்போது இந்த விதிக்களுகுள்ளே வாருங்கள், என்கிறோம். அப்படி இந்த விதிகளுக்குள்ளே வருகிறபோது கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுவார்கள். ஆகவே, இதிலே போடப்பட்டிருக்கிற அத்தனை விதிகளும், அத்தனை நிபந்தனைகளும், சட்டப் பிரிவுகளும் இவைகள் எல்லாம் பொது மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு தனியாக வீடியோ படத்தை போட்டு நடத்துகிறவர்களுக்குத்தானே, தவிர, வேறு அல்ல. நான் மிகத் தெளிவாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். வீடுகளுக்குள் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிற குடும்பங்களைத் துன்புறுத்துவதற்காக அல்ல. அதைத்தான் மிகத் தெளிவாக முதலிலேயே சொல்லியிருக்கிறோம். வீடுகளுக்குள்ளே போய் போலீஸ் அதிகாரி யாரிடத்திலேயிருந்து உரிமம் பெற்றிருக்கிறீர்கள் என்று சான்றிதழைக் கேட்பதற்கும் அதிலே வகை செய்யப்பட்டிருக்கிறதே என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நாங்கள் விதிகளை இயற்றி அவற்றை அமல்படுத்துகிற போது வீடுகளுக்குள் நுழைந்து கேட்பதை இப்போது, தற்காலிகமாக, அது எந்த அளவுக்கு துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறது—வீடுகள் என்ற பெயரால் விஷமிகள் உள்ளே நுழைந்துவிடுவார்கள், கள்ளக் கடத்தல்காரர்கள் நுழைந்துவிடுவார்கள், அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் என்னுடைய நண்பர்கள், சுற்றத்தார்கள் என்று சொல்வார்கள். ஆம்னி பஸ்ஸிலே போகிறவர்கள் எல்லாம்

ரிஸ்ட்களாக இன்றைக்கும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் எப்படி மீறப்படுகிறது என்று தெரிகிற காலத்திலே வேண்டுமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். நான் இப்போதே மிகத் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இந்த மன்றத்தின் மூலம் இந்த நாட்டிற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். வீடுகளுக்குள்ளே படத்தைப் போட்டுப் பார்க்கிற சூழ்நிலை வருகின்றபோது அந்த உரிமம் யாரிடத்திலேயிருந்து பெற்றீர்கள் என்று கேட்கிற அந்தப் பிரிவைப் பொறுத்தவரை சர்க்கார் சமீப காலத்திலே அமல் நடத்தாது அதற்குத் தேவையான விதிகளை உருவாக்கும் என்பதை மிகத் தெளிவாக உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இந்தச் சட்டத்தின் நோக்கமே, பொது வாழ்க்கையைப் பாழ்படுத்தி பொது மக்களை ஏமாற்றி, சமுதாயத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிற கடத்தல்காரர்கள், அந்த சமுதாய விரோதிகள் இன்றைக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை அதிலே புழங்கிக் கொண்டு கொள்ளையடிக்கிறவர்களைத் தடுக்க வேண்டும் என்பதுதானே தவிர வீடுகளுக்குள்ளே இந்த விஞ்ஞான வசதியைப் பயன்படுத்தி பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக அல்ல.

இன்னொன்றைச் சொன்னார்கள்..........

*திரு. துரை முருகன்: வீடுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அப்படியென்றால், இந்தச் சட்டத்திலிருந்து அந்த போர்ஷனை டெலிட் செய்துவிட்டால் தான் முடியும். நீங்கள் இங்கே வாக்குறுதி, செய்ய மாட்டோம் என்று கொடுத்துவிட்டீர்கள். ஆனால் போலீஸ் என்ன செய்வார்கள் என்றால்...................

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, அதற்கு விதிகளை உருவாக்கவிருக்கிறோம். விதிகளிலே ஒரு விதியாக நாங்கள் சேர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எப்போதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிற போது அந்த விதியினால் மாத்திரம் நடவடிக்கை எடுக்க முடியாது சட்ட உரிமை வேண்டும் என்று சொல்வார்களே தவிர, இப்போது சட்டத்திலே விதிகள் செய்வதற்கு இந்தச் சட்டத்திலேயே வகை செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அளிப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் அச்சப்பட்டார்களே, ஏன் அவர்களோடு மிகுந்த தோழமை கொண்டிருக்கிற காரணத்தினாலே நம்முடைய திரு. சங்கரய்யா அவர்களுக்கும் அச்சம் ஏற்பட்டதே..
..............

திரு. என். சங்கரய்யா : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அப்படிப் பார்ப்பதில்லை. பிரச்சினைக்குப் பிரச்சினை பார்த்து எதிலே நியாயம் இருக்கிறதோ அதன்படி செய்யும். நாளைக்கு பஸ் நேஷனலைஸ் கொள்கையை அரசு கைவிட்





டால் எல்லோரும் சேர்ந்து எதிர்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே நாங்கள் பிரச்சினையோடு அதைப் பார்ப்போமே தவிர தோழமை என்பது பிரச்சினையை வைத்துத்தான் தோழமை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆகவே அந்த விதிவிலக்கு அதிகாரத்தைக் கொண்டும் அந்த விதிகளைத் தளர்த்தி அந்தப் பிரிவைத் தளர்த்தி அரசாங்கம் ஆணையிடும். மிகத்தெளிவாகச் சொல்கிறேன், சமீப காலத்திலே இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகிற நேரத்திலே வீடுகளுக்குள் நுழைந்து பரிசோதிக்கிற அல்லது அதற்கு சான்றிதழ் இருக்கிறதா என்று கேட்கிற அந்தப் பிரிவைப் பொறுத்தவரையில் அரசு அமல் படுத்தாது என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படைக் காரணத்தை நீங்கள் துரதிருஷ்டவசமாக சந்தேகப்படுகிறீர்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சந்தேகப் பட்டாலும் காரணம் இருக்கிறது. அவர்கள் சந்தேகப்பட்டே ஆகவேண்டும். சந்தேகப்படவில்லையென்றால் எதிர்க்கட்சியாக இங்கே பணியாற்றி பெயர் எடுக்க முடியாது.

திரு. துரைமுருகன் : நம்முடைய அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சந்தேகப்பட்டாக வேண்டும் என்று எங்கள் மீது திணிக்கப்பார்க்கிறார். சந்தேகப்படவேண்டும் என்பதல்ல. பிரச்சினை, மதிப்பிற்குரிய திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல் நியாயத்தைச் சொல்கிறோம். பதில் சொல்லவேண்டிய பொறுப்பிலே இருக்கிறவர்கள் நீங்கள். உங்களுக்கே கூட தெரியாமல் சட்டத் துறையிலே அப்படிச் செய்துவிடுகிறார்கள். உதாரணத்திற்குப் பார்த்தால் இதிலே நீங்கள் போட்டிருக்கிற ரூலிலே வீடியோ லைசென்ஸ் அப்ளை செய்கிறவர்களுக்கு என்ன போடப்பட்டிருக்கிறது என்றால், Have you any previous experience in the line of giving exhibition of film on the Television Screen ? என்று போடப்பட்டிருக்கிறது. லைசென்ஸ் கேட்கிறவர்களுக்கு 3 வருடம் பிரிவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறதா என்று கேட்கிறீர்கள். லைசென்ஸே இப்போது தானே கொடுக்கப்போகிறீர்கள். எப்படி எக்ஸ்பீரியன்ஸ் வரும். இதற்கு முன்னாள் ஸ்யிசைட் பண்ணியிருக்கிறாயா என்று கேட்க முடியுமா? அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நீங்கள் அல்ல, யார் ஆட்சியில் இருந்தாலும் நிர்வாகத்திலே செய்துவிடுவார்கள். இன்னொன்றைப் போட்டிருக்கிறீர்கள். 21 வயது என்றால் எனக்குப் புரிகிறது. 18 வயது என்றால் பஞ்சாயத்துக்கு ஓட்டுப் போடுகிற வயது, எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த ரூலிலே 20 வயது என்று ஆக்கியிருக்கிறீர்களே 18-ம் இல்லாமல் 21-ம் இல்லாமல் 20 ஆக்கியிருக்கிறீர்களே, இது என்ன வீடியோ வய்தா ? ஆகவே சந்தேகப்படுகிறோம், அமைச்சர் அவர்கள் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட சந்தேகம், ஐயப்பாடு இல்லை என்றால் அதற்காக மகிழ்ச்சி, நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தேவையில்லாத இந்த சந்தேகத்தை எதற்கு கொண்டுவந்து இருக்கிறீர்கள்., எதற்கு கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்று நிழலைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. தயவு செய்து நாட்டில் நடக்கின்ற நிஜங்களைப் பாருங்கள். இன்றைக்கு நாடு முழுவதும் எவ்வளவு கொந்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதை அருள் கூர்ந்து பாருங்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு நான் இந்த அறிக்கையை காட்டுகிறேன். இது ஸ்கீரின் பத்திரிகை. இதில் இந்தியாவில் இருக்கிற தலைச்சிறந்த இசை வல்லுநர்கள். கவிதை இயற்றுபவர்கள், இந்த துறையில் ஈடுபட்டு இருக்கிற டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி; லதா மங்கேஸ்கரிடமிருந்து தொடங்கி இந்த நாடு முழுவதும் இருக்கிறவர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள், இசையைக் காப்பாற்றுங்கள், இந்த இசைத் திருட்டிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்ற வேண்டுகோளை விட்டு இருக்கிறார்கள் என்பதன் மூலம் இது எந்த எந்த அளவுக்கு எந்த எந்த துறையை இது பாழ்படுத்தி இருக்கிறது. அவர்களுடைய நியாயமான தொழிலை பாதித்துக் கொண்டிருக்கிறது. அவர்களை அழித்துக் கொண்டு இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

ஆகவே விதி விலக்கு அதிகாரத்தை ஏதோ தவறாகப் பயன்படுத்துவதற்காக அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது, வைத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த சட்டம் வருகிற போதும் அந்த விதி விலக்கு அதிகாரம் அதிலே இணைக்கப்படுகிறது. அது பரம்பரை பரம்பரையாக நடந்து வருகிற ஒன்று என்பதை நான் அருள் கூர்ந்து உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சரி, நாங்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளை எடுத்து அதை போட்டுப்பார்த்தால் அதையும் வந்து பறிப்பீர்களாார் என்றுகேட்கிறார்கள். தயவு செய்து நீங்கள் இந்தச் சட்டத்தினுடைய தலைப்பே திரைப்படம் காட்டுவதை ஒழுங்குப்படுத்துகிற சட்டம் தான். திரைப்படம் என்றால் நம்முடைய கல்யாணம் நடக்கிற நிகழ்ச்சிகளை அல்லது மாநாட்டை அல்லது வேறு பல நிகழ்ச்சிகளை எடுத்து போட்டுப் பார்க்கிற. அந்த தலைப்புக்குள் வரவில்லை.

இன்றைக்கு இந்தியாவில் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட Cinemotograph Act படியும், அல்லது சென்சார் சட்டத்தின்படியும், அல்லது மாநில அரசால் நிறைவேற்றப்பட்ட



1984 பிப்ரவரி 23] [திரு. ஆர். எம். வீரப்பன்]

Cinema Regulation Act படியும் இது சினிமா என்றால் திரைப்படம் என்றால் அந்த விதிக்குள் வருவதுதான் பொருந்துமே தவிர தேவையில்லாமல் நாமே அச்சத்தை வளர்த்துக் கொள்ள வேண்டியது இல்லை என்பதை நான் அருள் கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு நாடு முழுவதும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. சமுதாய விரோதிகளின் கையில் மிகப்பெரிய தொழில் சிக்கிக் கொண்டு அழிகிற சூழ்நிலையில் இருக்கிறது. எப்படி கள்ளக்கடத்தல் சாமான்கள் பிடிப்பது இங்கே வழக்கமாக இருக்கிறதோ, கள்ளக்கடத்தல் சாமான்களை கொண்டு வருவது குற்றமாக கருதப்படுகிறதோ, கள்ளக்கடத்தல் சாமான்களை வைத்து இருப்பது குற்றமாக கருதப்படுகிறதோ அதைப் போலதான் இந்த உரிமத்தைப் பற்றிய சான்றிதழ் பொருந்தும். அதிலே சிக்கல்கள் இருக்குமானால் நாம் அதை பரிசீலிக்கிறோம் விதிகள் உருவாக்குகிற போது அந்த சிக்கல்களை தவிர்க்கலாம். இங்கே சில பத்திரிகைகளில் கூட அந்த வீடியோ லைப்ரரிகாரர்களுக்காக வரிந்து வரிந்து கட்டிக் கொண்டு கட்டுரைகளும், செய்திகளும் எல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடியோ லைப்ரரிக்காரர்கள் முக்கியமாக இருக்கிறார்கள், இந்த நாட்டு மக்கள் அவ்வளவு முக்கியமாக இல்லை. காரணம் வீடியோ லைப்ரரிக்காரர்கள் இன்றைக்கு லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் முதலீடு செய்து வியாபாரம் செய்கிறவர்கள். அந்த ஏழை எளியவன் அவன் காட்டுகிற ஏதோ ஒரு படத்திற்கு கையில் இருக்கிற 20 ரூபாய் 30 ரூபாயை கொடுத்துக் கொண்டு அலைந்து கொண்டு திரிகிறான். ஆகவே அந்த கட்டுரையை எழுதுகின்ற பத்திரிகைகள் இன்றைக்கு மிகப் பெரிய சட்ட மேதைகள் போல் இருந்து கொண்டு விவாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். அது அவர்களுக்குள்ள உரிமை. அந்த உரிமை எங்கே போய் நிற்கிறது, என்பதைத் தான் காலையிலேயே நாம் பார்த்தோம். ஆனால் தனக்கு என்று வந்தால் தான் தலை வலியும், ஜுரமும் என்பதைப் போல சட்டமன்றத்தை வந்து தாக்குகிற போது அது நம்முடைய கவனத்திற்கு வருகிறது.

(பிற்பகல் 12-10)

மற்ற நேரங்களில் இதை விட்டு விடுகிறோம். ஆகவே, இன்றைக்கு வீடியோ லைப்ரரி நடத்துபவர்களுக்கு வாதாடுகின்றவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு சிறு கடைதானே வைத்திருகிறார்கள், அதற்குள்ளே என்ன தேடுவார்கள் என்று கேட்டால், கடைக்குள்ளேதானே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள கள்ளச் சாமான்கள் இருக்கின்றன ; கடைக்குள்ளேதானே இவ்வளவு வியாபாரமும் செய்யப்படுகின்றது.

ஆகவே, அங்கே உள்ள வீடியோ கேசட்டுகளுக்கு யாரிடத்திலேயிருந்து உரிமம் பெறப்பட்டது என்று அதைக் கேட்கவில்லை என்றால் எப்படி முடியும்? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கச்சேரி செய்கிறார்கள். அதை வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து கொண்டு அதை 50,000 பிரதிகள் போட்டு விற்றால் யாருக்கு நஷ்டம், யாருக்கு இலாபம் அவர்கள் யாரிடத்தில் அனுமதி கேட்பார்கள்?

அகில இந்திய வானொலி நிலயத்திற்கும் டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும் ஏற்பட்ட ஒரு கருத்து வேறுபாட்டின் காரணத்தால் அந்த வானொலி நிலையத்தில் பாடுவதில்லை என்று அவர்கள் முடிவெடுத்தார்கள். பாடப்போவதில்லை என்று முடிவெடுத்தார்கள் ஆனால் இப்பொழுது பாடுகிறார்களா இல்லையா என்பது தெரியாது. அப்படி முடிவெடுத்திருந்த எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் ஒரு கல்யாண வீட்டிலே கச்சேரி செய்தால், கல்யாண வீட்டுக்காரர் அந்த வீட்டு திருமண நிகழ்ச்சிகளை வீடியோ செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். கல்யாண வீட்டுக்காரரே இயந்திரங்களை வைத்து எடுப்பதில்லை. இம்மாதிரி வீடியோ லைப்ரரி வைத்திருப்பவர்களை பணம் கொடுத்து எடுக்கச் சொல்கிறார். அப்படிப் படம் எடுக்கின்றவர்கள், அவர்கள் கச்சேரி நிகழ்ச்சிகளை அந்தக் கல்யாண வீட்டுக்காரருக்குக் கொடுக்க வேண்டுமென்று அவசியமில்லை. அவர்களுக்குக் கல்யாண நிகழ்ச்சிதானே வேண்டும் என்று கேட்டுவிட்டு, அதை மட்டும் கொடுத்துவிட்டு, எம். எஸ். சுப்புலட்சுமியின் கச்சேரியை வீடியோ கேசட் மூலம் எடுத்து தாங்கள் கொண்டு போய் இரண்டாயிரம், மூன்றாயிரம் பிரதிகளை எடுத்துக் கொள்ள முடியும். இப்படி எம். எஸ். சுப்புலட்சுமிக்கு அவர்களின் கச்சேரிக்கு உள்ள மாண்பை, மதிப்பைக் கேவலப்படுத்தி, ஏமாற்றிச் செய்வது சரியாக இருக்குமா? உதாரணத்திற்காக நான் அவர்களின் பெயரைச் சொன்னேன். அதைத்தான் வேண்டுகோளாக இந்தியா ம்முழுவதும் இருக்கின்ற இசை வல்லுநர்கள் கையெழுத்துப் போட்டு இன்றைக்கு கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி வருகிறபோது அந்தக் கச்சேரியை வீடியோ கேசட்டில் பதிவு செய்து, விற்கின்ற பொழுது விற்கலாம், வாடகைக்கு விடலாம் என்றால் அவர்கள் எங்கே சான்றிதழ் வாங்கினார்கள்? எங்கே உரிமம் வாங்கினார்கள்?

திரையரங்குகளுக்கு அருகிலேயே வீடியோக்கள் மூலமாகத் திரைப்படங்களைப் போடுகிறார்கள்? அவர்களிடம் அந்தச் சான்றை எப்படிக் கேட்காமல் இருப்பது?

மத்திய அரசாங்கத்தின் உரிமையில் எப்படி நீங்கள் தலையிடலாம் என்று, மத்திய அரசாங்கத்திடத்திலிருந்து மாநிலங்களுக்கு அதிக உரிமைகளைக் கேட்டுப் போராட வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும் என்றெல்லாம் சொல்லுகின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மிகுந்த அக்கறையோடு மத்திய அரசாங்கத்திற்காக வாதாடுகிறார்கள். அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. நமக்கு அதிகாரங்கள் இல்லை என்றால், அந்த அதிகாரங்களைக் கேட்டுக் பெற வேண்டுமென்று சொல்லியிருந்தால் அதை என்னால் புரிந்து கொண்டிருக்க முடியும்.



நான் தெளிவுபடுத்துகிறேன். காப்பிரைட் கூட இப்பொழுது மத்திய சர்க்காருடைய அந்த எல்லைக்கு உட்பட்ட சட்டம்தான் அது தெரியாமல் நாங்கள் சட்டம் கொண்டு வரவில்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே; நான் அமைச்சரைப் பார்த்துத் தவறான கேள்வியைக் கேட்க விரும்பவில்லை அல்லது அவரைத் தவறான திசைக்குத் திருப்பவில்லை. தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் ஒரு கச்சேரியை கல்யாண வீட்டிலே செய்கிறார்கள் என்று சொன்னால் அதை வீடியோ எடுத்து 5,000 பிரதிகள், 4,000 பிரதிகள் என்று எடுத்து இலட்சக் கணக்கில் சம்பாதிக்கிறார்கள் என்றால், அதற்கு யார் பொறுப்பு?

நான் சொல்வது கச்சேரி செய்கின்ற எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களோ அல்லது வேறு வித்வான்களோ, யாராக இருந்தாலும் என்னைப் படம் எடுத்து விற்று விடுகிறீர்கள், ஆகவே கச்சேரி செய்யும் பொழுது வீடியோ எடுக்கக் கூடாது என்று கன்டிஷன் போடலாமே.

அடுத்து, காப்பி ரைட் உரிமையைப் பற்றிப் பேசினார்கள். மாநில சுயாட்சி கேட்பவர்கள், அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பவர்கள் இப்படிச் சொல்கிறார்களே என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள். மாநில சுயாட்சியோ அல்லது அதிக அதிகாரங்களோ போராடித்தான் பெற வேண்டுமே தவிர, த னாகவே எடுத்துக் கொள்ளக்கூடாது; அது என்க்ரோச்மென்ட்டாக ஆகிவிடும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்ல வந்தேன். அதாவது இருக்கின்ற அதிகாரத்தை இல்லை என்று சொல்லிவிட்டு நாம் நொண்டியாக இருப்போம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. காப்பிரைட் என்பது அவர்களுக்குத்தான் இருக்கின்றது. ஆனால் காப்பி ரைட் ஆக்டின் கீழே நீங்கள் உரிமம் வைத்திருக்கிறீர்களா சான்றிதழை வைத்திருக்கிறீர்களா என்று கேட்கின்ற உரிமையை மத்திய சர்க்கார் நமக்கு வழங்கி இருக்கின்றது. அதாவது சென்சார் செய்வது மத்திய சர்க்கார்தான். ஆனால் சென்சார் செய்யப்பட்ட படம் தான் ஓடுகின்றதா என்று கண்காணிக்கின்ற அதிகாரம் மாநில சர்க்காருக்கு இருக்கின்றது. அதன் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரத்திற்கு போகவில்லை, அதாவது காப்பி ரைட் என்பது மத்திய அரசினுடையதுதான். அந்த காப்பி ரைட் ஆக்டின்படி உரிமம் வைத்திருக்கிறீர்களா என்றுதான் நாம் கேட்கிறோமே தவிர, அதற்கும் மேலாக நடவடிக்கை எடுப்பதற்கு நாம் போகவில்லை. நான் இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசுக்கும் நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். நம்முடைய மத்திய செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் அவர்கள் மிக விரைவிலே இதற்கான ஒரு சட்டத்தை அகில இந்திய அளவில் கொண்டுவருவதாகக் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது கடுமையான சட்டத்தைக் கொண்டு வருவதாக தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அவையின் மூலமாக ஒன்றைச் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே இங்கே திருட்டுத் தனமாக இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த வீடியோ பைரசி என்று அழைக்கப்படுகின்ற நிலைமையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அதைப் போலவே இங்கே இறக்குமதி செய்யப்படுகின்ற இந்த வீடியோ டெக் என்று அழைக்கப்படுகின்ற கருவிகள் தனிப்பட்டவர்களின் உபயோகத்திற்காகத்தான் வரவேண்டுமே தவிர கமர்ஷியல் பர்ப்பஸிக்காக வரக்கூடாது என்ற நிபந்தனையோடு தான் அனுமதிக்கப்பட வேண்டுமே தவிர, உள்ளே பாம்பை விட்டு விட்டு அது எப்போது கடிக்கும் என்று இரவு பூராவும் காவல் காக்கின்ற வேலையைத் தயவுசெய்து மாநில அரசுக்கு ஏற்படுத்தாதீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். அவர்கள் அனுமதித்து விட்டதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் ஏன் அனுமதிக்கிறீர்கள்? இவ்வளவு கொடுமைகளைச் செய்யக் கூடியவர்களை, நூற்றுக்கணக்கான பேர்களை அனுமதிப்பதற்காக நீங்கள் ஏன் ஏற்பாடு செய்கிறீர்கள்? வீடுகளைத் தவிர வேறு எங்குமே இப்படிக் காட்டக் கூடாது என்று நீங்கள் ஏன் சட்டம் கொண்டு வரக் கூடாது என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே வந்ததற்குப் பிறகுதான் தீவிரமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறுகின்ற போது நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஏன் அவர்களுக்காக இங்கே வாதாடுகிறார் என்பதைப்பற்றித்தான் யோசிக்க வேண்டியிருக்கின்றது (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் ஒன்றாக எழுந்து பேச முற்படக் கூடாது. ஒவ்வொருவராகப் பேசுங்கள்.

திரு. என். சங்கரய்யா : இங்கே இவ்வளவு விவாதம் நடக்கின்றது. இதிலே கடுமையான பாதிப்புக்கள் இருக்கின்றது என்பதைச் சொல்கின்ற போது இங்கே நோக்கங்கள் கற்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நன் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த வீடியோ தயார் பண்ணுகின்ற பொறுப்





பினைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் ஏஜன்சி மூலம் தான் செய்ய வேண்டும் என்ற வகையிலே மத்திய சர்க்காரிடத்திலே நீங்கள் வற்புறுத்துவீர்களேயானால் அது சரியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதைத் தீய விஷயங்கள் என்று சொல்கிறார்களோ அந்தத் தீய விஷயங்கள் பரவுவதற்காக நூற்றுக் கணக்கான இடங்களில் லைசன்ஸ் கொடுக்க ஏன் நீங்கள் ஏற்பாடு செய்கிறீர்கள் என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, தீய விஷயங்கள் பரவுவதற்கு லைசன்ஸ் கொடுப்பதில்லை. அவர்கள் லைசன்சு–க்குள்ளே வந்து விட்டால் நம்முடைய கண்காணிப்புக்குள்ளே உட்படுத்தப்படுவார்கள். அது தான் பிரச்சினை. இல்லை என்றால் உள்ளே நுழைய முடியவில்லை ; அதிகாரம் இல்லை ; சட்டம் இல்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையில் சமுதாயத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற தீய நோய் போன்ற, கொள்ளை நோய் போன்ற வீடியோ பைரசி என்று சொல்லப்படுகின்ற சமுதாய விரோதமான காரியத்தைத் தடுப்பதற்காகத்தான் இந்த சட்ட முன்வடிவு வந்திருக்கின்றது. எனவே வீடுகளுக்குள்ளே ஒழுங்காக, முறையாக சட்டத்திற்கு உட்பட்டு படம் போடுபவர்கள் யாரும் அஞ்சத் தேவையில்லை. சட்டத்தை மீறுகின்றவர்கள் தான் சட்டத்தை தன் கையிலே எடுத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் படைத்தவர்கள்தான் இன்றைக்கு எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றிய தவறான கருத்துக்களை யார் கொண்டிருந்தாலும், அப்படி கருதிக் கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அதை விட்டு விட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வேறு எந்த நோக்கத்திற்காகவும், அல்லது வேறு எந்த காரணங்களுக்காகவும் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படவில்லை.

பரவிக் கொண்டிருக்கின்ற, அழிவைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கொள்ளை நோய் போன்ற இந்த வீடியோ பைரசி என்கின்ற அந்த வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். சமுதாயத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நோயைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

ஆகவே நடைமுறையிலே இதிலே ஏதாவது சிக்கல்கள் தோன்றினால் அதற்கான விதிகளை உருவாக்கி இருக்கிறோம். தேவைப்பட்டால் அந்த விதிகளிலே மேலும் விதிகளைச் சேர்ப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எந்தவிதமான சங்கடங்கள் வந்தாலும் அதாவது நியாயமானவர்களுக்குப் பரிகாரம் காண்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

எனவே இந்த நாட்டையே அழித்துக் கொண்டிருக்கிற ஒரு கொடுமையான காரியத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குத் தமிழ்நாடு அரசாங்கம் வழக்கம் போல் முன் மாதிரியாக இப்படி ஒரு சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. நாடு முழு

வதும் உள்ள மாநிலங்கள் வகை, வகையான, சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இயற்றவில்லை. அங்கே தனித்தனியாக வெவ்வேறு முறையிலே தடுத்திருக்கிறார்கள். இன்றுவரை அங்கே முழுமையாகத் தடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வளர் கிற விஞ்ஞானத்தையும் நாம் நிறுத்த முடியாது. ஆனால் விஞ் ஞானத்தைப் பயன்படுத்தி அழிவுப் பாதையிலே இழுக்கிறவர் களைத் தடுத்தி நிறுத்தியாக வேண்டும். அதற்கு இந்த அவை ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு வேறு எந்த நோக்கத் திலும் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படவில்லை. குறிப்பாகவும் இறுதியாகவும் சொல்கிறேன், வீடுகளுக்குள்ளே நுழைந்து அந்த உரிமம் பெற்றிருக்கிறார்களா என்று அந்த அனுமதியைக் கேட்பதிலிருந்து தேவையான விதிவிலக்கை அரசு விதிகளிலே சேர்க்கும் என்று தெரிவித்து, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 12-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** : பேரவை முன் னுள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன் னுள்ள கேள்வி : '' பிரிவு 9 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'' பிரிவு 9-இல் உட்பிரிவு (1) (பி) பிரிவு நீக்கப்பட வேண்டும். நீக்கப்படுவதால் அப் பிரிவில் தேவையான மாறுதல்கள் செய்யப் பட வேண்டும். ''

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்கள் மொழிந் ததை நான் வழி மொழிகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கிட்டத்தட்ட எதிர் வரிசையிலே இருக்கிற அத்தனை கட்சிகளும் இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசி





இருக்கின்றோம். எங்களுக்கு இருக்கின்ற ஐயங்களையும் தெளிவு படுத்தியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நான் திருத்தம் கொடுத்திருக்கிற 9 (1) உட் பிரிவை அரசாங்க அதிகாரிகள் அமுல் படுத்தமாட்டார்கள் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிற காரணத்தாலே இந்தப் பிரிவு நீக்கப்பட வேண்டுமென்று என்னுடைய திருத்தத்தினை நான் வலியுறுத்து கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு அடிப்படையாக அமைந் திருக்கிற அந்த ஐயப்பாட்டை ஒத்துக் கொண்டிருக்கிறேனே தவிர, அந்த விதி ஏன் இருக்கிறது என்பதற்கான காரணத்தைச் சொல்லியாக வேண்டும். அதைத்தான் நான் முதலிலேயே சொன் னேன். வீடு என்றால் யார் வீடு என்பதே இல்லாமல் போய் விடும். வீடுகளில், குடும்பங்களாகப் பார்த்துக் கொண்டிருப்ப வர்களுக்கு, அரசாங்கம் அந்த விதியைப் பொறுத்தவரை, பரி சீலித்து விதிவிலக்கு அளிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், அந்த விதி விலக்கு அளிக்கும்போது எப்படிப்பட்ட வீடுகள் என்றெல்லாம் நாம் வரைமுறைப் படுத்த வேண்டும். ஏனென் றால், அந்தச் சட்டப் பிரிவு இல்லையென்றால் இதைப் பயன் படுத்திக் கொண்டு சமுதாய விரோதிகள் வீடுகள் என்று உரு வாக்கினால், உறவுகள் என்று உருவாக்கினால், அதற்குள்ளே நாம் நுழைய முடியாது. அருள் கூர்ந்து அதற்கு விதிவிலக்குக் கேட்கும்போது, வீடு என்பதை வரைமுறைப்படுத்தி விட்டு வீடு களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வீடுகளுக்குள்ளே நுழைந்து அந்த உரிமம் கேட்கிற பிரிவுகளுக்கு விதி விலக்கு அளிக்க அரசு தயாராக இருக்கிறது.

**THIRU N. S. V. CHITHAN:** I press my amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** : பேரவை முன் னுள்ள கேள்வி : '' பிரிவு 9 இல் உட்பிரிவு (1) (பி) பிரிவு நீக்கப் பட வேண்டும். நீக்கப்படுவதால் அப்பிரிவில் தேவையான மாறுதல்கள் செய்யப்பட வேண்டும் ''.

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, நான் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

(வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெறுவதற்காக மணியடிக்கப் பெற்றது.)

**திரு. துரைமுருகன்:** பெல் அடித்து நின்ற பிறகு இரண்டு உறுப் பினர்கள் உள்ளே நுழைகிறார்களே, பெல் நின்ற பிறகு அவர் களை அலவ் செய்யக் கூடாது.

[1984 பிப்ரவரி 23

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதவை மூடுவதற்கு உத்தரவிட்ட பிறகு தான் யாரும் உள்ளே வரக் கூடாது. நீங்கள் இன்னும் கதவை மூட உத்தரவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கதவை மூடுவதற்கு நான் இன்னும் உத்தரவிடவில்லை. நான் கதவை மூடுவதற்கு உத்தர விட்டு, கதவு மூடியதற்கு பின்னால்தான் யாரும் உள்ளே வரக் கூடாது. இப்போது கதவை மூட உத்தரவிடுகிறேன். (கதவுகள் மூடப்பெற்றன.)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

| | | | |
|---|---|---|---|
| ஆதரித்தோர் | .. | .. | 43 |
| எதிர்த்தோர் | .. | .. | 91 |
| நடுநிலை வகித்தோர் | | .. | 1 |

திருத்தத்திற்கு எதிராக 48 வாக்குகள் அதிகமாக கிடைத்துள்ளதால் திருத்தம் தோல்வியுற்றது.

எதிர்த்தோர்.

1. திரு. இரா. மணிமாறன்.
2. திரு. பி. எச். பாண்டியன்.
3. திரு. சி. வி. வேலப்பன்.
4. திரு. வி. வி. சுவாமிநாதன்.
5. திரு. எஸ். எஸ். இராசேந்திரன்.
6. திரு. ச. அங்குசாமி.
7. திரு. கே. எம். அப்துல் ரசாக்.
8. திரு. சேலம் மு. ஆறுமுகம்.
9. திரு. மே. அ. இராசகுமார்.
10. திரு. த. இராமசாமி.
11. திரு. இ. இராமசுப்பிரமணியம்.
12. டாக்டர் கே. பி. இராமலிங்கம்.
13. திரு. ம. கண்ணன்.
14. திரு. கே. ஆர். கணபதி.
15. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்.
16. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
17. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்.



1984 பிப்ரவரி 23]

எதிர்த்தோர்—தொடர்ச்சி.

18. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
19. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.
20. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்.
21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்.
22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்.
23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிசாமி.
24. திரு. இ. கணேசன்.
25. திரு. சி. கணேசன்
26. திரு. கா. வே. கந்தசாமி.
27. திரு. பி. கந்தசாமி.
28. திரு. பெ. கலியமூர்த்தி.
29. திரு. அ. கலையரசன்.
30. திரு. கா. கோ. கிருஷ்ணசாமி.
31. திரு. ஜி. கிருஷ்ணராஜ்.
32. திரு. என். குப்புசாமி.
33. திரு. செ. குப்புசாமி.
34. திரு. ப. குருசாமி.
35. திரு. எம். அண்ணாதாசன்.
36. திரு. நா. குலசேகரபாண்டியன்.
37. திரு. இரா. அமிர்தராஜ்.
38. திரு. சி. கோபால்.
39. திரு. கா. கோபாலகிருஷ்ணன்.
40. திரு. ஆர். சக்ரபாணி.
41. திரு. இரா. சண்முகம்.
42. திரு. சி. சபாபதி.
43. திரு. சி. சிவப்பிரகாசம்.
44. திரு. மு. சிவபெருமான்.
45. திரு. எம். சின்னசாமி.
46. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து.
47. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
48. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.
49. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி.
50. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.
51. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்.
52. திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிப்ஸ்.

எதிர்த்தோர்—தொடர்ச்சி.

53. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்.
54. திரு. கு. அ. செங்கோட்டையன்.
55. திரு. செ. செம்மலை.
56. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி.
57. திரு. ஏ. எம். சேதுராமன்.
58. திரு. கே. சௌந்திரராசன்.
59. திரு. ஏ. தங்கராசு.
60. திரு. ஆர். தவசி.
61. திரு. இரா. தாமரைக்கனி.
62. திரு. பெ. திருமாறன்.
63. திரு. இரா. திருமான்.
64. திரு. கே. உச்சி,
65. திரு. பூ. மு. நரசிம்மன்.
66. திரு. செ. பட்டாபிராமன்.
67. திரு. சு. பழனிசாமி.
68. திரு. ச. பாலகிருஷ்ணன்.
69. திரு. க. பாலசுப்பிரமணியம்.
70. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
71. திரு. ஏ. பெரியசாமி.
72. திரு. என். பெருமாள்.
73. திரு. ரா. கு. பெருமாள்.
74. திரு. எம். எஸ். மாணிக்கம்.
75. திரு. த. மாரிமுத்து.
76. திரு. சு. முத்துக்கிருஷ்ணன்.
77. திரு. இரா. முத்தையா.
78. திரு. பி. சட்டநாதகரையாளர்.
79. திரு. ஜி. மூர்த்தி.
80. திரு. ஆர். ரங்கசாமி.
81. திரு. மி. வின்செண்ட்.
82. திரு. பி. எம். வெங்கடேசன்.
83. திரு. கோ. விஸ்வநாதன்.
84. திரு. த. வீராசாமி.
85. திரு. கே. எம். சுப்பிரமணியம்.
86. திரு. மா. சுப்பிரமணியன்.
87. திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்.



எதிர்த்தோர்—தொடர்ச்சி.

88. திரு. ஆ. வெள்ளைச்சாமி.
89. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
90. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்.
91. திரு. வே. இரா. ஜெயராமன்.

ஆதரித்தோர்.

1. திரு. சோ. அழகர்சாமி.
2. திரு. ப. நெடுமாறன்.
3. திரு. தி. கா. நல்லப்பன்.
4. திரு. என். ஏ. பூங்காவனம்.
5. திரு. எஸ். என். இராமசாமி.
6. திரு. ஏ. சாகுல் அமீது.
7. திரு. செ. சிவசாமி.
8. திரு. மு. அப்பாதுரை.
9. திரு. என். பழனிவேல்.
10. திரு. கே. ஆர். சுந்தரம்.
11. திரு. எம். ஆறுமுகம்.
12. திரு. டி. மணி.
13. திரு. ஏ. டி. கருப்பையா.
14. திரு. என். எஸ். வி. சித்தன்.
15. திரு. என். சங்கரய்யா.
16. திரு. ரா. உமாநாத்.
17. திரு. எல். பலராமன்.
18. திரு. நா. சுந்தரராஜ்.
19. திரு. சு. பாலன்.
20. திரு. துரைமுருகன்.
21. திரு. கு. ரமணி.
22. திரு. என். வரதராசன்.
23. திரு. பெ. சு. திருவேங்கடம்.
24. திரு. செ. சொக்கலிங்கம்.
25. திரு. ஜே. எஸ். இராசு.
26. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
27. திரு. ஆர். சுந்தரமூர்த்தி.
28. திரு. த. வேணுகோபால்.
29. திரு. அ. ரகுமான்கான்.

ஆதரித்தோர்—தொடர்ச்சி.

30. திரு. எம். செல்லமுத்து.
31. திரு. ப. பொன்னுரங்கம்.
32. திரு. து. புருஷோத்தமன்.
33. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்.
34. திரு. கு. பா. பழனியப்பன்
35. திரு. என். வி. என். சோமு.
36. திரு. சித. சிதம்பரம்.
37. திரு. எல். இளையபெருமாள்.
38. டாக்டர் கே. சௌரிராஜன்.
39. திருமதி. டி. யசோதா.
40. திரு. கே. கல்லன்.
41. திரு. கே. எம். தங்கமணி.
42. திரு. ப. தீர்த்தராமன்.
43. திரு. கே. நாராயணசாமி.

நடுநிலை வகித்தோர்.

1. திரு. பி. முகமது இஸ்மாயில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ளக் கேள்வி: ''பிரிவு 9 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, பிரிவு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற்றது.

[பிற்பகல் 12–40]

பிரிவுகள் 10 முதல் 26 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984) நிறைவேற்றப் பெறவேண்டும்.''





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

136219 சென்னை-600 008.

8. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

24—2—1984 (1) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

(2) அரசினர் தனித்தீர்மானமும், அரசினர் சட்டமுன்வடிவுகளும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

(3) தேவையிருப்பின், பேரவை மாலையில் கூடும்.

பேரவை 24—2—1984 அன்று ஒத்திவைக்கப்பெறும்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு 1984.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

இந்தச் சட்டமுன்வடிவு இங்கே தமிழிலும், ஆங்கிலத்திலும் வைக்கப்பெற்று இருக்கிறது. அதிலே தமிழ் படிவத்திலே ஒரு சிறிய திருத்தம் இருக்கிறது. அதைத் தங்கள் மூலம் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டத்தின் காரண-நோக்க விளக்கத்தில் '' ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு '' என்று இருப்பதற்குப் பதிலாக, '' ஓராண்டில் 9 மாதங்களேனும் '' என்று அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, '' ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு '' என்று அதைத் திருத்திப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

*1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ம் தேதியே தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிக்க பேரவைத் தலை வர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் திருத்த சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தைத் திருத்தி ஆளுநரால் தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் திருத்த அவசரச் சட்டம் அதிகார முறையில் பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டமுன் வடிவே சிலபல மாதங்களுக்கு முன்னாலே அரசு ஆணையின் மூலமாக ஓராண்டிலே 12 வாரங்களுக்கு குறையாத அளவிற்கு தமிழ்நாடு திரையரங்குகளில் தமிழ்ப்படங்கள் காட்டப்பட வேண்டும் என்று உரிமையாளர்களுக்கு கட்டளையிட்டு அரசாங் கம் வழங்கிய ஆணையை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததால், அதற்கு பதிலாக இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப் பட்டுள்ளது.

நான் இந்தச் சட்டமுன்வடிவின் மீது பேசுகின்ற காரணத்தால் ஏதோ எங்களுக்கு தமிழ் உணர்வு இல்லை, தமிழ் உணர்வுக்கு எதிரானது என்ற கருத்து யாருக்கும் ஏற்படாது என்று நான் எண்ணுகிறேன். என்னுடைய வருத்தம் எல்லாம் அரசாங்கம் ஒரு மாதத்திற்கு முன் ஆணை வெளியிட்டு அது உச்சமன்றத்தில் தள்ளாடி தோற்கடிக்கப்பட்டு, இன்றைக்கு அது அவசரச் சட்ட மாக மாறி இங்கே கொண்டு வரப்பட்டுள்ளது. எங்களுடைய கவலை எல்லாம், இந்த சட்டமும் இதற்கு முன்னாலே பிறப்பிக் கப்பட்ட ஆணை எப்படி செல்திறன் ஆகவில்லையோ அதைப் போன்று ஆகிவிடக்கூடாது என்பதுதான். அந்த நல்ல எண்ணத் தின் காரணமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அவையிலே இதற்கு முன்னாலே ஒரு சட்ட முன்வடிவு வந்தபோது சொன்னோம். இப்படிப்பட்ட ஒரு சட்டம் இந்தியா விலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை ; தமிழ்நாட்டிலே தான் வந்திருக்கிறது ; வேறு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்போது இந்த மாதிரியான சட்ட முன்வடிவு வருவது தேவைதானா என்று சொன்னதை இங்கே இப்போது நினைவு படுத்த விரும்புகிறேன்.

ஒன்பது மாதங்களுக்கு மேற்படாத அளவுக்கு திரையரங்கு களில் தமிழ்ப் படம் காட்ட வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் சொல்லபட்டிருக்கிறது. அதன்படி பார்க்கிறபோது சின்ன சின்ன ஊர்களில் இருக்கும் திரையரங்குகளுக்கு பிரச்சினை இல்லை. அதைப்போன்று நகராட்சிகளில் இருக்கும் திரைப்பட கொட்ட கைகளுக்கும் பாதிப்பு ஏற்படாது. ஆனால் சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் இருக்கிற திரைப்பட கொட்டகைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று நாங்கள் கருது கிறோம்,





அதிலும், தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற தமிழ் படங் களுக்கு பாதுகாப்பு கொடுக்க விரும்புகிறீர்கள். அதே நேரத்தில் நீங்கள் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற தமிழ் படங்கள், தமிழ்நாட்டில் மட்டுமல்ல; கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் தமிழர்கள் அதிகமாக இருக் கிறார்கள்; மராட்டிய மாநிலத்தில் பம்பாயில் தமிழர்கள் அதிக மாக இருக்கிறார்கள் ; அவர்கள் எல்லாம் தமிழ் படங்களை பார்க்க விரும்புகிற போது அந்த மாநில அரசுகளும் இம்மாதிரி சட்டம் கொண்டுவந்தால், அதாவது அந்த மாநிலங்களில் தயா தயாரிக்கப்படுகின்ற தமிழ் அல்லாத படங்களை திரைப்பட கொட்டகைகளில் ஒன்பது மாதங்களுக்கு மேற்படாமல் காட்ட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தால், தமிழ் படம் பார்க்க விரும்புகிறவர்களுடைய வாய்ப்பு குறையாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டும் ஒட்டுமொத்தமாக இருக்கிற கொட்டகைகள் எத்தனை ? ஆண்டு ஒன்றுக்கு இங்கே எத்தனை தமிழ் படங்கள் தயாரிக்கப்படுகின்றன ? தயாரிக்கின்ற படங்களிலே எத்தனை படங்கள் அதிக நாள் ஓட தகுதி பெற் றிருக்கின்றன ? எத்தனை பிரின்ட் எடுக்கிறார்கள் என்று பார்க் கும் போது தமிழ்நாட்டிலே இருக்கிற திரைப்பட கொட்டகை களில் ஆண்டு முழுவதும் ஓடக்கூடிய அளவுக்கு இங்கே தமிழ் படம் தயாராகவில்லை ; குறைந்த அளவில்தான் தயாரிக்கப்படு கின்றன. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நம்முடைய அரசாங் கம் இன்னும் நிறைய தமிழ்ப்படங்களைத் தயாரிக்க, நல்ல முறை யில் தயாரிப்பாளர்களை உற்சாகப்படுத்தாலாமே தவிர கட்டா யம் ஒன்பது மாதம் தமிழ்ப் படத்தைக் காட்ட வேண்டுமென்று சட்டம் கொண்டுவருவது சரியல்ல. தயாரிப்பாளர்களுக்கு நல்ல உற்சாகத்தை ஏற்படுத்தி, அதிகமான தமிழ்ப் படங்களைத் தயாரிக் கின்ற முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட வேண்டும். அது அல்லா மல் இப்படிப்பட்ட கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டு வருவது எந்த அளவுக்கு பாதுகாப்பு அளிக்கும் என்று தெரிய வில்லை.

கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே எம். எஸ். சுப்புலட்சுமி பாடுவது பற்றி இங்கே சொன்னார்கள். அந்த அம்மையார் பாடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் 75 சதவீதம் தமிழ் பாடல்களைப் பாட வேண்டுமென்று வற்புறுத்த முடியுமா? அல்லது தமிழ்நாட்டில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். 75 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ள மூலப் பொருள்களைத்தான் நீங்கள் பயன்படுத்த வேண்டு மென்று அவர்களை வற்புறுத்த முடியுமா ? அல்லது இங்கே இருக்கிற ஒரு கடையை எடுத்துக் கொள்ளுங்கள். 75 சதவீதம் தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் விற்பனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்த முடியுமா ? இதெல்லாம் தனிப்பட்டவர் உரிமையை மறுப்பதாகாதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

இப்படிப்பட்ட காரணங்களால் தமிழ்நாட்டில் இருக்கிற தியேட்டர்களில் ஒன்பது மாதங்கள் தமிழ் படம்தான் காட்ட வேண்டும் என்று கட்டுப்படுத்துவது சரியல்ல. அது மட்டுமல்ல; தமிழ்நாட்டில் இருக்கிறவர்கள் ஒன்பது மாதம் தமிழ் படங்களைத் தான் பார்க்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கக்கூடாது. இந்தமாதிரியானச் சட்டம் நீதி மன்றத்திற்குப் போனால் அங்கே செல்திறன் ஆகாமல் போய்விடக்கூடும் ; அந்த நிலை வரக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சென்னையில் பல இந்திப் படங்கள் தயாராகின்றன. இந்தப் படங்களை வட மாநிலங்களிலுள்ளவர்கள் திரையிடக் கூடாது என்று சொன்னால் நம்முடைய நிலைமை என்னவாகும் ? ஒரு தியேட்டர் என்பது பல இலட்சக்கணக்கான ரூபாய் மூலதனம் போட்டு, தொழில் நடத்துகின்ற ஒரு இடம். அந்தத் தொழிலை காக்க வேண்டும். இந்தமாதிரியான சட்டத் திட்டங்களைப் போட்டு மக்களுடைய கலை உணர்வுக்கு, மக்களுடைய பொழுதுபோக்குக்கு அரசாங்கம் தடை விதிக்கக் கூடாது என்பதால் அதற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கிறேன்.

[பிற்பகல் 12-50]

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறது. காரணம், தமிழகத்திலே திரை அரங்குகளில் போடப்படுகின்ற தமிழ்ப் படங்கள் 9 மாதங்களாவது போடப் பட வேண்டும் என்ற ஒரு பிரிவு சட்டத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே வரவேற்கக் கூடிய அம்சம். ஆனால், இதிலே நம்முடைய அமைச்சர் ஆர்.எம்.வீ. ரொம்ப கெட்டிக்காரர் — சட்டம் கொண்டு வருவதிலே மிகவும் கெட்டிக்காரத்தனமாக கொண்டுவந்திருக்கிறார். என்னவென்றால், தமிழ்ப்படங்களை ஆண்டிற்கு 9 மாதங்கள் போட்டே தீர வேண்டும் என்று சொல்லவில்லை. விரும்பினால் போடலாம் விரும்பாவிட்டால், போடாமல் இருக்கலாம். அது அவர்களுடைய விருப்பம். நான் கேட்கிறேன்— தமிழ் மொழியின் மீது பற்றுள்ள ஒரு சர்க்கார், தமிழ்ப் படங்கள் வளரவேண்டுமென்று விரும்பும் ஒரு சர்க்கார், தமிழ்நாட்டினுடைய கலாச்சாரம் சினிமாத் துறையின் மூலம் பிரதிபலிக்க வேண்டுமென்று விரும்பும் இந்த சர்க்கார், 9 மாதங்களுக்குத் தமிழ்ப்படங்கள் போட்டே தீரவேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தால், அதை வரவேற்கலாம். ஆனால், போடுவதும், போடாததும் உங்கள் இஷ்டம் என்ற அர்த்தத்திலே சட்டப் பிரிவிலே ஒரு வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது.

"The Government may, in the interest of the general public in the State of Tamil Nadu who speak mainly Tamil which is the official language of the State, issue directions from time to time to any



class of licensee or to licensees generally to exhibit Tamil films for a period of not more than nine months in a year."

இதிலே என்ன அர்த்தம் ? பட முதலாளிகள் அல்லது படத்தைத் தயாரிப்பவர்கள் திரை அரங்குகளில் 9 மாதங்கள் நீங்கள் போடுங்கள், போடாமலும் இருங்கள். ஆனால் போடுவது நல்லது என்ற விதத்தில் 'மே' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'மே' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'ஷெல்' என்ற வார்த்தையைப் போட்டிருக்க வேண்டும். அதாவது, 'தி கவர்ன்மெண்டு ஷெல்' என்று போட்டிருந்தால், 'ஷெல்'-க்கு டைரக்ஷன்ஸ் என்று உத்தரவு கொடுத்தே தீர வேண்டும் என்றவாசகம் அதிலே பொறிக்கப்பட்டிருக்குமேயானால் 9 மாதங்கள் தமிழ்த் திரைப்படங்களைக் காட்டியே தீர வேண்டிய அவசியம் வந்திருக்கும். ஆனால் போடாமல் இருந்தால் அதைத் தடுக்க முடியாது. தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. அதை வளர்க்க வேண்டுமென்று பாடுபடுகிறோம். தமிழர்களின் நல்லெண்ணங்கருதி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். பிறகு ஏன் 'ஷெல்' என்ற வார்த்தையைப் போடவில்லை ? ஏன் இப்படி இந்த வார்த்தையிலே விளையாடுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். 1965 ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அதிலே பலரும் கலந்துகொண்டோம். அதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், கொண்டுவரப்பட்ட ஆட்சி மொழி சட்ட மசோதாவிலே— 1963 ஆம் ஆண்டில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் ஹோம் மினிஸ்டராக இருந்தார் என்று கருதுகிறேன். இந்த ஆட்சி மொழி சட்ட மசோதாவிலே 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகும் கூட, மத்திய அரசின் காரியங்களுக்காக இந்தியையும், ஆங்கிலத்தையும் தொடர்ந்து பயன்படுத்தலாம்—'மே' என்ற வார்த்தையைப் போடுவதனால் அதன் அர்த்தம் என்ன ? ஆங்கிலத்தை விட்டு, 1965 க்குப் பிறகு இந்தியை ஆட்சி மொழியாகத் தொடரலாம் என்பதற்கு வழி வகுப்பதாக இருக்கிறது. 'மே' என்று இருப்பதால் அந்த 'மே' என்பதற்குப் பதிலாக 'ஷெல்' என்று போட்டால் தான் ஆங்கிலமும் தொடரும். 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை இழந்தார்கள் சாரங்கபாணி, ராஜேந்திரன் ஆகியவர்கள். சின்னசாமியின் மனைவி தமிழ்த்தாயின் நெற்றித் திலகம் அழியக்கூடாது என்பதற்காக தன்னுடைய திலகத்தை அழித்துக்கொண்டாள். மாணவர் சமுதாயத்தினிடையே மாபெரும் போராட்டமே நடைபெற்றது. ஆக நான் கேட்க விரும்புகிறேன், இந்த 'மே', 'ஷெல்' என்ற பிரச்சினைக்கு காரணம் என்னவென்றால், படங்கள் 9 மாதங்கள் போடுவதை வரவேற்கிறதே தவிர, போட்டுத்தான் தீர வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. கட்டாயப்படுத்தாதது ஏமாற்றம் தருகிறது. பட முதலாளிகள், இந்திப் பட விநியோகஸ்தர்கள், திரை அரங்குக்காரர்களை எல்லாம் அழைத்து,

[திரு. அ. ரகுமான்கான்] [1984 பிப்ரவரி 23

பார்த்தீர்களா, 9 மாதங்கள் என்று போட்டால் சிக்கல் வரும்,
என்ன சொல்கிறீர்கள் ? என்று காரியங்களைச் சாதித்துக் கொள்
வதற்காக பயமுறுத்துவதற்காக ஒரு கருவியாக வைத்துக்
கொண்டு இதைத் தங்கச்சுரங்கமாக வைத்திருக்கிறீர்களோ என்ற
ஒரு சந்தேகம் என்னைப்போல் உள்ளவர்களுக்கு எழுகிறது.
ஆகவே, மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே,
தமிழ் ஆட்சிமொழியாக கொண்டு வருகிறோம், அதை வளர்க்
கிறோம் என்று சொல்கிற காரணத்தால் தான் நான் சொல்
கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்விட்ட தியாகி
களுக்கு 150 ரூபாய் தரும் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.
ஆக, இதிலே ஏமாற்று வேலைகள் இருக்கின்றன என்பதை
சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இவைகளை நான் கோடிட்டுக்
காட்டுகிறேன்.

அடுத்து என்னுடைய பாயிண்ட். தமிழ்ப்படங்கள் 9 மாதங்
கள் காட்ட வேண்டும் என்று சொல்கிறீர்கள். அது என்ன கணக்கு?
ஒரு 10 மாதம் என்று ஏன் இருக்கக் கூடாது? அதற்காகத்தான்
நான் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கலை என்
பதிலே கிழக்கு மேற்கு கிடையாது, தெற்கு வடக்கு என்பது
கிடையாது. கேரளாவிலே படம் எடுக்கிறார்கள். மேற்கு
வங்கத்திலே படம் எடுக்கிறார்கள். ஆக, இன்றைக்கு அது
போன்ற படங்களை எல்லாம் பார்க்கவே கூடாது தமிழகத்தில்
உள்ள தமிழர்கள் என்று நான் வாதாடவில்லை. கர்நாடகத்தை
எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கக்கூடிய ராஜ்குமார் தமிழ்ப்
படங்கள் போடவேகூடாது என்கிறார். இன்னும் சொல்லப்
போனால், தமிழ்நாட்டிலே பெங்களூரைச் சேர்ந்த ரஜினிகாந்த்
நடிக்கிறார். அவர்தான் தற்போது கதாநாயகன். (குறுக்கீடு)
பெங்களூரிலே தமிழ்ப்படமே காட்டக்கூடாது என்று ராஜ்குமார்
அங்கே போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்.
தமிழ்ப்பட சூட்டிங்கே நடத்தமுடியாமல் அங்கே அவர்கள்
போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட
சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றன. ஆனால் எங்களைப்
பொறுத்தவரைக்கும் வங்காளப்படத்தை கலை அம்சத்திற்காகவும்
மலையாளப்படத்தை அதன் கருத்துப் புரட்சிக்காகவும் பார்க்க
வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நமது மாநில மொழிப்
படங்களிலும் இத்தகைய கலாச்சாரங்கள், கருத்துக்கள் பிரதி
பலிக்கபடவேண்டும்என்ற காரணத்தால்தான் இந்த மசோதாவை
சட்டமாக்குகிறபோது, 9 மாதம் கட்டாயமாகத் தமிழ்ப்படம்
காட்டவேண்டும் என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என்று
நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, மேற்கு வங்கத்திலே இருக்கக்கூடிய சர்க்கார் ஒரு
சட்டம் போட்டிருக்கிறார்கள். வங்காளப்படம் தான் காட்ட
வேண்டும் என்று ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள். அந்தச்
சட்டத்திலே கூட என்ன போட்டு இருக்கிறார்கள் என்றால்



1984 பிப்ரவரி 23] [திரு. அ. ரகுமான்கான்]

நாட் லெஸ் தேன் 12 வீக்ஸ், அதாவது 12 வாரம் என்று நான் கருதுகிறேன், அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதைப்பின்பற்றி இங்கேயும் நீங்கள் போட்டிருக்கலாம். இதிலே இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்ப்படங்கள் போடுவதற்காக ஏற்பாடு செய்கிறோமே, 9 மாதங்கள் தமிழ்ப்படம் காட்டவேண்டும் என்று செய்கிறோமே, அதற்குத்தகுந்த தமிழ்ப்படங்கள் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளாமல், இன்றைக்கு சினிமாப் படத்துறையிலே 9 மாதங்கள் காட்டவேண்டும் என்று சொன்னால், அது எப்படி சரியாகும். 9 மாதங்கள் தொடர்ந்து தமிழ்ப்படங்கள் காட்டுகின்ற அளவிற்கு இங்கே படம் எடுக்கப்படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ளாமல், இன்றைக்கு இங்கே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியிலே பேசப்பட்டதாக எதையும் இங்கே வந்து நாம் பேசக் கூடாது. (குறுக்கீடு). எனவே உறுப்பினர் திரு ரகுமான்கான் கடைசியாக சொன்னவைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. அ. ரகுமான்கான்: அதை ரெஃபெரென்ஸுக்காகத்தான் சொன்னேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது எல்லாம் நீக்கப்பெற்றாகிவிட்டது; மசோதாவை ஒட்டிப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்..

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, வெளியிலே ஏற்பட்ட பிரச்னையின் காரணமாகத்தானே தினமலர் பத்திரிகை மீது உரிமை பிரச்னை எழுப்பினோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பிரச்னை வேறு, இந்தப் பிரச்னை வேறு. அதைப்பற்றி இப்போது விவாதிக்க வேண்டாம் (குறுக்கீடு).

எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து பேச முற்பட்டால் அவையை எப்படி நடத்த முடியும். எல்லோரும் அவையின் ஒழுங்கைப் பாதுகாக்க தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும். தலைவரின் இருப்பிடத்திற்கே வந்து அவரைச்சுற்றி நின்று பேச முற்படக் கூடாது. தலைவரின் இடத்திற்குரிய மரியாதையைத் தர வேண்டும். உறுப்பினர்களுடைய உரிமைகளுக்குப் பாது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காப்பாக இருப்பார் பேரவைத் தலைவர் என்றால், உறுப்பினர்கள் இந்தச் சேரை மதித்து நடந்து, அதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு)

மற்ற மாநிலங்களில் ஸ்பீகருக்குக்குப் பக்கத்திலே போய் பேச முடியுமா? டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டிலே கூட மாஜிஸ்ட்ரேட் பக்கத்திலே போய் பேச முடியாது. பெஞ்ச் கிளார்க்கிடம் தான் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்ல வேண்டும்.

இங்கே இனிமேல் யார் உட்கார்ந்திருந்தாலும், சபாநாயகராக இருந்தாலும் சரி, துணை சபாநாயகராக இருந்தாலும் சரி, தலைவரின் இடத்திற்கு, போடியத்தின் அருகிலே வந்து யாருமே பேசக் கூடாது. ஏதாவது சொல்லவேண்டுமென்றால் செயலாளரிடத்திலே தான் சொல்ல வேண்டும். இனிமேல் யாருமே தலைவரின் இடத்திற்கு அருகிலே வந்து பேசக்கூடாது. பேசுவதும் மரபு அல்ல.

**திரு. என். எஸ். வ. சித்தன் :** நீங்களும் யாரிடமும் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சில உரிமைகள் சபாநாயகருக்கு இருக்கிறது. உரிமைகள் என்று கூட சொல்ல முடியாது, அதிகாரம் என்று சொல்லலாம்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, நீங்களே சில முடிவுகளை திடீர் திடீர் என்று எடுத்து அவற்றை அறிவிப்புச் செய்வீர்கள்.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி சில நிலைமை திடீர் என்று எழுகிறபோது, முடிவுகளையும் திடீர் என்று எடுக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள்..

**திரு. துரைமுருகன் :** சார் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஏன் தடுக்கிறீர்கள்? அவர் பேசி முடிக்கட்டுமே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் தெரிவிக்கும் கருத்து எதற்கும் இதுவரையில் நீங்கள் ஆதரவு தெரிவித்தது கிடையாது. இப்போதாவது அவரை ஆதரிக்கிறீர்களே, மகிழ்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகே யாருமே வரக்கூடாது என்று தீர்ப்புக் கொடுத்தால், அவையிலே எதுவுமே நடக்க முடியாமல் போய்விடும். பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், அமைதியான முறையில் தங்களுடைய முழு கவனத்தை அவையிலே செலுத்தி, அதை செம்மையாக நடத்த வேண்டும் என்று அவர் விரும்புகிற காரணத்தினால், அவருடைய வேண்டுகோளை ஏற்று யாரும் அவருக்குத் தொல்லை கொடுக்



காமல். அவருடைய அருகிலே போய் நின்று பேசாமல், அவருடைய வேண்டுகோளை, அவரைப் பொருத்தவரைக்கும் கடைப்பிடித்து வருவது நல்லது. அவர் அப்படி விரும்புகிறார். அவரிடம் போய் நின்று கதை அளந்து கொண்டிருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள்.

தேவையானால் அவரிடம் சென்று, அவை நிகழ்ச்சியோடு ஒட்டிய சில வார்த்தைகள் பேசி, சில செய்திகள் சொல்லி, தேவையான நிலைமைகளை தெளிவாககுகிற வகையில், சுருக்கமாக சொல்லிவிட்டு வந்து விடலாமே தவிர, அவர் அருகில் போய் நின்று கொண்டு, நேற்றைக்கு நடந்தது, அதற்கு முன்பு நடந்தது, வெளியே நடந்தது என்று ஒரு ஆண்டுக்கால வரலாற்றையே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது என்பதுதான் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளே தவிர, ரூலிங் அல்ல. அதை அவருடைய வேண்டுகோளாக எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எந்த மாநில சட்டமன்றத்திலேயும் அவைத் தலைவரின் இருக்கையின் அருகாமையிலே போய உறுப்பினர்கள் பேசுகின்ற பழக்கம் கிடையாது. பஞ்சாபிலே இல்லை. அரியானாவிலே இல்லை (குறுக்கீடு) ஜமன்ட் டிஸ்டிராக்ட் ஆகிறது, அதற்காகச் சொல்கிறேன், பேசிக் கொண்டே இருப்பதால் திடீரென்று நேற்று ஒத்திவைத்தேன் என்று வருகிறது. ஆகவேதான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வதிலேயும் பொருள் இருக்கிறது. உறுப்பினர்கள் சொல்வதிலும் பொருள் இருக்கிறது. (குறுக்கீடு) நம்முடைய மாநில அவையைப் பொறுத்தவரையிலும் அணுகவேண்டிய அளவுக்குப் பிரச்சினைகள் இருந்து, அடுத்து நான் பேசுகிறேன் என்பதையோ அல்லது மற்ற நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கோ உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அவையிலே என்ன நடைபெறுகிறது என்பதை துணைத் தலைவர் கவனித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. சில சமயங்களிலே அவருடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுகிறபோது சிலபல நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடுகின்றன. அதனால்தான் அவர்கள் அந்த முறையைக் கையாள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்.

**திரு துரைமுருகன் :** * * * * * *

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நாங்கள் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் என்ன செய்வது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** செயலாளரிடம் கேட்டுக் கொள்ளலாம் (குறுக்கீடு) உங்களுடைய கொறடா மூலமாக அணுகலாம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. துரைமுருகன் :** * * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது எல்லாம் நீக்கப்படுகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் ரசிகர்களாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிற அளவுக்கு இங்கே நட்சத்திரங்கள் யாரும் இல்லை. * * * * * * பலர் வடநாட்டிற்கு இந்திப் படவுலகத்திலே நடிக்கப்போனால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் இங்கே தமிழ் படங்களுக்கு 9 மாதங்கள் கால்ஷீட் கொடுக்கவேண்டுமென்று சட்டம் போடமுடியுமா ? முடியாது. * * * * ஆகவே, 9 மாதங்கள் தமிழ்ப்படங்கள் காட்ட வேண்டும் என்பதை வரவேற்கிறோம். பெரும்பான்மையான காலத்திற்குத் தமிழ்ப்படங்களைப் பார்க்க வேண்டிய நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்படும். அப்படியானால் தமிழ்ப்படங்கள் எப்படி இருக்க வேண்டும். தமிழ்ப்படங்கள் பார்ப்பதே தண்டனையாக இருக்கக்கூடாது. சிறப்பாக கதையம்சத்தினாலும், ஆபாசம் இல்லாத முறையிலும் சமுதாயத்தின் பிரதிபலிப்பாகவும் இருக்க வேண்டும். இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ்.ஆர். இருக்கிறார். அவர் நடித்த சிவகங்கைச் சீமை படத்தை நான் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த காலத்திலே பார்த்தேன், தென்பாண்டிச் சீமைக்கே போய் தென்பாண்டி வீரமறவர்களை கண்முன்னாலே பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட திரைப்படங்கள் எடுக்கப்படுவது உண்டா ? சிவாஜி அவர்கள் பல படங்களிலே சிறப்பாக நடித்திருக்கிறார். ஜெமினிகணேசன் அவர்கள் பல படங்களிலே சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இப்போது, கதை அம்சங்களிலும் மற்ற அம்சங்களிலும் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகளை நீங்கள் பார்த்தால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே * * * * * என்ற அளவுக்குப் பேசுகிறேன் என்று கருதாதீர்கள். தமிழ்ப் படங்களை 9 மாதங்கள் பார்க்கக்கூடிய மக்கள் சார்பாக நான் சொல்கிறேன். அவ்வளவு வேதனைத் தரத்தக்க அளவுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

** ** **

[பிற்பகல் 1-10]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் ஒரு சட்ட முன்வடிவை விவாதித்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர். அந்தப்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பொறுப்பு வாய்ந்த கட்சியின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள் என்று நாம் எல்லாம் கவனத்தோடு கவலையோடு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர் இங்கே இந்தச் சட்ட முன் வடிவின் மீது ஏதாவது விவரங்கள் தரப்போகிற ர்களா? விளக் கங்கள் தரப்போகிறார்களா? திருத்தங்கள் தரப்போகிறார் ள ? என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அவர் ஏதோ ** நடத்துவது போல் நம்மை எல்லாம் உட்கார வைத்துக் கொண்டு பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதை நான் அருள் கூர்ந்து கேட்க விரும்புகிறேன் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்கள் கடைசியாகப் பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன். இந்தச் சட்டமுன் வடிவின் மீது மட்டும் அவர் பேச வேண்டும்.

**திரு. டி. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** அது இருக்க வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ** ** செய்கிறேனா இல் லையா என்பது குறித்து வெளியே இருக்கக்கூடிய மக்கள் தீர்ப்பு வழங்கட்டும். திறமை வாய்ந்த நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த சட்டத்தின் அடிப்படையில் இந்த சட்டத்தின் காரண நோக்க விளக்கமே அரை பாராவில்தான் இருக்கிறது. ஏதோ இதிலே பெரிய சட்டச்சிக்கல்கள் இருப்பது போலவும் மிகப்பெரிய விளக்கங்கள் இருந்து திரு. பல்கிவாலா போன்றவர்கள் விவா திக்க வேண்டும் என்பது போலவும் என்ன அப்படிப்பட்ட பாயிண்டு இந்த சட்டத்தில் இருக்கிறது. ஒரே ஒரு பாயிண்டு இருக் கிறது. 9 மாதங்கள் தமிழ்ப்படங்கள் காட்டப்பட வேண்டும். அதைப்பற்றி நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். '' ஷெல் '' என்று இருந்தால் கட்டாய ாகப் போட்டுத் தீரவேண்டும். ஆனால் '' மே '' என்று போட்டு இருக்கிறீர்கள். இப்படிப் போட்டு இருப் பதால் காட்டவும் செய்யலாம், காட்டாமலும் இருக்கலாம். நீங்கள் அதைச் செய்யவில்லை என்று முதலிலேயே பேசிவிட்டேன். இரண்டாவது 9 மாதங்கள் தமிழ் படம் பார்க்கவேண்டிய நிலை வருகிறபோது தமிழ் படம் பெரும்பான்மையான காலம் காட் டப்பெறவேண்டும். இந்தி படம், ஆங்கிலப் படம் காட்டக் கூடாது என்பது அல்ல. பெரும்பான்மையான படங்கள் தமிழ் படங்கள் என்றால் அவைகள் தகுதியோடு தரமுள்ளவையாக இருக்க வேண்டாமா ? என்ற கருத்தையும் அதற்கு அரசு நட வடிக்கை எடுக்க வேண்டாமா என்பதையும் சொல்கிறபோது இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழ் படத்தின் நிலையை சிவகங்கைச்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சீமை படத்தை நானே பாராட்டியிருக்கிறேன். அதைப் போலவே தவறானவற்றை சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை யாகும். நான் ஏன் சொல்கிறேன் என்றால் ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசியாகப் பேசியதை யெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திர விடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அதை ஏன் நீக்க வேண்டும் ? நான் ஒத்துக்கொள்ள முடியாது. திரைப்படங்கள் தரமுள்ளவை யாக இருக்க வேண்டும் என்று சொல்வதில் என்ன தப்பு ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மானியக் கோரிக்கை விவாதம் அல்ல. இது ஒரு சட்டமுன்வடிவு. இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டித்தான் பேச வேண்டும். (குறுக்கீடு). பேசுவதற்கு உரிமை இருக்கிறது. இல்லையென்று சொல்ல வில்லை. நீங்கள் மசோதா மீது பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அந்த மசோதாவின் மெரிட்ஸ், டிமெரிட்ஸ் பற்றி மட்டும் பேசி விட்டு அமர வேண்டும். மசோதாவுக்குப் புறம்பாகக் கடைசி யில் பேசியதெல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : தமிழ்ப்படங்கள் ஆபாசமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன் ; விதிக்கு உட்பட்டுத்தான் பேசுகிறேன்.

Mr. DEPUTY SPEAKER : The Tamil Nadu Legislative Rule 149—Scope of debate :

''The discussion on a motion that the Bill or the Bill as amended, as the case may be, be passed shall be confined to the submission or arguments either in support of the Bill or for the rejection of the bill. In making his spe ch a member shall not refer to the details of the Bill further than is necessary for the purpose of his arguments which shall be of a general character'' என்று விளக்கமாக இருக்கிறதே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மசோதாவில் உள்ள கருத்துக்களைப்பற்றி மட்டும்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டுமே தவிர மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வெளியே சொன்ன கருத்துக்களுக்கு, வெளியே என்ன முறையில் வேண்டு மானாலும் பதில் சொல்லிக்கொள்ளலாம். வெளியே சொன்ன ஒரு கருத்துக்கு விளக்கம் தருவதற்கோ, மறுப்பு தெரிவிப்பதற்கோ இந்தச் சட்டமன்ற அவையைப் பயன்படுத்த வேண்டாம். அதைப்பற்றி வெளியே தாராளமாகச் சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வெளியே சொன்ன ஒரு கருத்துக்கு இந்தச் சட்ட முன் வடிவின் மீது பேசுகின்றபொழுது கருத்து சொல்வது என்பது அனுபவம் மிக்க உறுப்பினருக்கு அழகு அல்ல.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. துரைமுருகன் : **பற்றிச் சொன்ன கருத்துக்களை வேண்டுமானால் அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடலாம். மற்றபடி தரமான படங்கள் வர வேண்டும். சின்னப்பிள்ளை கள் பெரிய பிள்ளைகளைப் போலப் பேசுவதுபோன்ற காட்சிகள் வருகின்றன என்பது போன்ற கருத்துக்கள் அவைக் குறிப்பில் இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கடைசியாக ** பற்றிப் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் ; ஒன்பது மாதங்கள் தமிழ்ப் படங் களைக் கட்டாயம் காட்டவேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில் தமிழ்ப் படங்கள் எப்படியிருக்கின்றன ? ''பிலிமோத்சவ்'' என்று ஒரு விழா பம்பாயில் நடந்தது. இந்தியா அதை நடத்தியது. அதில் சுமார் நாற்பது நாடுகள் கலந்து கொண்டன : 200 படங்கள் அதில் திரையிடப்பட்டன ; அதில் 20 இந்தியப் படங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனால் என்ன நிலைமை என்று கேட்டால் மொத்தத்தில் இந்தப் படங்களின் தேர்வுக் குழுவிற்குத் தென்னிந்தியாவிற்குக் கேரளாவைச் சேர்ந்தவர்தான் ரெப்ர சன்டேட்டிவ்வாக இருந்தார். தென்னிந்தியா என்றால் ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சேர்ந்தது தான் என்பதால் அதில் கருத்து வித்தியாசமில்லை. ஆனால் இவ்வளவு படங்களில், நம்முடைய தமிழ்ப்படம் ஒரு படம்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கேரளா படம் ஆறு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் இங்கே உள்ள மற்றப் படங்களெல்லாம் மோசமானவைகளா ? இங்கே உள்ள படங்களில் ஆபாசம் இருக்கிறது என்று சொன்னால் கோபப் படுகின்றீர்கள்.

இங்கே திறமையான பல நடிகர்கள் இருந்தார்கள். நல்ல கதையம்சத்தோடு கூடிய படங்களில் நடித்தார்கள் நம்முடைய முதல்வர் உள்பட. ஆனால் இன்றைக்கு அவர்களைப் போன்றவர் கள் இருக்கிறார்களா ? சிவாஜி போன்றவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். மற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த விழாவிற்கு நீங்கள் அனுப்பியது எத்தனை படங்களை? அந்த விழாவிற்கு எத்தனை படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன? இதற்குக் காரணம் என்ன ? இதைப் பற்றிக் கண்டித்தீர்களா?

ஸ்ரீதேவிக்குப் பட்டம் கிடைக்கவில்லை என்று வேதனைப் படுகிறோம். அந்த ஸ்ரீதேவியின் மீது காட்டுகின்ற அக்கறை இந்தத் தமிழ்ப் படங்களின் மீது காட்டியிருக்கிறீர்களா ? இப் படித் தேவையானவற்றைப் பற்றி அக்கறை இல்லை, தேவை யற்றவைகளைப் பற்றி அக்கறை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

ஒன்பது மாதங்கள் தமிழ்ப் படங்களைப் போடலாம், போடா
மலும் இருக்கலாம் என்று இருப்பது தப்பு. போட்டே தீர
வேண்டுமென்று சொன்னால் அதைப் பாராட்டத் தயாராக
இருக்கிறேன்.

(பிற்பகல் 1—20)

**திரு. நா. சுந்தரராஜு:** துணைத் தலைவர் அவர்களே
பாயிண்ட் ஆஃப் ஆர்டர். காலையிலேதான் தினமலர் பத்திரிகை
யில் ** வெளியிடப்பெற்ற கேலிச் சித்திரம் பற்றி கொடுக்கப்
பெற்ற உரிமைப் பிரச்சினை பற்றி விவாதித்தோம். இப்போது
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது **
என்று சொல்கிறார்கள். இதெல்லாம் சபைக் குறிப்பிலே இருக்க
லாமா ?......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையெல்லாம்
அவைக் குறிப்பிலே இருந்து ஏற்கனவே நீக்கப்பெற்றுவிட்டன.
எனவே, நீக்கப் பெற்றவைகளைத் திரும்பவும் குறிப்பிடாதீர்கள்.
தற்போது தாங்கள் குறிப்பிட்டதும் நீக்கப் பெறுகிறது.

**திரு. செ. செம்மலை:** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்
அவர்களால் இங்கே திரைப்படங்களை முறைப்படுத்துகின்ற
சட்டத்தை மேலும் திருத்துகின்ற வகையிலே கொண்டுவரப்பட்ட
சட்ட முன்வடிவினை வரவேற்று ஒருசில கருத்துக்களை நான்
சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே உள்ள ஆட்சி
மொழியான தமிழ் மொழியினைப் பேசும் தமிழ் மக்களின் நல
னிலே அக்கறை கொண்டு இந்த மாநிலத்திலே உள்ள வருடத்
திற்கு 9 மாதங்களுக்கு அதிகப்படாமல் தமிழ் திரைப்படங்களைத்
திரையிட வேண்டியது அவசியம் என்ற அவசரச் சட்டம் அதிகார
முறைப்படி பிறப்பிக்கப்பட்டபின் இன்றைய தினம் இந்தச்
சட்ட முன்வடிவு இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டி
ருக்கின்றது.

எனவே, இந்தச் சட்ட முன்வடிவினைப் பற்றிப் பேசுவதற்கு
முன்பாக நான் இங்கே ஒரு கருத்தை இந்த மன்றத்திற்குத் தெரி
விக்க விரும்புகிறேன். இந்த சட்ட முன்வடிவினைப் பொறுத்த
வரையில் ஒரு நல்ல நோக்கத்தோடு, நியாயமான காரணங்க
ளோடு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றது. எனவே, இதற்கு
உள்நோக்கம் கற்பிக்க முயல்வதோ அல்லது வேறு விதத்தில்
விமர்சனம் செய்வதோ என்பது நம்முடைய மொழிக்கு நன்மை
செய்வதாக ஆகாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், இந்தச் சட்டம் நீதிமன்றத்
திற்குச் சென்றால் செல்லுபடியாகுமா என்ற விவாதத்தை வைத்
தார்கள். அவருக்கு நான் பணிவாக ஒன்றைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இங்கே இந்த சட்டமன்றத்திலே பேசு
வதன் மூலம் வெளியே இருப்பவர்களைத் தூண்டிவிட்டு அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.





அதன் காரணமாக நீதி மன்றத்திற்குச் செல்கின்ற ஒரு
நிலைமையை தயவு செய்து ஏற்படுத்த வேண்டாம் என்று
கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்துவது நல்லதல்ல
என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே போல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரகுமான்கான் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். அதாவது
தமிழ் திரைப்படங்கள் திரையிடப்பட வேண்டும் என்று சொல்
வதை ஆட்சேபிக்கவில்லை ; ஆனால் தரமான திரைப்படங்கள்
வர வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொல்வது எல்லாம்
தரமான திரைப்படங்கள் வர வேண்டும் என்றால், மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் போன்றவர்கள் எதை ஆபாசம்
என்று சொல்கிறார்களோ. அந்தப் படங்களை அவரைப் போன்ற
வர்கள் சென்று பார்க்காமல் இருந்தாலே, திரைப்பட உரிமை
யாளர்கள் தரமான திரைப் படங்களைத் தயாரிப்பார்கள் என்
பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கேயும் இப்படிப்
பேசிவிட்டு அங்கே போய் முதல் ஆளாக டிக்கெட் வாங்குபவர்
களாக இருப்பது, அதுவும் அவரைப் போன்றவர்கள் இருப்பது
இப்படிப்பட்ட படங்களை ஊக்குவிப்பதாக அமையும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் இரண்டு
கோணங்களில் நாம் அணுக வேண்டும். ஒன்று, இதை நாம்
சினிமாத் துறை என்று சொன்னாலும் இது ஒரு பெரிய மேஜர்
இண்டஸ்ட்ரி. எப்படி மேஜர் தொழிற்சாலைகளிலே ஆயிரக்
கணக்கான பேர் வேலை செய்கிறார்களோ, எப்படி சிறிய
தொழிற்சாலைகளில் நூற்றுக் கணக்கான பேர் வேலை செய்
கிறார்களோ அதே போன்று சினிமாத் துறையும் ஒரு பெரிய
மேஜர் இண்டஸ்ட்ரி. இதிலே இலட்சக்கணக்கான தொழிலாளர்
கள் வேலை செய்வதை நாம் மறுக்க முடியாது. லைட் பாயி-
லிருந்து பெரிய டெக்னீஷியன்கள் வரையில் இலட்சக்கணக்கான
தொழிலாளர்கள் இந்தத் தொழிலைத் தான் நம்பி இருக்கிறார்
கள் என்பதை நாம் உணர வேண்டும். இப்படிப்பட்ட சட்டத்தின்
மூலம் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க முடியும் என்பதை
நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக மௌண்ட் ரோட்டிலே நான் தியேட்டரை
வைத்திருப்பேன், அங்கே வருடத்திற்கு இரண்டு ஆங்கிலப்
படங்களைப் போட்டு அவுஸ்ஃபுல் ஷோ நடத்தி வருமானம்
எடுப்பேன் என்றால் ஒவ்வொரு திரைப்பட உரிமையாளர்களுக்கும்
டிஸ்ட்ரிபூட்டர்களுக்கும் பணம் வந்துவிடும். அவர்களும்
லாபத்தைச் சம்பாதித்து விடுவார்கள். திரைப்படத்தை ஓட்டு
கின்ற தியேட்டர் உரிமையாளர்கள் பணத்தைச் சம்பாதித்து
விடுவார்கள். அரசாங்கத்திற்கும் என்டர்டெயின்மென்ட் டாக்ஸ்
மூலம் வருமானம் வரும். ஆனால் நான் ஏற்கனவே சொன்ன,
தமிழ்ப்பட உலகில் இருக்கின்ற இலட்சக்கணக்கான தொழி
லாளர்களுக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது ? இதை ஊக்கு
விப்பதன் மூலம் அவர்களுடைய நலன் பாதிக்கப்படுகின்றது,

[திரு. செ. செம்மலை] [1984 பிப்ரவரி 23

எனவே, அதைத் தடுத்து நிறுத்திக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற வகையிலே அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது அரசினுடைய கடமை என்ற முறையில்தான் இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து மொழி உணர்வு. தமிழ்நாட்டிலே தாய் மொழி தமிழ். இன்றைக்கு அது ஆட்சி மொழியாக இருக்கின்றது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலைமையை நாம் உருவாககி இருக்கின்றோம். இப்போது கடைகளிலே கூட பெயர்பலகைகளை தமிழிலே வைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அரசின் ஆணைகள் தமிழிலே இருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதிகாரிகளின் கையெழுத்துக்கூட தமிழிலே இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறோம்? தமிழ் மொழியை வளர்க்க வேண்டும். தமிழ்நாட்டிலே தமிழ் மக்களுக்குத் தமிழ் உணர்வை வளர்க்க வேண்டுமென்ற அடிப் படையிலே நாம் கொண்டு வந்திருக்கிற நடவடிக்கை இது என் பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும்.

அதே போல திரைப்பட அரங்குகளுடைய உரிமையாளர்கள் நான் 365 நாட்களும் வேறு மொழி படங்களைப் போடுவேன். ஆனால் நான் தமிழ்ப் பற்று உடையவன் என்று சொல்வாரே யானால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பாலுக் கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற அடிப்படையில்தான் அந்த வாதம் அமையும். எனவே, தமிழ் மொழிக்கு ஆபத்து வெளியிலே இருந்து வருவதை விட நம்மவர்களாலே, நம்மாலே வந்து விடக்கூடாது என்பதற்குத்தான் இப்படிப்பட்ட சட்டங் கள் தேவைப்படுகின்றன என்பதையும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது வேறு மாநில பரிசுச் சீட்டுகளை நாம் விற்கிற பொழுது நம்முடைய பணம், நம்முடைய நிதி, பொது மக்கள் பணம், வேறு மாநிலங்களுக்குச் செல்கின்றன. அதைக் கட்டுப் படுத்த வேண்டும், அதைத் தடை செய்ய வேண்டுமென்று நாம் ஒட்டுமொத்தமாக, ஒருமித்த குரல் கொடுக்கும்போது இப்படிப் பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தால், உள்நோக்கம் கொண்டு காரண காரியமில்லாமல் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை மட்டும் நம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அதிலே ஒரு சந்தேகம் கிளப்பினார்கள், மற்ற படங்கள் பாதிக்கப்படாதா? மற்ற படங்களுக்கு வாய்ப்பில்லையா, என்று. அமைச்சர் அவர்கள் தெளிவாக இதிலே சொல்லி யிருக்கிறார்கள். மீதி நாட்களிலே மற்ற மொழிப் படங்களைப் பார்க்கவோ, திரை யிடவோ எந்தவிதத்தடையும் இல்லை என்று. எனவே, இது சட்டப்படி செல்லத்தக்கது, தேவையான சட்டம் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையில் அந்தத் துறையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான சட்டம், நிரந்தரமாக வேலை வாய்ப்பு



1984 பிப்ரவரி 23] [திரு. செ. செம்மலை]

அளிக்கக் கூடிய சட்டம். அதே போல் தமிழ்நாட்டிலே வாழ் கின்ற தமிழ்மக்களுக்கு மொழி உணர்வை இன உணர்வை ஊட்டு கின்ற சட்டம் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன் வடிவை நான் வரவேற்று, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 2-00 மணி வரை அவையை நடத்தி, இச்சட்ட முன்வடிவை முடித்துவிட லாம்.

**திரு. என். சங்கரய்யா :** காலையிலே, பி.ஏ.சியிலே நாளைக்கு மாலையும் கூடுவதற்கும் உடன்பட்டிருக்கிறோம். நேற்று மாலை 4 மணி நேரத்திற்கு மேல் கூடியிருக்கிறோம். ஆகவே திடீரென்று ஏற்படுகின்ற நிலைமைகளுக்கு இப்படி எங்களால் ஒத்துக் கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 24 —2 —1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

89. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1981ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

90. தமிழ்நாடு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956] 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

91. 1980—81 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தின் வருடாந்திர கணக்குகளின் அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

92. 1980—81 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

93. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

94. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான முப்பத்திமூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

### ஆ அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

18. கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்ற மேலவை 28–8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது.)

30–6–1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்.

1. திரு. ஜி. சுவாமிநாதன்

31–3–1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்.

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)
2. திரு. ஏ. ஆர். தாமோதரன்
3. திரு. ஜி. சுவாமிநாதன் (30–6–1983 ஆம் தேதியன்று உள்ளவாறு.)
4. மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம் (மேலவைத் தலைவர்)

31–3–1983 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்தவர்கள். —

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)
2. திரு. ஜே. எம். மியாகான்
3. திரு. கே. அருணாசலம்
4. திரு. ப. மாணிக்கம்
5. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
6. திரு. ஈ. வி. ஏ. வள்ளிமுத்து
7. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
8. திரு. பி. ஆர். தாமஸ்
9. திரு. வி.வி.வி. ஆனந்தம்
10. மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் (மேலவைத் தலைவர்)